வெளியீடு—௨௯௮

போரும் மக்கள் வரலாறும்

விளக்கப்படங்களுடன்

•

போர்களின் காரணங்களும் அவைகளின் வரலாறுகளும் அவற்றை ஒழிக்க முடியுமா என்ற ஆராய்ச்சியும் அடங்கியுள்ளன

•

ஆசிரியர் :

ஜே. எஸ். பொன்னையா,

எம். ஏ.,

கழக வெளியீடு—உகூஅ

போரும் மக்கள் வரலாறும்

★

மதுரை அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பேராசிரியர்
ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ.,
அவர்கள் எழுதியது.

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை

First Edition March, 1941
Second Edition April, 1945

Published by :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI, & MADRAS.

September, *1945*

The T. V. C. Press, Madras, Q.H. MS 95-B, 1600-C.

முகவுரை

மக்கள் வாழ்க்கையிற் பெரு நிகழ்ச்சியாக விளங்கி வருவது போர். ஆயினும் அந்நிகழ்ச்சியை ஆராய்ச்சி முறையிற் கற்று, அதனாற் பெறப்படும் உண்மைகளைத் தெரிந்து, அவற்றைத் தம் வாழ்க்கையில் அமைத்துக் காட்ட மக்கள் இன்னும் பெரு முயற்சி செய்யவில்லை.

மலேரியா, காலரா, பிளேக் முதலிய பெருவாரியான நோய்களைப்பற்றித் தற்கால மருத்துவ வல்லுநர் ஆராய்ச்சி செய்து, அவற்றின் காரணங்களையும் அவை பரவாமல் தடுப்பதற்குரிய முறைகளையும் கண்டறிந்திருக்கிறார்கள். அம்முறைகளை மக்கள் கைக்கொண்டு வரும்படி ஒவ்வொரு நாட்டு அரசியலாரும் பற்பல ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இங்ஙனமே, போராகிய நோயைப்பற்றியும் அறிஞர்கள் ஆராய்ந்து, உரிய காரணங்களுடன் அதன் உண்மைகளை விளக்கி, அது பரவாதிருப்பதற்குரிய ஏற்பாடுகளை அரசினர் வாயிலாகச் செய்தால் உலகத்திற் போர்கள் ஒழியும் என்பது இந்நூலின் கருத்து.

புதிய புதிய துறைகளிற் புதிய புதிய நூல்கள் பலவற்றை வெளியிட்டுத் தமிழுக்குப் பெரும் பணி செய்து வரும் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், இவ்வரிய பொருளின்மேல் இந்நூலை எழுதும்படி என்னைத் தூண்டி என்னையும் இப்பணியில் ஈடுபடுத்தினதற்காக என் அன்பார்ந்த நன்றியை அவர்கட்கு இதன் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதுரை,
25-2-41.

ஜே. எஸ். பொன்னையா.

பொருளடக்கம்

படங்கள்

போரும்
மக்கள் வரலாறும்

---

1. வாழ்க்கையும் போரும்

போர் இவ்வுலகத்தின் இயற்கை விதி. அஃதில்லையேல், வலிமை குறைந்தவை அழிந்தும் வலிமை நிறைந்தவை பெருகியும் இங்ஙனமாக உயிர் வளர்ச்சி ஓங்காதென்பது மேனாட்டு அறிஞர் ஒரு சிலருடைய கோட்பாடு.[1]

தற்கால அரக்கனான இட்லர், 'கருணை யென்பது மடமையும் பேடித்தன்மையுமே ; இடைவிடாது போர் புரிபவர் உயர்வெய்துவர் ; நிலையான அமைதியில் வாழ்பவர் அழிவுறுவர் ; எனக் கூறுகின்றார்.[2]

'மற்றத் தேசங்களை வௌவும் தேசமே நாகரிகத்திற் சிறந்த தேசம்' என்பது ஒரு செர்மன் மெய்யுணர்வுக் கலைஞரின் கூற்று.[3]

இத்தலி தேசத்து ஆட்சியாளரான முசோலினி என்பவர், தமது பேசிசக்[1] கட்சியார் 'உலகத்தில் அமைதியை எதிர்பார்ப்பதுமில்லை ; அதை விரும்புவதுமில்லை' எனப் பறை சாற்றுகிறார்.[4]

'அமைதி என்பது எட்டாப் பழம். அதற்காகக் கொட்டாவி விடுவது முட்டாள் தனம்' என்பது பெயின்[2] தேசத்து அறிஞர் ஒருவரின் முடிபு.[5]

போர் இவ்வுலகத்தின் இயற்கை விதியா அன்றா என்பதுபற்றிப் பின்னர் ஆராய்வோம். ஆனால் மக்கள்

---

1. Fascist. 2. Spain.

வரலாற்றின் தொடக்கத்திலிருந்து இன்றுவரையில் போர் நிகழ்ச்சிகள் நிரம்பிக்கிடக்கின்றன என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

> "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
> புதுவ தன்றுஇவ் வுலகத் தியற்கை"

என்பது புறநானூறு [76].

இற்றைக்குச் சற்றேறக்குறைய 35,000 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவின் நடுப்பாகத்தில் நியாந்தர்தேலர்[1] என்னும் ஒருவகை மக்கள் தோன்றியிருந்தனர் என்றும், இவர்கள் மிகவும் நாகரிகமில்லா நிலையில் வாழ்ந்து வந்தனர் என்றும், இவர்களுக்குப் பின் ரொடீசியர்[2] என்னும் வேறொரு வகுப்பினர் தோன்றி, நியாந்தர்தேலர் வகுப்பினரை முற்றிலும் அழித்துவிட்டனர் என்றும், போரினால் வலுக்குறைந்தவை அழிந்தும் வலுநிறைந்தவை பெருகியும் வருவதற்கு இப்பழைய வரலாற்று நிகழ்ச்சி ஓர் எடுத்துக் காட்டு என்றும் ஆசிரியர் வெல்சு[3] விளக்கிக் காட்டுகின்றனர்.[6]

இது போன்ற வேறு நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டுகளாகத் தரப்படுகின்றன. அவற்றில் ஒன்று பின்வருமாறு:—பண்டைக் காலத்து அநாகரிக மில்லாத மக்களின் காலத்துக்குப்பின் சின்னஆசியா, மெசொப்பொத்தேமியா, சுமேரியா, எகுபதி[4] முதலான பாகங்களில் செமிட்டிக்[5] வகுப்பினர் வாழ்ந்து வந்தனர். சில ஆயிர ஆண்டுகளுக்குப் பின் அவர்களிலும் வலுவுள்ள ஆரியர்[6] எழும்பி, அவர்களுடன்

---

1. Neanderthaler. 2. Rhodesian. 3. Wells, H. G.
4. Egypt. 5. Semitic. 6. Aryans.

போர் புரிந்து, அவர்களை வென்றனர். இவ்வாரிய ருடைய படையெடுப்புக்குப்பின் இப்பாகங்களின் நாகரிகம் முன்னிலும் மிகுதியாகப் பெருகி வளர்ந்தது என்பர்.

அதன்பின் கி. பி. மூன்றும் நூற்றுண்டுக்கும், ஐந்தாம் நூற்றுண்டுக்கும் இடையில் **டியூட்டானிக்**[1] வகுப்பைச் சேர்ந்த மக்கள் உரோம அரசைத் தாக்கி அதனை அழித்து அதன் ஒவ்வொரு பாகத்திலும் தனிப் பட்ட சிறு சிறு அரசுகளை ஏற்படுத்தினர். இப்போர் நிகழ்ச்சிகளின் பயனுகவே இங்கிலாந்து, பிரான்சு, செர்மனி முதலிய தற்கால நாடுகள் தோன்றின. இந் நாடுகளே ஐரோப்பிய நாகரிக வளர்ச்சிக்குக் காரணம் எனவும் எடுத்துக் காட்டுகின்றனர்.

மேற்காட்டியவை போன்ற காட்டுகளை ஒவ் வொரு நாட்டின் வரலாற்றிலு மிருந்தும் எடுத்துக் காட்டலாம். நம் நாட்டில் முதன்முதலாக வாழ்ந்த வர்களெனக் கருதப்படும் **பளியர், தோடர்,** [2]**கோண்டு** முதலானோரிற் பெரும்பாலாரை அவர்களுக்குப் பின் எழும்பிய **திராவிடர்** அழித்தனர். வட இந்தியாவில் வாழ்ந்து வந்த திராவிடரை அவர்களுக்குப் பின் வந்த **ஆரியர்** வென்றனர். இதன்பின் வட இந்தி யாவின்மேல் ஒருவர் பின் ஒருவராய்ப் படையெடுத்த [3]**பாக்டிரியர்** [4]**சாக்கியர்** [5]**ஹுணர்** [6]**அரபியர்** [7]**மங்கோலியர்** முதலாயினோர் ஒவ்வொருவரும் தமக்கு முன் புகுந்த மக்களோடு பொருது தத்தம் ஆட்சியை நிறுவினர். இறுதியாக, ஐரோப்பிய நாடுகளிலுள்ள [8]**போர்த்துக் கேசியரும், டச்சுக்காரரும், பிரஞ்சுக்காரரும், ஆங்கிலேய**

---

1. Teutonic. 2. Ghonds. 3. Bactrians. 4. Sakas. 5. Huns. 6. Arads. 7. Mongols or Mughals. 8. Portuguese.

ரும் இந்தியாவுக்குட் புகுந்தனர்; முதலில் இவர்களுள் ஒருவருக்கொருவர் போர் நடந்தது. முடிவில் ஆங்கிலேயர் வெற்றிபெற்று இந்நாடு முழுவதையும் கைப்பற்றித் தம் ஆட்சியை நிறுவியுள்ளனர்.

இந்தியாவைப்பற்றிக் கூறப்பட்ட போர் நிகழ்ச்சிகளைப் போன்றவை ஒவ்வொரு நாட்டின் வரலாற்றிலும் காணக்கிடக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாய் விவரிக்க வேண்டியதில்லை. ஆனால், கடந்த சில நூற்றாண்டுகளாக ஐரோப்பாக் கண்டத்தின் எல்லா நாடுகளிலும் மிகப் பெரிய போர்கள் பல நிகழ்ந்தமையாலும், அவற்றின் விளைவுகளால் உலகப் பொருளாதார அரசியல் வாழ்க்கை முழுவதும் மாறியிருப்பதனாலும் அவைபற்றிச் சிறிது கூறுவது கட்டாயம்.

கிறித்துவுக்குப் பின் பதினைந்து நூற்றாண்டுகளாக ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பெரும்பாலும் அமைதியே குடிகொண்டிருந்தது. ஏனெனில், கிறித்துவ சமய விதிப்படி ஐரோப்பிய மக்கள் தம்மை ஒரு குடும்பத்தினராகக் கருதி ஒழுகி வந்தனர். இங்ஙன மிருக்கையில் 1453-ஆம் ஆண்டில் ஐரோப்பிய வணிகத்துக்கும், ஆட்சிக்கும் இலக்காகவும், துறைமுகமாகவும் விளங்கிய [1]கான்ஸ்டான்டிநோபிள் என்னும் நகர் துருக்கியர் கையில் விழுந்தது. இத்துருக்கியர் கீழ்நாட்டு வணிகப் பொருள்கள் முன்போல் மேல்நாடுகளுக்குச் செல்லவொட்டாதபடி மிகுந்த வரிகளை இட்டுத் தடுத்தனர். ஆதலால் கீழ்நாடுகளுக்குச் செல்லத்தக்க கடல்வழி யொன்றைக் கண்டறிய எல்லா ஐரோப்பியரும் முயன்றனர்.

---

1. Constantinople.

இம்முயற்சியின் பயனாகப் போர்த்துக்கேசியர் 1498-ல் ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சுற்றி இந்தியாவுக்கு வந்து சேர்ந்தனர். இந்திய வணிகமும், அதன் பெருத்த ஊதியமும் அவர்களின் தனி உரிமையாயிற்று. போர்த்துக்கேசியரைப் போலப் [1]பானியர்களுக்கும் ஒரு பேறு கிடைத்தது. அஃது அவர்கள் 1492-ல் அமெரிக்காக் கண்டத்தைக் கண்டறிந்ததாகும். இதன் பயனாக அக்கண்டம் முழுவதிலும் அவர்கள் ஆட்சி நிறுவப்பட்டது. அங்கிருந்து அளவிறந்த பொன்னும் வெள்ளியும் கொண்டுவரப்பட்டன.

போர்த்துக்கேசியருடைய வணிகச் செல்வமும் பானியருடைய ஆட்சிச் செல்வமும் மற்ற ஐரோப்பிய மக்களுக்குப் பொறாமை யளித்தன. இதன் விளைவாக இங்கிலாந்து, பிரான்சு, ஆலந்து, போர்ச்சுக்கல், பெயின் முதலிய நாடுகளுக்குள் கடுமையான போர் நடந்தது. இதற்குள் ஐரோப்பா முழுவதிலும் ஓரே மக்கட் கூட்டமாக விளங்கிவந்த கிறித்துவ சமயத்திலும் பல பிளவுகள் ஏற்பட்டு அதன் காரணமாகவும் போர்கள் முன்னிலும் மிகுதியாயின. ஒவ்வோர் ஐரோப்பிய நாடும் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களிலுள்ள நாடுகளைக் கைப்பற்றுவதிலும், கைப்பற்றிய நாடுகளில் தம் வணிகத்தைப் பெருக்குவதிலும் முனைந்தமையால் போட்டியும், போர்களும் மேன்மேலும் பெருகின. இறுதியில் ஆங்கிலேயர் பெரும் வெற்றி பெற்றனர். உலகில் ஐந்திலொரு பகுதி அவர்கள் வயமாயிற்று. பிரான்சு, ஆலந்து, பெல்சியம், இத்தலி, சேர்மனி ஆகிய

1. Spaniards.

இந்நாடுகள் அனைத்துக்கும் மூன்றிலொரு பாகம் கிடைத்தது. இத்தகைய ஏற்றத் தாழ்வுகளினாலும், வேறு பல காரணங்களினாலும் இவ்வல்லரசுகளின் போட்டியும் பகையும் மேன்மேலும் மூண்டன.

இதனால் ஐரோப்பாவில் 1914-ஆம் ஆண்டில் அதற்கு முன் நடந்திராத ஒரு பெரும் போர் எழுந்தது.

இப்போரில் புதிய புதியவான போர்க் கருவி களும் விலங்குத்தனமான குரூர முறைகளும் கையா ளப்பட்டன. இறந்த மக்களின் தொகை ஒரு கோடி; உறுப்புக் குறைந்தவர் தொகை ஆறுகோடி; அழிந்த பொருள்களின் மதிப்போ அளவிறந்தது. போரின் கொடுமையும் நட்டமும் மக்களைத் திடுக்கிடச் செய் தன. இனிப் போரை ஒழித்துவிடுவது என முடிவு செய்தனர். 1914-ஆம் ஆண்டுப் போர், போரை ஒழிக்கப் புரிந்த போர் எனக் கூறினர்.

இங்ஙனம் உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் ஒன்றித்து அமைதியை விரும்பியது, மக்கள் வரலாற்றில் மிகச் சிறப்பான நிகழ்ச்சியன்றோ? இவ் விருப்பம் வெறும் எண்ணத்தோடு நின்றுவிடவில்லை. அமைதியை உலகில் நிலைநாட்டவும் போருக்குக் கார ணமாக எழும் சச்சரவுகளைப் பொதுமையாய்த் தீர்த்து வைக்கவும், கவரும் நாடுகளை அடக்கவும் [1]சர்வ தேச சங்கம் என்ற ஓர் அமைப்பும் நிறுவப் பட்டது.

இச்சங்கம் நிறுவப்பட்ட பத்தாண்டுகளாக அதன் சேவை பெரிதும் பயன் அளித்தது. ஆனால் அந்தோ அதன்பின் உலக அமைதி பகற் கனவாக

1. League of Nations.

மாறிற்று. இத்தலி, செர்மனி, சப்பான் முதலிய நாடுகள் சங்கத்தை விட்டு வெளியேறின. சப்பான் மான்சூரியாவையும், இத்தலி அபிசீனியாவையும் கவர்ந்தன. செர்மனி ஆத்திரியாவையும் செக்கோ சிலோவிக்கியாவையும் விழுங்கிற்று. 1938-ஆம் ஆண்டில் மாதக் கணக்காகவும் அதன்பின் நாட் கணக்காகவும் எதிர்பார்த்த இரண்டாம் உலகப்போர் 1939-ம் ஆண்டு, செப்டம்பர் 3-ல் தொடங்கிற்று.

பண்டைக்காலத்தில் சிறு சிறு குழுவினருக்கும் சிறு சிறு அரசுகளுக்கும் மிகச் சிறு சிறு அளவில் நடைபெற்ற போர்கள் இப்பொழுது எல்லா நாடுகளுக்கும் எல்லா மக்களுக்கும் ஒரே காலத்தில் உலக முழுவதும் நடக்கும் பெரும் போர்களாக மாறியிருப்பது வியப்பன்றோ? மக்கள் நாகரிகத்தின் மற்றைத் துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதுபோலப் போர்த் துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது போலும்!

போர் நிகழ்ச்சிகளை ஆராய்ச்சி செய்த சிலர், "போர், மக்களின் நாகரிக வளர்ச்சிக்குக் காரணம்; மக்கள் உள்ளளவும் போர் ஒழியாது," என்னும் முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

இம்முடிவு 'மிகைபடக்கூறல்' என்னும் குற்றத்துக்கு இடமாகும். மக்கள் வரலாற்றை நன்கு ஆராய்ந்தால் போர் புரிந்த காலத்தைவிட அமைதி நிறைந்திருந்த காலமே மிகுதியானது எனவும், போரினால் விளைந்துள்ள தீமைகளைவிட அமைதியால் விளைந்த நன்மைகளே மிகுதி எனவும் பெறப்படும். மக்கள் நாகரிகம் இன்றைக்கு இந்நிலையில் வளர்ச்சியுற்றிருப்பது போரினால் அன்று; அவ்வப்போது நடந்த போர்

களினுல் அழிவுற்றது போக, எஞ்சி நின்ற நாகரிகம் அமைதி காரணமாகப் பெருகியிருப்பதினுலேயாம் என்க. இதை இனிவரும் பகுதிகளில் விரிவாக விளக்கிக் காட்டுவோம்.

போர் இவ்வுலகத்தின் இயற்கை விதி; அது மக்கள் வளர்ச்சிக்குக் கட்டாயம் என்று கூறுவது முற்றிலும் இழுக்கு: போரினுல் அழிபவர் வலுக்குறைந்தவர் அல்லர் ; வலு நிறைந்தவரேயாவர். மீந்திருப்பவரே வலுக்குறைந்தவர்.

மக்கள் போரை ஒழிக்கவேண்டும் அல்லது போர் மக்களை ஒழித்துவிடும் என்பது முற்றக் கற்ற அறிஞர் மொழி. மக்கள் போரை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவே, தமிழில் புறப்பொருளிலக்கணத்தில் காஞ்சித் திணை என்ப தொன்று ஆசிரியர் தொல்காப்பியனுரால் வகுக்கப்பட்டது. போர் காரணமாக அழிந்துபோன மக்கள் எண்ணில்லாதவரென்பதை,

> "நாளுற் றிசையும் பிணம்பிறங்க யானை
> அடுக்குபு ஏற்றிக் கிடந்த இடித்துரறி
> அங்கண விசும்பின் உரும்எறிந் தெங்கும்
> பெருமலைத் தூறெறிந் தற்று"

என்னும் களவழிப் பாட்டு அடிகள் மிக விளக்கமாக எடுத்துக்காட்டுகின்றன. இடைவிடாது போர் புரிபவர் உயர்வெய்துவர் எனவும், மற்றத் தேசங்களைக் கவரும் நாடே நாகரிகத்திற் பெருகும் நாடு எனவும் கூறுவது எத்துணைப் பேதைமை!

மக்கள் வாழ்க்கையில் போர்ஒழியுமா? என்பதை விரிவாய் மேலே ஆராய்வோம். பண்டைப் போர் நிகழ்ச்சிகளை ஒவ்வொன்ருய்க் கற்ருல், பலவகைப்

போரும் இதுகாறும் நீங்கியுள்ளனவென்றும் மக்கள் முயன்றால் போரை ஒழிப்பது அரிதன்று என்றும் புலப்படும்.

---

2. அரசும் போரும்

'போரிலிருந்து அரசு தோன்றிற்று' என்பது ஆங்கிலேயரின் பழமொழி.[7] இப்பழமொழிக்கு அவர்வரலாற்றிலிருந்தே எடுத்துக்காட்டுகள் தரலாம்.

ஆங்கிலேயரின் முன்னோர் செர்மன் தேசத்தி லுள்ள 'எல்ப்'[1] என்னும் ஆற்றோரத்தில் சிறு சிறு குழுவினராய், வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு குழு விற்கும் ஒவ்வொரு தலைவன் உண்டு. ஆனால் அந்தத் தலைவனுக்கும் மற்றவர்க்கும் நிலைமையிலும் உரிமை யிலும் எவ்வகை ஏற்றத் தாழ்வும் கிடையாது.

இங்ஙனம் வாழ்ந்துவரும்பொழுதுதான் அவர் கள் 'பிரிட்டன்' என்னப்படும் இங்கிலாந்தின்மீது படையெடுத்தனர். படைகளைத் திரட்டவும், பகைவ ருடன் போர் புரியவும், தோற்றவர் நிலங்களைப் பிடுங் கவும், அவற்றைத் தம் கூட்டத்தினருக்குக் கொடுக்க வும் ஆகிய பலதிறப்பட்ட சேவைகளையும் இத்தலைவர் கள் ஆற்றினார்கள். இதனால் இத்தலைவர்கள் உயரிய நிலையும் எல்லா உரிமையும் அளிக்கப்பட்டு அரசர்க ளாகக் கொண்டாடப்பட்டனர். போர் காரணமாகத் தலைவர்கள் அரசர்களாக மாறினர் என்பது பொருள்.

இங்கிலாந்தின்மீது படையெடுத்த தலைவர்கள் பலரும் சிறிதுகாலம் சிற்றரசர்களாக விளங்கினர்.

---

1. Elbe.

ஆனால் முடிவில் இவர்களுள் ஒருவர் (—'வெசக்சு அரசர்) மற்றவர்களையெல்லாம் போரில் வென்று நாடு முழுவதும் தம் ஆட்சியைப் பரப்பி ஒரு பேரரசராக விளங்கினார்.

இவ்வுண்மை மற்றை நாட்டு வரலாறுகளிலும் காணக்கிடக்கின்றது. பண்டைக்காலத்தில் நம் நாட்டில் இமயமலைப் பக்கத்தில் **லிச்சவியர்**[1] **சாக்கியர்**[2] என்னும் வகுப்பினர் சிலர் சிறுசிறு குழுவினராயும் குடியரசினராயும் வாழ்ந்து வந்தனர். ஆனால் இவர்கள் தம் பக்கத்தில் வாழ்ந்த மகத அரசனால் தாக்கப்பட்டு அவன் ஆட்சிக்குட்பட்டனர். இம்மகத அரசன் தன் பக்கலிலுள்ள காசி, விதேகா, அங்கா முதலான சிற்றரசர்களையும் போரில் வென்று ஒரு பேரரசனானான். இதன்பின் மோரிய பரம்பரையைச் சேர்ந்த சந்திரகுப்தன், பிந்துசாரன் என்னும் அரசர்கள் இருவரும் இந்தியாவின் பற்பல பாகங்களிலுள்ள எத்தனையோ சிற்றரசர்களையெல்லாம் (சேர சோழ பாண்டியர் மூவரைத் தவிர) அழித்து ஒரே ஆட்சியினராய் விளங்கினர்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஆராயுங்கால் மக்கள் சிறுசிறு குழுவினராய்த் தனித்தனியே வாழும் வாழ்க்கையை ஒழித்து ஒரு பெருங் குழுவினராக ஒன்றித்து வாழ்வதற்குப் போர் ஒரு காரணமாகவும், அதன் வழிப் பிறந்த அரசு ஒரு கருவியாகவும் விளங்கி வந்திருப்பதுபோலத் தோன்றும். இது காரணமாகவே வரலாற்று ஆசிரியர் சிலர், மக்கள்வாழ்க்கையிற் போர் இன்றியமையாதது என்றும், அதன் விளைவு அன்ன

1. Lichhavis. 2. Sakyas.

வர் முன்னேற்றத்துக்குத் தூண்டுகோல் என்றும் பொருள் கொள்கின்றனர்.

ஆனால் இம்முடிபு தவறு என்பது வரலாறுகளை ஊன்றிக் கற்கும் எவருக்கும் தெளிவாகப் புலப்படும். "புள்ளி விபரங்களைக்கொண்டு எதையும் நிறுவி விடலாம்" என்பது ஓர் ஆங்கிலக் கொள்கை.[8] இதை யொட்டித் தத்தம் முடிபுக்கேற்பச் சில வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்து ஒரு சில கோட்பாடுகளைச் சிலர் நிறுவ முயலுகின்றனர். "போர் நிகழ்ச்சிகள் மக்களின் வாழ்க்கை வளர்ச்சிக்குக் காரணமாக விளங்குகின்றன" என்னும் கோட்பாடு, நாம் இங்கு எடுத்துக் காட்டிய குற்றத்துக்கு இடமாகின்றது. இது பின்வரும் நிகழ்ச்சிகளால் தெளியப்படும்.

போர் புரியாமலே, சிறு குழுவினராக வாழ்ந்த மக்கள் பெருங்குழுவினராகக் கூடியதற்கு வரலாற்றிற் பல எடுத்துக்காட்டுகள் காணப்படுகின்றன. கிரேக்க தேசத்தில் 'ஆதென்சு'[1] நகரக் குடியரசை நிறுவிய மக்கள், தொடக்கத்தில் ஐந்து சிறு குழுவினராகத் தனித்தனியே ஐந்து ஊர்களில் வாழ்ந்து வந்தனர்.

இங்ஙனம் இவர்கள் தனித்து வாழ்வது வலுக் குறைவு என்று உணர்ந்து, தத்தம் சிற்றூர் வாழ்க்கையை ஒழித்து ஆதென்சு நகரிற் குடியேறி, அதில் ஒரு குடியரசை நிறுவினர். இந்நகர் மக்களே 'கிரேக்க தேசத்துக்குக் கண்'[9] என்னும்பெருமையை எய்தினர். இவர்கள் நாகரிகமே கிரேக்க நாகரிகம் எனலாம். போரின்றி அரசும், அரசின்றி நாகரிகமும் இல்லை யென்னுங் கோட்பாட்டை மறுக்க, ஆதென்சு நகர மக்களின் வாழ்க்கை யொன்றே போதிய சான்றாகும்.

1. Athens.

இதற்கு எதிர்மாறாக விளங்கியது கிரேக்க தேசத்தின் வேறொரு நகரமாகிய பார்ட்டா[1] என்பது. இந்நகர மக்கள் இதன் பழங்குடிகளைப் போரில்வென்று அவர்களை அடிமைகளாக்கியதுடன் ஆர்காலிசு, மெசினியா முதலிய அண்டை நாடுகளையும் தம் ஆட்சிக்குட் படுத்தி, எப்பொழுதும் போர் புரிவதையே தம் தொழிலாகக் கொண்டொழுகினர். ஆனால் இம்மக்கள் கிரேக்க நாகரிகத்துக்கு எவ்வகைத் தொண்டும் ஆற்றாதவர்களாய், இரண்டாவது இடத்தையே தாங்கியிருந்து, இறுதியில் ஆதென்சு நகரத்துக்கு அடிமைகளும் ஆயினர். போரினால் ஒரு நாடு உயர்வெய்தாது என்னும் உண்மையை உறுதிப்படுத்தப் பார்ட்டா நகரத்தின் வரலாறே போதுமானது.

சுவிட்சர்லாந்து எனப்படும் நாடு முதன்முதலாகச் சூரிச், அண்டர்வால்டன், பெர்ன் என்னும் மூன்று தொகுதிகள் அடங்கியதாக விளங்கிற்று. இம் மூன்று தொகுதிகளும் போரில்லாமலே ஒன்று சேர்ந்து ஒன்றோடொன்று ஒற்றுமைப்பட்டன.

வட அமெரிக்க ஒற்றுமை நாடுகள் ஒன்று சேர்ந்து 1776-ஆம் ஆண்டில் ஒரு குடியரசை ஏற்படுத்தியது, மக்கள் வரலாற்றில் ஒரு பெரிய நிகழ்ச்சி என எல்லோரும் போற்றுகின்றனர். இப்பேரரசு போரிலிருந்து தோன்றவில்லை. ஆங்கிலேயருடன் போர் புரிய வேண்டிய காரணத்தால் இவை ஒன்று சேர்ந்தன என்பது உண்மை; ஆயினும் இது போரிலிருந்தே அரசு தோன்றிற்று என்னும் கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகாது. 'எதிரி போரிட வருங்கால் நாம் தனித்து நின்றால் அழிந்து விடுவோம்;

---

1. Sparta.

ஆதலின் ஒன்று சேர வேண்டும்' என்னும் காரணத்தால் அரசு தோன்றும் உண்மைக்கே எடுத்துக்காட்டு ஆகும்.

மக்கள் வரலாற்றில் சில சில நாடுகளிற் போரிலிருந்து அரசு தோன்றியது உண்மை. ஆனால் இந் நிகழ்ச்சிகளையே ஆதாரமாகக்கொண்டு மக்கள் வளர்ச்சிக்குப் போர் இன்றி யமையாதது எனக் கூறுவது இழுக்காகும்; போரினால் அரசு தோன்றியது எவ்வளவு உண்மையோ அதைவிட உண்மை போரினால் அரசுகள் அழிந்து கெட்டன என்பது. வரலாற்றிலிருந்தும் பெறப்படுவது இது.

15-ஆம், 16-ஆம் நூற்றாண்டுகளில் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாகத் தம்முள் ஒன்றோடொன்று போர் புரிந்த ஸ்பெயின், பிரான்சு என்ற இரு நாடுகளும் இறுதியில் தம் செல்வத்தையும் ஆட்சியையும் இழந்து தம் உயரிய நிலையினின்றும் வீழ்ந்தன. இவ்விரு நாடுகளாலும் எதிர்க்கப்பட்ட நாடாகிய இத்தலியும் 19-ஆம் நூற்றாண்டு வரை சின்ன பின்னமாய்ச் சிதறிக்கிடக்க நேர்ந்தது. இங்ஙனமாகவே, நடுக்காலத்திலும் அதன்பின்னும் பிரான்சு, இத்தலி, ஆத்திரியா முதலான அண்டை நாடுகளுடன் இடைவிடாது போர்புரிந்து வந்த செர்மனியும் 19-ஆம் நூற்றாண்டுவரை சிதைந்து கிடக்க நேரிட்டது. 17-ஆம் நூற்றாண்டில் உயர்நிலை யெய்திய சுவீடன் தேசமும் போர் காரணமாகவே வீழ்ச்சியுற்றது.

போரினாற் பெருமையடைந்த வீரர்களின் முடிவும் என்ன? கான்ஸ்டான்டிநோபிள் நகரிலிருந்து ஆட்சி செய்த **சச்டினியன்**[1] என்னும் ஓர் உரோம அர

1 Justinian.

சன் தனதரசின் எல்லாப்பாகங்களிலும்எப்பொழுதும் போர் புரிபவனுகவே விளங்கிவந்தான். 'போரையே அணிகலனுக உடையவன்' என்னும் அணிமொழி அவனுக்கு முற்றும் பொருந்தும். எங்கும் வெற்றி பெற்றுன். ஆனுல் இறுதியில் அவன் நாடு வலுவிழந்து அழிந்தது. ஏனெனில், நாட்டிலுள்ள மக்களின் உயிரும் பொருளும் கணக்கில்லாமற் செலவழிக்கப்பட்டதனுல் அராபியர், லாம்படியர்[1] முதலான பகைவர்கள் படையெடுத்து வந்தகாலத்து அவர்களை எதிர்க்க வலுவில்லாமல் அந்நாட்டின் பல பகுதிகள் பகைவர் கைவசமாயிற்று. தன் வலியையும் பொருளையும் தன் வயமிருந்த நாடுகளின் அரண்களையும் செல்வத்தையும் பெருக்கும் முயற்சியில் அவன் செலவிட்டிருந்தால், அவன் நாடு அழிவுற்றிராது என்பது வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக்காட்டும் நீதி.

தன் ஆயுள் முழுவதையும் போரிற் கழித்த பதினன்காம் லூயி அரசன், தன் போர்களின் பயனுல் பிரான்சு கடன் சுமையாலும் வேறு பல தீமைகளாலும் பாழடைந்து போவதைக் கண்டு வருந்தி, "எனக்குப்பின் பெருவெள்ளம்" [10] என்று கூறி மனமுடைந்து இறந்தான்.

நெப்போலியன் என்னும் உலகப் போர் வீரன், இத்தலி, பெயின், பெல்சியம், ஆலந்து, போர்த்துக்கல், ஆத்திரியா, செர்மனி முதலான பல ஐரோப்பிய நாடுகளையும் வென்று, அதற்கு அறிகுறியாகப் பண்டை உரோம அரசர்கள் அணிந்திருந்த முடியையும் தன் தலையில் தன் கைகளாலேயே தூக்கிவைத்துத்தன்னை மன்னர்மன்னனுகக் கருதிக்கொண்டாடிக்

1. Lombards.

கொண்டான். அவன் உடன் பிறப்பினரைப் பெயின், ஆலந்து முதலிய நாடுகளில் அரசர்களாக வீற்றிருக்கவுஞ்செய்தான். இப்படிப்பட்ட பெருவீரனுன பேரரசன் என்ன ஆனுன்? முடிவில் ஆற்றங்கரை மரம் போல இடிந்து வீழ்ந்தனன். வாட்டர் லூப் போருக்குப்பின் சிறைபிடிக்கப்பட்டு எலினுத் தீவில் தன் வாழ்நாளின் இறுதிப் பகுதியைக் கழித்தனன். அங்ஙனம் சிறை வாழ்க்கை செய்யுங் காலத்தில் அவன் வெளியிட்ட ஒரு கூற்று, போரினுல் அரசுக்கு வரும் கேட்டை வெள்ளிடை மலைபோல விளக்கும் ஒரு பொன்மொழியாகத் திகழ்கின்றது. அக்கூற்று, பின் வருமாறு:—“என் தோள்வலியாலும், வாள்வலியாலும் யான் பெற்ற பேரரசு எவ்வளவு நொடிப் பொழுதில் மறைந்துவிட்டது. ஆனுல் படையும், வாளுமின்றி மக்களின் உள்ளத்தையெல்லாம்கவர்ந்து அவர்கள் எக்காலும் தம்மை அரசராக ஏற்றிருக்கும் படி செய்து விளங்கும் கிறித்துவின் அரசு எவ்வளவு நிலைபெற்றிருக்கின்றது!” [11] போரினுல் அரசு அழியும் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டும் வேண்டுமோ?

“இடைவிடாது போர்புரியும் மக்களே உயர் வெய்துவோர்” என்னுங் கோட்பாட்டுடன் இப்பொழுது நடக்கும் இவ்விரண்டாம் உலகப்போரைத் தொடங்கிய ‘இட்லர்’ என்பவர், இப்போரின் முடிவு என்னவாகுமென்று முன்பே கூறியிருக்கிருர். இஃது எல்லோராலும் ஆழ்ந்து ஆழ்ந்து நோக்கத்தக்கது. “இப்போருக்குப்பின் தோற்றவர் வெற்றிபெற்றவர் என்னும் இரு வகுப்பினர் இரார்; தப்பிப் பிழைத்தவர், முற்றிலும் அழிந்தவர் என்னும் இருவகுப்பினரே இருப்பர்” [12] என்பது அவர் கூற்று.

'போர் நாகரிகத்தை வளர்க்காது; அதை அழிக்கும்'என்பது,இங்ஙனம் வரலாற்றால் நாம் பெறுகின்ற உண்மை. கசினி மகமது, செங்கிட்கான்[1] நாதர்சா, தாமர்லேன் என்பவர்களைப்போல் இந்தியாவின்மேற் படையெடுத்து, மக்களை வாளுக்கும் நெருப்புக்கும் இரையாக்கி, அவர்கள் பொருள்களை யெல்லாம் கொள்ளையிட்டுச் சென்றவர்களால் எழுந்த நாகரிகம் எது? உரோம் அரசைக் கவிழ்த்த அட்டில்லா, கெய்சரிக் முதலான மூர்க்க வீரர்களால் ஐரோப்பா பெற்ற நன்மை யாது? போரினால் சில அரசுகள் தோன்றியது உண்மையாயினும், இவ்வரசுகளாலேயே உலகத்தில் வீண் போர்களும் அழிவுகளும் மேலுமேலும் ஏற்பட்டதும் உண்மையேயன்றோ?

இந்தியாவில் அரசுபுரிந்த மொகலாய அரசரான அக்பர் மற்றை நாடுகளுடன் உறவாடி அவற்றின் நட்பைப்பெற்றுத் தம் அரசைப் பெருக்கினார். இம்முறையை எதிர்த்த நாடுகளுடன் மட்டுமே போர் தொடுத்தார். இங்ஙனமாகவே ஐரோப்பாவில் அரசுபுரிந்த சார்லமேன் என்னும் அரசரும் செய்தார்; அரசின் பெருமை போரன்று; போரை ஒழிப்பதே அரசின் பெருமையாகும்.

மோரிய மரபின் அசோக அரசன் கலிங்கநாட்டின் மீது போர்புரிந்தனன். அப்போரில், 15,000 கலிங்க மக்கள் உயிர் துறந்தனர். அதனினும் மிகுதியானோர், உறுப்பிழந்தனர். போரில் இரத்த வெள்ளம் பெருகியது.

" மடங்க எறிந்து மலையுருட்டும் நீர்போல்
தடங்கொண்ட ஒண்குருதி கொல்களிறு ஈர்க்கும்

1 Chingizkhan.

மடங்கா மறமொய்ம்பின் செங்கண் சினமால்
அடங்காரை அட்ட களத்து"

இதைக் கண்ணுற்ற அரசன் அந்நொடியே போரை ஒழிப்பதென்றும், அருளைப் பெருக்குவதென்றும் தெளிந்து, அதற்கு அடிப்படையான புத்தமதத்தைத் தழுவி, அம்மதத்தின் நெறிகளை நம் நாட்டிலும், பர்மா, சீனு, சப்பான், பாரசீகம் முதலிய பல அண்டை நாடுகளிலும் பரப்பினான். அன்றுமுதல் இன்றுவரைக்கும், இன்னும் புத்தமதம் நிலவக்கூடிய வருங்காலத்திலும் உள்ள எண்ணிறந்த கோடிகோடி மக்களின் வாழ்வையெல்லாம் இவ்வசோக அரசனது செயல் இன்புறுத்தி நிற்குமன்றோ? இவன் பெருமையை அளவிட எவரால் இயலும்? "அரசர்களுக்குள்ளே இமயமலைபோல விளங்குபவன் அசோகனே' என வரலாற்று ஆசிரியர்கள் இவ்வரசனைப் புகழ்வது சிறிதும் மிகையாகாது.

இதுகாறும் ஆராய்ந்தவாற்றால், 'போரிலிருந்து சில அரசுகள் தோன்றியது உண்மையாயினும் போரில்லாமலும் அரசுகள் தோன்றியுள்ளன' என்பதும், 'போர் மக்களை உயர்த்துவதில்லை அவர்களை அது தாழ்த்தத்தான் செய்கின்றது' என்பதும், 'அரசின் பெருமை போரன்று; போரை ஒழிப்பதே' என்பதும் வரலாறுகளை ஊன்றிக் கற்போர்க்கு நன்கு புலப்படும். இவற்றிற்கு மாறாகக் கூறுதல் பிதற்றல் என்க.

3. உள் நாட்டுப் போர்கள்

"போர் ஒழியுமா?" என்னும் கேள்விக்கு ஒழிந்த போர்களையே விடையாகக் கூறலாம்.

போருக்குரிய காரணங்கள் இருக்கும்வரை போர்கள் நிகழ்வதும், அக்காரணங்கள் நீங்கியபின் போர்கள் ஒழிவதும் வரலாற்றுக் கலையிலிருந்து நாம் அறியும் உண்மை. இதனை உள் நாட்டுப் போர்களிலிருந்தும் சமயப் போர்களிலிருந்தும் விளக்கிக் காட்டலாம்.

தற்கால நாகரிகத்தில் தலைசிறந்து விளங்கும் இங்கிலாந்திலேயே ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளாக மிகப்பல உள்நாட்டுப் போர்கள் மீண்டும் மீண்டும் நிகழ்ந்துள்ளன. இதில் வியப்பொன்றும் இல்லை. ஏனெனில், உள்நாட்டுப் போருக்குரிய காரணங்கள் இருந்தால் அத்தகைய போர்கள் எழுவது இயல்பே.

இங்கிலாந்தில் நடந்த உள்நாட்டுப் போர்களில் முதல்வரிசை, அரசருக்கும் செல்வர்களுக்கும்[1] நடந்த போர்கள். இவற்றிற்குக் காரணம் 1066-ஆம் ஆண்டில் [2]உல்லியம் (1066-1087) என்னும் பெயருடைய [3]நார்மந்து நாட்டுத் தலைவன் இங்கிலாந்துமீது படையெடுத்து, அங்குத் தன் அரசை நிறுவியதாகும். இங்ஙனம் இங்கிலாந்தைக் கைப்பற்றுவதற்கு உல்லியத்துக்கு உதவி புரிந்தவர்கள் நார்மந்து நாட்டுச் செல்வர்கள். இச்செல்வர்களுக்கும் அவர்கள் தலைவனான உல்லியத்துக்கும் தகுதியில் வேற்றுமை யில்லாததனாலும், அக்காலத்து [4]அரசியல் வழக்கப்படி செல்வர்

1 Barons. 2 William I. 3 Normandy. 4 Feudalism.

களுக்கும் அவரவர் மாகாணங்களில் சம அரசுரிமை வழங்கப்பட்டிருந்ததனுலும், இங்கிலாந்தின் பற்பல பகுதிகளிலும் இச்செல்வர்கள் பற்பல சிற்றரசர்கள் போல விளங்கினர். ஒரு நாட்டில், தலைவனுக விளங்கும் ஓர் அரசனும், ஆனல் அவ்வரசனின் ஆட்சிக்குக் கீழடங்கி நடக்க மனமற்ற பற்பல செல்வர்களும் இருந்தால் அவ்வரசனுக்கும் செல்வர்களுக்கும் போர் நிகழ்வது இயல்பன்ருே ?

1075-ஆம் ஆண்டில் உல்லியம் அரசன் தன் பழைய நாடாகிய நார்மந்துக்குச் சென்றுவரப் புறப்பட்டான். அரசன் புறப்படவும், பெரிய செல்வர்கள் மூவர் ஒன்றுகூடி உல்லியத்தை விலக்கிவிட்டு இங்கிலாந்தை மூன்று பிரிவாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொருவர் அரசு புரிவதென்று தீர்மானித்து, அரசன் படைகளோடு போர் தொடுத்தனர். இந்நிகழ்ச்சியைக் கேட்ட உல்லியம் நார்மந்திலிருந்து விரைந்து வந்து, பகைவரை வென்று, அவர்களுள் ஒருவனைக் கொன்றும், மற்றிருவரை நாட்டைவிட்டுத் துரத்தியும் இங்ஙனமாகச் செல்வர்களின் முதற் போரை ஒழித்தான். 1077-ஆம் ஆண்டில் செல்வர்கள் பலர் ஒன்றுகூடி மீண்டும் ஒரு போரைத் தொடங்கினர். இப்போரில் அரசன் தன் ஆங்கிலக் குடிகளின் உதவியால் வெற்றிபெற்றுன். இத்தகைய போர்கள் உல்லியம் அரசனுக்குப்பின் ஆண்ட எல்லா அரசர்கள் காலத்திலும் நடைபெற்றன. அவற்றை ஒவ்வொன்ருய் விவரித்துக் கூறவேண்டுவதில்லை.

ஆனல் நான்கு நூற்றுண்டுகளுக்குள் இவ்வுள்நாட்டுப் போர்கள் அறவே ஒழிந்தன. இதற்குக் காரணம் செல்வர்களின் ஆட்சி அழிந்ததுதான். அரசர்

களுக்குப் பகையாக அடிக்கடி நிகழ்ந்த போர்களிற் செல்வர்கள் பலர் தம் உயிரையும் காணிகளையும் இழந்தனர். முதலாம் என்றி (1100—1135) இரண்டாம் என்றி (1154—1189) முதலாம் எட்வர்டு என்னும் அரசர்கள் காலத்தில் செல்வர்களின் ஆட்சி யுரிமைகளிற் பல பிடுங்கப்பட்டன. சிலர் பலத்தீனு[1] நாட்டுச் சிலுவைப்[2] போருக்குச் சென்று அங்கு உயிர் துறந்தனர். இப்போர்ச் செலவுக்காகப் பலர் தங்கள் காணிகளை விற்று அல்லது ஈடுவைத்துச் சென்றமையால் இக்காணிகளும் அழிந்தன. பின்னர்ச் செல்வர்களில் ஒருவருக் கொருவர் நடந்த ரோசாமலர்ப் போர்[3] என்ற ஒரு பெரும் உள்நாட்டுப் போரில் செல்வர்கள் மிகப் பலர் உயிரிழந்தனர். இப்போருக்குப் பின் ஏறக்குறைய ஐம்பது செல்வர்களே எஞ்சி நின்றனர். இவர்கள், பல் பிடுங்கப்பட்ட பாம்புகளைப்போல அரசருக்கு அடங்கி நடக்கலாயினர். செல்வர்களின் ஆட்சி அழிந்தது. செல்வர்களுக்கும் அரசருக்கும் நிகழ்ந்த உள்நாட்டுப் போரும் ஒழிந்தது.

இங்கிலாந்தின் உள்நாட்டுப் போரில் இரண்டாம் வரிசை, அரசருக்கும் குடிகளுக்கும் நடந்த போர்கள். இவற்றின் காரணம் பின் வருமாறு:—செல்வர்கள் அழிந்தபின், தன்னை எதிர்ப்பாரில்லாததனால் அரசன் கொடுங்கோலனாக மாறினான். அந்நாட்டின் அரசியல் மன்றாகிய பார்லிமெந்தின்[4] ஆணையின்றி வரி விதிப்பதும், அயல் நாடுகளுடன் வீண் போர் தொடுப்பதும், முறைமையானதைப் புரட்டுவதும் அரசன் செயல்களாயின. இதனால் அரசனுக்கும் பார்லிமெந்துக்கும்

1 Palestine. 2 Crusades. 3 Wars of the Roses.
5 Parliament.

ஏறக்குறைய ஒரு நூற்றூண்டாகப் பெரும்போர் நடந்தது. இப்போரில் முதலாம் சார்லசு[1] (1625–1649) என்னும் அரசன் தன் தலையை இழந்தான். இரண்டாம் சேம்சு[2] (1685—1688) அரசன் நாட்டைவிட்டு ஓடி உயிர்தப்பினன்; இறுதியில் குடிகளே வெற்றி பெற்றனர். 1688-ஆம் ஆண்டில் குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உல்லியம்[3] என்னும் டச்சு அரசரும் அவர் ஆங்கில மனைவியாகிய மேரி அரசியும், நாட்டுச் சட்டங்களை யெல்லாம் மேற்கொள்ளுவோம் என வாக்களித்துக் குடிகளுக்கிணங்கிச் செங்கோல் செலுத்திவந்தனர். அதன்பின் இதுவரையிலும், ஆங்கில அரசர்களெல்லாம் குடிகள் விருப்பப்படி (பார்லிமெந்தின் ஆணைப்படி) அரசுபுரிந்து வருகின்றனர். அரசருக்கும் குடிகளுக்கும் நடந்த உள்நாட்டுப் போர்களும் ஒழிந்தன.

1066-ஆம் ஆண்டிலிருந்து, 1688-ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தில் நடந்த உள்நாட்டுப் போர்களின் வரலாற்றிலிருந்து நாம் அறியும் உண்மை, போருக்குரிய காரணங்கள் நீங்கும்வரை போர் நிகழும் என்பதாம். இவ்வுண்மையை நம் நாட்டுவரலாற்றிலிருந்தும் கிரேக்க நாட்டு வரலாற்றிலிருந்தும் மெய்ப்பிக்கலாம்.

பண்டைக் காலந்தொட்டே நம் தமிழ்நாட்டில், சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆண்டு வந்தனர். மிகச் சிறிய நிலப்பகுதியாகிய இத்தமிழ் நாட்டில் மூன்று அரசர்கள் அரசுபுரிந்து வந்தால் அவர்களுக்குள் போர் நிகழாதிருப்பது எப்படி?

ஓரமயத்தில் சேரன் பாண்டியனுக்குப் பகையாகவும், பாண்டியன் சோழனுக்குப் பகையாகவும்,

---

1 Charles I. 2 James II. 3 William III.

சோழன் சேரனுக்குப் பகையாகவும்; மற்றோரமயத்தில் சேரனும் பாண்டியனும், சோழனுக்குப் பகையாகவும்; அல்லது சோழனும் பாண்டியனும் சேரனுக்குப் பகையாகவும் இங்ஙனமாக இடைவிடாது போர்புரிந்து வந்தனர். இஃதன்றி, இவர்கள் ஓரோவமயத்தில் இலங்கை யரசன், பல்லவ அரசன், சாளுக்கிய அரசன் ஆகிய அண்டை நாட்டு அரசர்களையும் துணையாகக் கொண்டு ஒருவரோடொருவர் பொருதனர். இங்ஙனமாக மேலும் மேலும் போர் புரிந்து கொண்டே இருந்தால் நாடு கேடடைவதன்றி வேறு யாது பயன் அடையும்? வலுவுள்ள இரு சேவல்கள் ஒன்றோடொன்று போரிட்டால் இரண்டுங் களைத்து வீழ்வது இயல்பு. இதுபோலவே, இத்தமிழ்நாட்டு அரசர்களெல்லாம் ஒருவரோடொருவர் போர் புரிந்து களைத்து, இறுதியில் மகமதிய அரசர்களுக்கு இரையாயினர். மகமதிய அரசர்களும் இத்தகைய போர்களினாலேயே தம் அரசையிழந்து, ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டனர். இந்தியா முழுவதிலும் ஒரே ஆட்சி ஏற்பட்ட பின், நம் நாட்டில் உள்நாட்டுப் போர்கள் பகலவனைக் கண்ட இருள்போல மறைந்து விடவில்லையா?

மிகச் சிறிய நிலப்பகுதியில் பல அரசுகள் இருந்தால் உள்நாட்டுப் போர்கள் நிகழ்வது இயல்பே என்பது மேலே விளக்கப்பட்டது. இவ்வுண்மை கிரேக்கநாட்டு வரலாற்றாலும் நன்கு விளங்குகின்றது.

பண்டைக் காலத்தில் கிரேக்க நாட்டில் ஒவ்வொரு நகரமும் தனித் தனி அரசாக விளங்கிற்று. [1]பெலப்பனிசு என்னும் நிலப்பகுதியில் மட்டுமே,

1 Pelopponessus.

பார்ட்டா என்னும் ஒரு [1]நகர் அரசு பேரரசாக ஆட்சி புரிந்தது. மற்றைப் பகுதிகளிலெல்லாம் ஒவ்வொரு நகரத்துக்கும் ஒவ்வொரு தனி அரசு இருந்தது. இத னுல் ஒரு நகரத்துக்கும் மற்ற நகரத்துக்கும் ஓயாது போர்கள் விளைந்துகொண்டே இருந்தன. பகை யரசு இந்நகரரசுகளோடு போர் தொடங்கிய காலத் தில் மட்டும் இவை ஒன்றுகூடிப் பகைவரை எதிர்த் துப் பொருதன. மற்றக் காலங்களிலெல்லாம் அதேனே, பார்ட்டா, [2]தீப்ஸ், [3]பியோசியா [4]கொரிந்து முதலான ஒவ்வோர் அரசும் மற்ற அரசுகளோடு போர் புரிந்து வந்தது. இப்போர்களின் பயன், இவை யனைத் தும் களைத்து மாசிடோனியாவி லிருந்து வந்த [5]பிலிப்பு என்னும் அரசனுக்கு இரையானதுதான். கிரேக்க நாடு முழுவதிலும் மாசிடோனியாவின் ஆட்சி நிறுவப்பட்ட பின், உள்நாட்டுப் போர்கள் ஒழிந்தன.

நாம் மேலே கூறிய உண்மைகளை விளக்கக் கணக்கற்ற எடுத்துக்காட்டுகளை மேலும் மேலும் அடுக்கிக்கொண்டு போகலாம். ஆனுல் இனி இரண்டு மட்டுமே கூறுவோம். இவை, ஒரு நாட்டு மக்களுக் குள்ளேயே உள்ள வேறுபாடுகளால் எழும் உள் நாட்டுப் போர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆவன.

கிரேக்க நாட்டிலுள்ள அதேனே நகரத்திலுள்ள மக்களுக்குள் நெடுங்காலமாகப் பல உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்து வந்தன. இதற்குக் காரணம் இம் மக்களுக்குள் குலம், நிலம், பொருள்நிலை இவற்றில்

---

1 City State. 2 Thebes. 3 Beotia. 4 Corinth. 5 Philip.

ஏற்பட்டுள்ள வேறுபாடுகளேயாகும். இந்நாட்டு மக்கள் குலத்தால் நான்கு பிரிவினராகவும்; பொருள் நிலையால் நான்கு பிரிவினராகவும் (500-படி எண்ணெயும் அதற்கு மேற்பட்டும் வருவாயுடையவர் முதற்பிரிவினராகவும் 500-க்கும் 300-க்கும் இடைப்பட்ட வருவாயுடையவர் இரண்டாவது பிரிவினராகவும், 300-க்கும் 200-க்கும் இடைப்பட்டவர் மூன்ருவது பிரிவினராகவும் 200-க்குக் குறைந்தவர் நான்காவது பிரிவினராகவும்); இடத்தால் [1]மலைப் பகுதி, [2]சமவெளிப் பகுதி, கடற்கரைப் பகுதி என மூவகைப் பிரிவினராகவும் பிரிக்கப்பட்டிருந்தனர். இவ்வேறுபாடுகளால் இம் மக்களுள் அடிக்கடி குழப்பங்களும், சட்டமன்றத் தேர்தலில் வீண் போட்டிகளும் போர்களும் எழுந்தன.

இப்போர்களெல்லாம் நாளடைவில் ஒழிந்தன. ஏனெனில், குல வேறுபாடுகளும் பொருள்நிலை வேறுபாடுகளும் சிறிது சிறிதாக ஒழிக்கப்பட்டன. இறுதியாகக் [4]கிளைஸ்தீனன் என்னும் ஒரு தலைவன் இட வேறுபாட்டால் எழுந்த குழப்பங்களையும் ஒழித்தான். இச்சீர்திருத்தம் நம் நாட்டு நிலைமைக்கும் பொருந்துமாதலால் அதுபற்றிச் சிறிது விளக்கிக் கூறுவது மிகையாகாது.

நாம் மேற்கூறியபடி, அதேனே நகர நாட்டு மக்கள் தாம் வசித்துவந்த நிலப்பகுதிக் கேற்றவாறு 'மலை' 'சமவெளி' 'கடற்கரை' என மூன்று பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இவ்வேறுபாட்டால் சட்டமன்றத் தேர்தலில் அவர்களுக்குள் பல போர்கள் எழுந்தன. ஏனெனில், ஒவ்வொரு பிரிவின

1 Hill. 2 Plain. 3 Coast. 4 Cleisthenes.

ரும் தத்தம் பகுதியிலிருந்தே மிகுதியான பேர் சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்று போட்டியிட்டனர். இப்போட்டியை ஒழிப் பதற்காகவே கிளைத்தீனன் கீழ்க்கண்ட முறையைக் கையாடினன்.

அதேனே நாடு பத்துத் தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. ஒவ்வொரு தொகுதியிலும் மலை, சமவெளி, கடற்கரை ஆகிய மூன்று நிலப்பகுதியிலுள்ள மக்க ளும் ஒன்று சேர்ந்து, தொகுதிக்கு ஐம்பதுபேராக ஐந் நூறுபேர் அடங்கிய ஒரு புதுச் சட்டமன்றம் அமைக் கப்பட்டது. இதற்கு முன்பிருந்த சட்டமன்றத் துக்கு, நால்வகைக் குலத்தவரும் குலத்துக்கு நூறு பேராக நானூறுபேரைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வந்தனர். கிளைத்தீனன் திட்டப்படி, மூவகை நிலப் பகுதியில் வாழ்ந்த நால்வகைக் குலத்தவரும் சேர்ந்து, ஒரு தொகுதிக்கு ஐம்பது பேராக ஐந்நூறுபேரைச் சட்ட மன்றுக்கு அனுப்பும்படி நேர்ந்தது. இதனை நமது நாட்டு அரசியல் வழக்கிற்கூறினால், கிளைத் தீனன் திட்டம், [1]தனித்தொகுதி அல்லது குலத்தொகுதி முறைக்கு வேருகப் [2]பொதுத்தொகுதி அல்லது கலப்புத் தொகுதி முறையை ஏற்படுத்தியது எனலாம். இத் திட்டமே அதேனே நாட்டிலுள்ள வேறுபாடுகளை ஒழித்து, அது காரணமாக எழுந்த உள்நாட்டுப்போர் களையும் நீக்கின.

இறுதியாக, அமெரிக்க ஒற்றுமை நாடுகளின் வரலாற்றிலிருந்தும் உள்நாட்டுப் போருக்கு ஓர் எடுத் துக் காட்டுக் காட்டலாம்.

1. Separate or Communal electorate. 2. Joint or mixed electorate.

இவ்வொற்றுமை நாடுகளின் தோற்றத்தைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அமெரிக்க ஒற்றுமை நாடுகளின் தோற்றம், மக்கள் வரலாற்றில் இணையற்ற நிகழ்ச்சியாகும். ஏனெனில், இந்நாடுகளே முதன் முதலாக ஒரு கண்டத்தின் பாதிப் பகுதியில் மிகப் பெரிய குடியரசாக நிறுவப்பட்டவை. இவ்வரசு ஐரோப்பிய நாடுகளின் அரசுக்கும் இனி வரப் போகும் உலகப் பேரரசுக்கும் நடுவில் வைக்கப் பெறும் பெருமை வாய்ந்துள்ளது என ஆசிரியர் வெல்சு எடுத்துக் காட்டுகின்றார். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இவ்வொற்றுமை நாடுகளிலேயே ஒரு பெரும் உள்நாட்டுப் போர் நிகழ்ந்ததென்றால் (அதுவும் 1858-ஆம் ஆண்டில்) அது சற்று வியப்பை அளிப்பதேயாகும். இப்போருக்குக் காரணம் பின் வருமாறு:—

ஒற்றுமை நாடுகளின் தென் மாகாணங்களிலுள்ள அமெரிக்கர், ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள [1]நீகிரோ மக்களை அடிமைகளாக்கி, அவர்களுடைய உழைப்பால், புகையிலை, பருத்தி, இரப்பர் முதலான பயிர்களைப் பயிரிட்டு வந்தனர். அடிமை வேலையில்லாமல் இப்பயிர்த் தொழில்களை நடத்த முடியாதென்பது அவர்கள் எண்ணம். ஆனால் வடமாகாணங்களிலுள்ள அமெரிக்கர் அடிமைத் தொழிலை இகழ்ந்து, அதை ஒழிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டவர்கள். எனவே நாளுக்கு நாள் வடமாகாணத்தாருக்கும் தென்மாகாணத்தாருக்கும் பெரும் பகை ஏற்பட்டது.

இங்ஙன மிருக்கையில், 1844-ஆம் ஆண்டில் [2]டெக்சாசு என்னும் ஒரு புதிய மாகாணம் [3]மெக்சிகோ நாட்டினின்றும் விலகி ஒற்றுமை நாடுகளுடன் சேர்ந்

1. Negroes. 2. Texas. 3. Mexico.

தது. மெக்சிகோ நாட்டில் அடிமை வேலை, சட்டத்துக்கு மாறானது. ஆனால், ஒற்றுமை நாடுகளின் தென் மாகாணங்களில் அது சட்டத்துக்கு மாறானதன்று. எனவே, டெக்சாசு ஒற்றுமை நாடுகளுடன் சேர்ந்தது, தென் மாகாணங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை விளைவித்தது. வட மாகாணங்களுக்கோ அடிமை வேலையை ஆதரிக்கும் வேறொரு மாகாணம் ஒற்றுமை நாடுகளுடன் சேர்ந்துவிட்டதே யென்ற வெறுப்பு ஏற்பட்டது. இவ்விரு மாகாணங்களுக்கும் உள்ள பகை முன்னிலும் மிகுதி யாயிற்று.

இந்நேரத்தில் அடிமைத் தொழிலை அகற்றுவதெனக் காப்புக் கட்டிய [1]ஆபிரகாம் லிங்கன் என்பவர் அமெரிக்க ஒற்றுமை நாடுகளின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வட மாகாணங்களில் மகிழ்ச்சியும் தென் மாகாணங்களில் அச்சமும் ஏற்பட்டன. சில ஆண்டுகளுக்குள் தென் மாகாணங்கள் ஒற்றுமை நாடுகளைவிட்டுப் பிரிந்து, தனி அரசை நிறுவி, வட மாகாணங்களுடன் போர் தொடுத்தன.

வட மாகாணங்கள் அடிமைத் தனத்தை ஒழிப்பதற்காகவும் தென் மாகாணங்கள் அதை நிலைநிறுத்துவதற்காகவும் நான்காண்டுகளாகக் கடுமையாகப் போரிட்டன. ஊர்களும் நகரங்களும் நாசமாக்கப்பட்டன. இரு திறத்தாரிலும் எண்ணிறந்த மக்கள் உயிர் துறந்தனர். இப்போர் முடிந்த பின்னும், படையிலிருந்து விலகிய போர் வீரர்களாலும் படைத் தலைவர்களாலும் நாடு பல்வகையிலும் நெடுங்காலமாகத் துன்புற்றது.

1. Abraham Lincoln.

எண்பது ஆண்டுகளுக்குமுன் தாம் புரிந்த இவ்வுள்நாட்டுப் போரைப் பின்னோக்கிப் பார்க்கும் தென் மாகாணத்து அமெரிக்க மக்கள் வெட்கமும் வருத்தமும் அடையாரோ? அடிமைத் தனத்தை நிலைநிறுத்தப் போர் புரிவது எவ்வளவு மடமை! ஆனால், எண்பதாண்டுகளுக்கு முன்னிருந்த மக்களுக்கு இவ்வுண்மை புலப்படவில்லை. இப்பொழுது நடக்கும் உலகப் போரைப் பற்றியும் இன்னும் எண்பதாண்டுகளுக்குப் பின்வரும் மக்களும் இங்ஙனமே எண்ணுவாரென்று நாம் திண்ணமாகக் கூறலாம்.

---

4. சமயப் போர்கள்

மக்கள் வாழ்க்கையில், ஒழிந்த போர்களுள் சமயப்போர் முதன்மைபெற்று விளங்குகின்றது. ஏனெனில், கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக உலகத்தின் எந்தப் பகுதியிலும் இருசமயத்தவருக்குள் பண்டைக் காலத்தைப் போலப் பெரும்போர் ஒன்றும் எழவில்லை, சிற்சிலவிடங்களில் அறியாப்பொது மக்களிடையில் சிறு சிறு சச்சரவுகள் எழுவதுண்டு. ஆயினும், இவையும் நாளடைவில் குறைந்துபோம். எனவே, சமயப்போர், ஒழிந்த போர் மட்டுமன்று; இனி எழாப்போர் எனவும் நாம் துணிந்து கூறலாம்.

ஆனால், பண்டை வரலாற்றில் ஒவ்வொருநாட்டிலும் எத்தனை சமயப்போர்கள் நிகழ்ந்துள்ளன! அவற்றால் எத்தனை மக்கள் உயிர் துறந்தனர்! எவ்வளவு

பொருள்கள் வீணாக அழிந்துபோயின! அந்தோ, மக்களை இன்புறச் செய்வதற்கென்று தோன்றிய சமயங்கள், அவர்களைத் துன்புறச் செய்யுங் காரணங்களாக முடிந்தமை எவ்வளவு வருந்தத்தக்கது!

நமது நாட்டில் பெரிய சமயப்போர் ஏதும் எழவில்லை. இதற்குக் காரணம் பல. அவற்றுள் முதன்மையானது, எல்லாச் சமயங்களிலும் உண்மையுண்டு என்னும் பரந்த கொள்கை யுடையவர்களாக நம் மக்கள் விளங்கினமையேயாகும். 'எம்மதமும் சம்மதம்' என்பது பொதுமக்கள் வாயிலும் வருவதொரு பழமொழி. இதற்குக் காரணம் நமது நாட்டில் பலப் பல சமயங்கள் நிலவிவருவதேயாகும். ஏறக்குறைய இருநூறு சமயங்கள் இங்கே நிலவுகின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. இந்து சமயமே ஒரு சிறப்புக் கொள்கையையுடைய தனிச் சமயமன்று. அது பல கொள்கைகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கின்ற ஒரு பொதுச் சமயமாகும். எனவே, சமயப்போர்கள் எழுவதற்குரிய முதன்மையான காரணங்கள் நமது நாட்டில் இல்லையென்பதே துணிபு.

நமது நாட்டை ஆண்ட அரசர்களாலும் சமயப் போர்கள் எழவில்லை. மிகப் பல சமயங்கள் நிறைந்துள்ள நாட்டை ஆளும் அரசர், எந்தச் சமயத்தின் சார்பாக எந்தச் சமயத்துக்குப் பகையாகப் போர் தொடுக்கக்கூடும்! ஆதலால், எல்லாச் சமயத்தினரையும் ஒருங்கே புரப்பது அரசரது கடமையாக இருந்தது. மேலும் அரசரிற் பெரும்பாலோர் தம் குடிகளைப் போலவே பல சமயங்களிலும் அன்புடையவர்களாக விளங்கினர். இங்கிலாந்தைப் போல நம் நாட்டிலும் நிலையான ஓரே பரம்பரை அரசும், அவ்வரசு

மேற்கொள்ளவேண்டிய ஒரே நிலையான சமயமும் அரசியல் திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தால் ஒரு கால் நமது நாட்டிலும் சமயப்போர் நிகழ்ந்திருக்க லாம். இக்காரணமும் இங்கில்லாமையால் நம் நாட்டில் அரசர்களாலுங் கூடப் பெரிய சமயப் போர்கள் நிகழவில்லை.

ஆயினும், ஒரோவமையம் சிற்சில இடங்களில் சிறு சிறு சமயப் போர்கள் நமது நாட்டிலும் நிகழ்ந் துள்ளன. மோரியருக்குப் பின் தோன்றிய [1]சுங்க பரம்பரையைச் சார்ந்த [2]புட்யமித்திரன் என்னும் அர சன், புத்த மடங்களை இடித்துப் பிட்சுக்களைத்துரத்தி இங்ஙனம் புத்தமதத்துக்கும் இந்து மதத்துக்கும் போர் தொடுத்தான் என்று வரலாற்றாசிரியர்களில் ஒருசாரார் கூறுகின்றனர்.

திருஞானசம்பந்த நாயனார் மதுரையம்பதியில் சம ணர்களோடு வாது தொடுத்தமை சைவத்துக்கும் சம ணத்துக்கும் நிகழ்ந்த போருக்கு எடுத்துக் காட்டா கும். இவ்வுண்மையைப் பின்வரும் திருஞானசம்பந்த நாயனாரது தேவாரச் செய்யுளாலேயே அறிந்து கொள்ளலாம்.

"நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள் அரக் கற்கும் அருளினாய்
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே"

நெடுங்காலமாகச் சமயப்போரே இல்லாமல் அமைதி நிலவியிருந்த நமது நாட்டில் சமயப்போரை

1. Sungas. 2. Pushyamitra.

விளைவித்தவர்கள் மகமதியராவர். இச்சமயத்தவர் பிறசமயத்தவர்க்கு ஓரோவமையம் பலவுரிமைகளை வழங்கியுள்ளனர். எனினும் பொதுப்படக் கூறினல் மகமதியர் பெரும்பாலும் பிறசம்யத்தினருடன் எப்பொழுதும் போர் புரிந்து வந்தவர்களே ஆவர்.

இந்தியாவின்மேற் படையெடுத்து வந்த மகமதியரிற் பெரும்பாலார் இந்து கோவில்களை இடித்தும் அவற்றின் சிலைகளை உடைத்தும் ஊர்களைக் கொள்ளையிட்டும், மக்களிற் பலரை வாளுக்கு இரையாக்கியும் சென்றனர். கசினி மகமது ஏறக்குறையப் பதினேழு முறை இங்ஙனம் இந்தியாவின்மேற் படையெடுத்தான். எல்லா மகமதிய அரசர்களும், மகமதியர் அல்லாத எல்லாக் குடிகளையும் [1] சிசியா என்னும் சமய வரி கொடுக்கும்படி ஏற்பாடு செய்தனர். ஔரங்கசீப் என்னும் மொகலாய அரசன் இந்து கோவில்கள் பலவற்றை இடித்து அவற்றின் கற்களாற் பள்ளிவாசல் கட்டிச் சிலைகளை வாசற் படிகளாக அமைத்தான் என்று வரலாற்றிலிருந்து நாம் அறிகிறோம்.

மகமதியருக்கும் இந்தியர்களுக்கும் நிகழ்ந்த போர்களைவிட மகமதியருக்கும் கிறித்துவர்களுக்கும் நிகழ்ந்த போர்களே மிகவும் கடுமையானவை. இவற்றுள் சிலுவைப் போர் என்பது பேர்வாய்ந்தது. இப்போருக்குக் காரணம் கிறித்துவர்களுக்கு உரிமையான பலத்தீனு நாட்டை மகமதியர் கைப்பற்றி அந்நாட்டிலுள்ள புண்ணியத் திருப்பதிகளைத் தொழச் சென்ற கிறித்துவ அடியார்களைத் துன்புறுத்தியதாகும். எருசலேம் நகரத்துத் தலைமைக்குரு[2] ஒருவரை

1. Jijya. 2. Patriarch.

மகமதியர் தெருத் தெருவாக இழுத்துச் சென்று, இறுதியில் ஒரு படுகுழியில் தள்ளினர். கிறித்துவான வர் அடக்கஞ் செய்யப்பட்டிருந்த கல்லறையின் அண்டையில் தொழுதவர்கள் அவ்விடத்திலேயே வீழ்ந்திறக்கும்படி, அவர்கள் தலைகளைச் சீவினர். ஓராண்டில் மட்டும், செர்மனியிலிருந்து பலத்தீனுவுக்குச் சென்ற ஏழாயிரம் கிறித்துவர்களில் ஐயாயிரம் பேர் இங்ஙனம் கொலையுண்டனர். இத்தகைய நிகழ்ச்சிகளைக் கேட்ட ஐரோப்பிய நாட்டுக் கிறித்துவர்கள் திடுக்கிட்டனர். "ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உன் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு," என்று போதித்த கிறித்துவைப் பின் பற்றியவர்கள் என்ன செய்திருக்கவேண்டும்? ஒன்று: நாம் மேலே விவரித்த துன்பங்களையெல்லாம் பொறுத்திருக்கவேண்டும். அன்றிப், பலத்தீனு நாட்டுக்கு அடியார்கள் செல்லாதபடி தடுத்திருக்க வேண்டும். அடியார்கள் செல்வது இன்றியமையாததாக இருந்தால், அவர்களைத் துன்புறுத்தாதிருக்கும்படி மகமதிய அரசருக்கு வேண்டுகோள்கள் விடுத்திருக்கவேண்டும். இங்ஙனம் செய்திருந்தால், நாளடைவில் இருசமயத்தினருக்கும் ஏற்பட்டிருந்த பகை குறைந்து அமைதி பெருகியிருக்கும். இன்னும் சிலுவைப் போர்களால் ஐரோப்பிய மக்களுக்கும், கிறித்து சமயத்துக்கும் பிற்காலங்களில் உண்டான பெருங்கேடுகளும் விளைந்திரா. ஆனல் அந்தோ! மகமதியர் எங்ஙனம் தம் சமயத்துக்காகப் போரிடுவது புண்ணியமெனக் கருதினர்களோ, அங்ஙனமே கிறித்துவர்களும் தம் சமயத்துக்காகப் போரிடுவது புண்ணியமெனவே கருதி, மகமதியருடன் போர் தொடுத்தனர். இரு சமயத்தினரும்

விலங்குகளைவிடக் கேவலமாக ஒருவரை யொருவர் வெட்டி வீழ்த்திப் போர் புரிந்தனர். இறுதியில் இரு திறத்தவரும் பேர் இழப்புக் குள்ளாயினர். போரின் பயன் இதுவன்றி வேறு யாது?

முதன் முதலாக இச்சிலுவைப் போர் புரிய அறு பதினுயிரம் மக்கள் ஐரோப்பாவை விட்டுக் கிளம்பி னர். பலர் உணவின்றி வழியிலேயே உயிர் துறந்தனர். மற்றும் பலர் வழிப்பறிக் கள்வரால் தாக்கப்பட்டுக் கொலையுண்டனர். ஒரு பகுதியினர் அங்கேரி[1] நாட்டு வழியாகச் சென்று உணவில்லாமல் அந்நாட்டுக் கிறித் துவ மக்களையே கொள்ளையிடத் தொடங்க, அக் கிறித்துவர்கள் இவ்வைரோப்பியரைத் துரத்தியடித் துப் பலரை நெருப்புக் கிரையாக்கினர். காடுகளுக் குள் ஓடித் தப்பிய ஒரு சிலரே உயிர்பிழைத்தனர். 'இம்முதற்கூட்டத்துப் போர்வீரர்களின் எலும்புக் கூடுகளே, இவர்களுக்குப்பின் புறப்பட்டு வந்த இரண் டாங் கூட்டத்துப் போர்வீரர்களுக்கு (நாற்பதினு யிரம் பேர்) வழிகாட்டிகளாக விளங்கின,' என்று ஓர் ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். 'சிலுவைப் போர் வீரர்கள் நேரே பரதீசுக்குப் போய்ச் சேருவர்' எனக் கிறித்துசமயத் தலைவரான பாப்பு[2] கூறியதில் அடங்கி யிருந்த உண்மை இதுபோலும்!

1095-ஆம் ஆண்டுக்கும் *1290*-ஆம் ஆண்டுக்கும் இடையில், ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாக ஏழு பெரிய சிலுவைப் போர்கள் நிகழ்ந்தன. இவற் றால் ஐரோப்பிய மக்களுக்குப் பல தீமைகள் விளைந்த னவேயன்றி, நன்மைகள் மிகுதியாக உண்டாகவில்லை. ஐரோப்பிய சிலுவைப் போர்வீரர்களிற் பெரும்பா

1 Hungary. 2 Pope.

லோர் கான்ஸ்டான்டி நோபிள் அரசையும் அதன் குடிகளையும் கொள்ளையிட்டதனால் இவ்விரு கிறித்துவக் கூட்டத்தினருக்கும் நிலையான பெரும்பகை எழுந்தது. மேலும், போருக்குச் சென்ற அரசர்களிலும் செல்வர்களிலும் பலரிடையே ஒருவருக்கொருவர் மனத் தாங்கல்களும் சண்டைகளும் விளைந்தன. இதனால் ஒவ்வோர் ஐரோப்பிய நாட்டிலும் அரசியற் குழப்பங்களும் உள்நாட்டுப் போர்களும் தோன்றின.

இவையெல்லாவற்றையும் விடப் பெருங்கேடாக விளைந்தது இப்போர்களைத் தூண்டி நடத்திய பாப்புவானவரின் ஆட்சி, மிகுந்ததேயாகும். பாப்புவானவர் தமது ஆட்சியைச் சமயச் சீர்திருத்தத்துக்காகப் பயன்படுத்த முயன்றார். இம்முயற்சியை எதிர்த்துச் செர்மன் அரசர் பாப்புவின்மேற் போர் தொடுத்தார். இதனால் ஏறக்குறைய இருநூறுண்டாக ஐரோப்பாவில் கிறித்துசமயத் தலைவருக்கும் கிறித்துவ அரசர்களுக்கும் சமய ஆட்சிப் போர் நிகழ்ந்தது.

இப்போரினால் செர்மன் அரசு அழிந்து கெட்டது. இத்தலியும் பல துறையில் இழப்படைந்தது. பாப்புவானவர் வெற்றிபெற்றார்; ஆனால் இவ்வெற்றி கிறித்து சமய ஆட்சி முறைக்குப் பெருங்கேடு விளைத்தது. எப்படியெனில், பாப்புவானவரின் ஆட்சியின் கீழ்ப் பற்பல வகையான தப்பறைகள் தோன்றின. இத்தப்பறைகளை ஒழிப்பதற்காக ஆங்காங்கே சீர்திருத்தக்காரர் தோன்றிப் பாப்புவின் ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று முயற்சி செய்தனர். இதைப் பாப்புவானவர் தடுக்கவே, சீர்திருத்தக்காரர்களும் அரசர்களும் பாப்புவின் ஆட்சியை விலக்கித் தத்தம் நாட்டிலுள்ள கிறித்து சமய ஆட்சியைத்

தாங்களே ஏற்றுக்கொண்டு, கிறித்து சமயத்திற் பற் பல பிரிவுகளை ஏற்படுத்திவிட்டனர். இவையெல்லாம் சிலுவைப் போரினால் விளைந்த கேடுகளாகும்! சிலு வைப் போரினால் விளைந்த நன்மைகள் யாவை? அவை செல்வர்கள் ஆட்சி அழிந்ததும், ஐரோப்பாவுக்கும் கீழ் நாடுகளுக்கும் வாணிகம், கலைமுதலியதுறைகளில் தொடர்பு ஏற்பட்டதும் போன்றவை. நன்மைகளை யும் தீமைகளையும் சீர்தூக்கினால் தீமைகளே மிகுதி யெனப் புலப்படும். போரினால் உண்டாகும் நன்மை களைவிட அதனால் விளையும் தீமைகளே பல மடங் காகும் என்னும் உண்மையை இச்சிலுவைப் போர் கள் நன்கு வலியுறுத்துகின்றன. இது நிற்க;

மகமதியருக்கும் கிறித்துவர்களுக்கும் நடந்த சிலுவைப் போர்களைவிட மிகக் கொடிய போர்கள், கிறித்து சமயப் பிரிவினருக்குள்ளேயே நிகழ்ந்த போர்களாகும்.

முதலில் கிறித்து சமயம் கத்தோலிக்[1] பிராட் டெத்தாந்து[2] என்னும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்தது. பின்னர்ப் பிராட்டெத்தாந்துப் பிரிவில், லுத்தரர்[3] கால்வினியர்[4] சுவிங்கிலியர்[5] என மூன்று பெரிய உட்பிரிவினரும், புயூரிட்டர்[6] பிரிசுபிடிடீரியர்[7] முதலான மிகப் பல சிறு சிறு உட்பிரிவினரும் தோன் றினர்.

ஒவ்வொரு பிரிவினரும் பிற பிரிவினரைக் கொல் வதும், அவர்கள் பொருள்களைக் கொள்ளையிடுவதும் தத்தம் பிரிவுக்குத் தாம் ஆற்றுந் தொண்டு எனக்

---

1 Catholic. 2 Protestant. 3 Lutherans.
4 Calvinists. 5 Zwinglians. 6 Puritans.
7 Presbyterians.

கருதி, ஏறக்குறைய ஒரு நூற்றாண்டாக ஐரோப்பா முழுவதையும் பெரும் போர்களில் ஆழ்த்தினர். மேலும், ஒவ்வொரு நாட்டிலும் கிறித்து சமயத்தின் ஓரோவொரு பிரிவு நாட்டுச் சமயமாக அமைக்கப் பட்டது. இங்கிலாந்தில் மேரி அரசியின் காலத்தில் (1553-58) கத்தோலிக்கப் பிரிவும், எலிசபெத்து அரசியின் காலத்தில் (1558-1603) ஆங்கிலச் சவைப்[1] பிரிவும் நாட்டுச் சமயமாக நிறுவப்பட்டன. மேரி அரசி கத்தோலிக்க ரல்லாதாரை நெருப்பி லிட்டுச் சுட்டுக் கொன்றாள். எலிசபெத்து, கத்தோலிக்கரையும் ஆங்கிலச் சவை அமைப்பை ஒப்புக்கொள்ள மறுத்த பிற பிராட்டெஸ்டாந்துப் பிரிவினரையும் நெருப்பிலிட்டுச் சுட்டுக் கொன்றாள். இங்ஙனமே ஒவ்வோர் ஐரோப்பிய நாட்டிலும், ஒவ்வோர் அரசும் ஒவ்வொரு பிரிவை நாட்டுச் சமயமாக அமைத்து, அதை ஒப்புக்கொள்ள மறுத்த பிற பிரிவினரைப் பலவாறும் துன்புறுத்தியது.

இத்தகைய சமயப் போர்களிற் கடைசியாக நடந்த முப்பதாண்டுப் போர்[2] மிகவும் கடுமையானது. இதைச் சற்று விளக்கமாகக் கூறுவோம். இதிலிருந்து சமயப் போர்களால் விளைந்த கேடுகளும் இழப்புகளும் தெளிவாக விளங்கும்.

இப்போர் 1617-ம் ஆண்டில் ஆத்திரிய அரசுக்குட்பட்ட பொகிமியா[3] என்னும் நாட்டில் தொடங்கிற்று. பொகிமியர் பிராட்டெஸ்டாந்துப் பிரிவினர். ஆனால் பெர்டினண்டு[4] என்னும் அவர்களின் ஆத்திரிய அரசனோ சமயப்பற்று மிகுந்த கத்தோலிக்கப் பிரி

---

1 Church of England. 2 Thirty Year's War.
3 Bohemia. 4 Ferdinand II.

வினன். தான் ஆட்சிக்கு வந்தவுடன் அவன் பொகிமி யருடைய பிராட்டெத்தாந்துக் கோவில்களையெல் லாம் இடித்துக் கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்பப் பெரு முயற்சி செய்தான். பொகிமியர் இம்முயற் சியை எதிர்த்துப் பிராக்[1] என்னும் தலைநகரிலுள்ள அரசியல் அலுவலாளர்களைக் கொன்று, செர்மனியி லுள்ள பிரடெரிக்[2] என்னும் சிற்றரசன் ஒருவனைத் தமக்கு அரசனாக ஏற்றுக்கொண்டு பெர்டினண்டி னுடைய அரசை விளக்கினர்.

இங்ஙனமாகக் கத்தோலிக்-பிராட்டெத்தாந்து சமய வேறுபாடுகள் காரணமாகப் பிறந்த இச்சிறு பொகிமியப் போரே, இறுதியில் ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் பொதுவான பெரும் போராக முற்றிற்று.

புதிய பொகிமிய அரசனுன பிரடெரிக் இங்கி லாந்து அரசனுன முதல் சார்லசின் மருமகன். எனவே, பிரடெரிக்குக்கு உதவி புரிவதற்காகச் சார்லசு பார்லி மெந்தின் ஆணையின்றி வரிகளை விதித்துத் தன் குடி களுடன் உள்நாட்டுப் போரில் இறங்கி, அதன் பய ஞக இறுதியில் தன் தலையையும் இழந்தான்.

பிரடெரிக்கின் முடிவும் வருந்தத்தக்கதாகவே முடிந்தது. பெர்டினண்டு தனது பெரும் படையுடன் பொகிமியாவுக்குட் புகுந்து பிரடெரிக்கைப் போரில் வென்று, பின் ஜெர்மனிக்கும் சென்று, அங்கிருந்த பிரடெரிக்கின் சிற்றரசரைப் பிடுங்கி, அதை ஒரு கத் தோலிக்கச் சிற்றரசனுக்குக் கொடுத்துப் பெரும் வெற்றி பெற்றான். "குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந் தோர் நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணு

1 Prague 2. Frederick

வர்'' என்பதற்கு இலக்கியமாகப் ப்ரெடெரிக் ஊரூராக அலைந்து திரிந்து முடிவில் வறுமையால் மாண்டான்.

பெர்டினண்டு அரசனின் பெரும் வெற்றி செர்மனியின் மற்றைச் சிற்றரசர்களுக்கெல்லாம் வருத்தத்தையும் அச்சத்தையும் அளித்தது. ஏனெனில் அவர்களிற் பெரும்பாலோர் பிராட்டெஸ்தாந்துப்பிரிவினர்; மேலும் பெர்டினண்டு செர்மனியின் பேரரசன். ஆதலின், செர்மனியில் கத்தோலிக்கச் சமயம் நிறுவப்படுமென அவர்கள் அஞ்சி, நான்காம் கிறித்துவன்[1] என்னும் டென்மார்க்கு அரசனைத் துணையாகக் கொண்டு, பெர்டினண்டு அரசன்மேற் போர் தொடுத்தனர்.

டென்மார்க் அரசன் பெரும் வெற்றி பெறுவோம் எனக் கருதிப் போரில் இறங்கினன். ஆனல் இலட்டர்[2] என்னுமிடத்தில் 1629-ம் ஆண்டில் மிகப் பெருந் தோல்வியடைந்து, இனி, ஒருபொழுதும் இப்போரில் தலையிடுவதில்லையென்று உறுதிகூறித் தலையிறக்கத்துடன் தன் நாட்டுக்குத் திரும்பிச் சென்றான். செர்மன் சிற்றரசர்களின் நிலைமை முன்னிலுங் கேடாக முடிந்தது! அவர்களுடைய நிலங்களிற் பெரும் பகுதி பிடுங்கப்பட்டுக் கத்தோலிக்கச் சிற்றரசர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

செர்மன் சிற்றரசர்களுக்கு நேர்ந்த துன்பத்தைக் கண்ட அடால்பசு[3] என்னும் சுவீடன் நாட்டுப் பிராட்டெஸ்தாந்தரசன் தன் சமயத்தினருக்கு உதவி செய்ய வேண்டுமென்று முடிவு செய்து, 1630-ஆம் ஆண்டில் பெர்டினண்டு அரசன்மேல் போர் தொடுத்தான். போரில் வெற்றி பெற்றால் செர்மன் சிற்றர

1 Christian IV. 2 Lutter. 3 Adolphus

சர்களுடைய நாட்டில் ஒரு பகுதி தனக்குக் கிடைக்கு மென்றும், சுவீடனின் வாணிகம் ஓங்குமென்றும் அவன் எண்ணினான். ஆனால் பேராசை பேரிழப்பாக முடிந்தது! இலட்சன்[1] என்னுமிடத்தில் நடந்த போரில் அவன் வெற்றிபெற்றபோதிலும் தன் உயிரை இழக்க நேர்ந்தது. இதனால் சுவீடனும் தனது உயர்ந்த நிலையை இழந்தது. போரினாற் கெட்டழிந்த அரசு களில் சுவீடனும் ஒன்று என நாம் முன்னரே கூறி யுள்ளோமன்றோ?

பெர்டினண்டு அரசனின் வெற்றி ஒப்புயர்வின்றி விளங்கிற்று. இது கத்தோலிக்க அரசுகளுக்கெல்லாம் களிப்பூட்டும் நிகழ்ச்சியாகும். ஆனால் ஆத்திரியாவின் எதிரியான கத்தோலிக்கப் பிரான்சுக்கும் அதன் முதலமைச்சரான ரிச்லூ[2] என்னும் கத்தோலிக்கக் குருவுக்குமோ அது பெருங் கவலையை உண்டாக் கிற்று! எனவே, பிரான்சு பெர்டினண்டின்மேற் போர் தொடங்கிற்று. பெரிய பெரிய படைகளை ஆத்திரி யாவுக்குள்ளும், அதன் துணைநாடான ஸ்பெயினுக்குள் ளும் அனுப்பிற்று. முடிவில் வெற்றிபெற்றது. 1648 ல் பெர்டினண்டு அரசன் இறந்தான். போரும் முடிந்தது.

உலகத்தில் நடந்த போர்கள் எல்லாவற்றிலும், பல தீமைகளும் சில நன்மைகளும் விளைந்துள்ளன. ஆனால் இந்த முப்பதாண்டுச் சமயப் போரில் மட்டும் ஒருவகையான நன்மையும் உண்டாகவில்லை. பிரான் சுக்கு மட்டும் சில சிறு நிலப் பகுதிகள் கிடைத்தன. மற்ற எல்லா நாடுகளுக்கும் மிகப் பல இழப்புகளே விளைந்தன. செர்மனியில் மட்டும் மூன்றில் இரண்டு

1 Richelieu. 2 Lutzen.

பகுதி மக்கள் கொல்லப்பட்டனர். ஆறில் ஐந்து பகுதி ஊர்கள் அழிக்கப்பட்டன. எல்லா இடங்களிலும் பயிர்த்தொழில், வணிகம், கைத்தொழில், கல்வி ஆகிய நன்முயற்சிகளெல்லாம் ஒழிந்தன. ஐம்பதாண்டுகள் வரைக்கும் செர்மனி ஒரு பாலை நிலம் போலக் கிடந்தது என்று வரலாற்று ஆசிரியர் கூறுகின்றனர்!

"எல்லையும் இரவும் எண்ணாய் பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலின் நல்ல
இல்ல வாகுப."

என்னும் புறப்பாட்டடிகள் இங்கே நினைவுக்கு வருகின்றன.

இதற்குமுன் ஐரோப்பாவில் நடந்த எந்தப் போரினும் இத்துணைப் பெருங் கேடுகள் எல்லா நாடுகளிலும் ஒருங்கே விளைந்தில. இவற்றைக் கண்ணுற்ற ஐரோப்பிய மக்கள் சமயப் போர்களை முற்றிலும் ஒழித்தனர். முப்பதாண்டுச் சமயப் போரிற் போலச் சிறுமையடைந்தாலன்றி ஐரோப்பியர் தாம் இப்பொழுது புரிந்து வருவதுபோன்ற பிற போர்களையும் ஒழியார் போலும்! ஆயினும் சமயப் போர்களை ஒழித்துச் சமய வுலகில் அமைதியை நிறுவிய அம்மக்கள் அரசியல் உலகிலும் அங்ஙனம் செய்வரேல் அச்செயல் எத்துணைப் பெருமை வாய்ந்ததா யிருக்கும்!

5. உரிமைப் போர்

போர் இழிந்தது; அரசர்களால் எழும் போர் அதனினும் இழிந்தது; உள்நாட்டுப் போர் அதனினும் இழிந்தது; சமயப்போர் அதனினும் இழிந்தது. இங்ஙனம் கூறியுள்ளோம் இதற்கு முந்தின பகுதிகளில். ஆனால், இவ்வுண்மைகள் அடியிற் கண்ட போர்களுக்குப் பொருந்துமா?

முதலாவது: ஒருநாட்டு மக்கள் தம் நாட்டின் கொடுங்கோ லாட்சியை ஒழிக்கத் தம் அரசை எதிர்த்துப் போர்புரிவது முறையா? அன்று? கொடுங்கோலாட்சியின்கீழ் வாழ்வதைவிடக் கடும் புலி வாழுங் காட்டில் வாழ்வது நன்று என்பது நம் நாட்டுப் பழமொழியன்றோ? இங்ஙனமாயின் ஒருநாட்டின் ஆட்சி முறையிலுள்ள கேடுகளை ஒழிக்க, அந்நாட்டு மக்கள் புரியும் போரை இழிவெனக் கூறல் தகுமா?

இரண்டாவது: ஒரு நாட்டு மக்களின் உரிமைகளை அழிக்க எதிரிகள் வரும்போது, அவ்வெதிரிகளை எதிர்த்துப் போரிடுவது முறையா? அன்று? போர் புரியா ஆண்மக்களை நாம் ஆண்மக்கள் என்று அழைப்போமோ? அம்மக்கள் எதிரிகளுக்கு அஞ்சித் தலைகுனிந்தால் அவர்களைப் பேடிகள் என்று இகழோமோ? தம் உரிமைகளை இழந்து உயிர்வாழ்வதை விட அம்மக்கள் போர்க்களத்தில் இறந்தழிவது மாண்பன்றோ?

"என்னொடு பொருதும் என்ப அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறங் காணே னாயின்,..."

மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலின் ஒரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே"

என்னும் புறநானூற்றுப் பாட்டில் வீரவுணர்வு எவ்வளவு வீறிடுகின்றது!

மூன்ருவது :—ஒரு நாடு ஒரு காலத்தில் வேருெரு நாட்டுக்கு அடிமையாகவிருந்து, பின் அது தனது உரிமையை அடைய விரும்பித் தன்னை அடிமை கொண்ட நாட்டுடன் எதிர்த்துத் தன் உரிமைக்காகப் புரியும் போர் முறையானதா? அன்ருே? நாட்டின் உரிமைக்காகப் புரியும் போர் மக்களின் வீரத்தையும் பெருமையையும் பெருக்குமன்ருே? இத்தகைய போர்களை இழிவெனக் கூறுதல் பொருந்துமா?

நான்காவது :—ஒரு நாட்டிலோ, உலகத்தின் ஒரு பகுதியிலோ ஓரரசு தோன்றி, இது மக்களின் அறத்துக்கும் நாகரிகத்துக்கும் கேடு விளைவித்து வந்தால் அதை எதிர்த்துப் போர் புரிவது முறையா? அன்ருே? இத்தகைய போர்களை மக்களின் முதற் கடமையெனப் போற்றுவோமா? அன்றி, இவற்றிற் பல உயிர்கள் அழிவதுபற்றி இவற்றை இழிந்தனவெனக் கூறுவோமா?

மேற்கூறிய போர்களை வரலாற்று வாயிலாக நாம் ஆராய்ந்தால், வினுக்களுக் கேற்ற விடைகளைத் தெரிந்துகொள்ளலாம்.

1

கொடுங்கோ லாட்சியை ஒழிக்கப் புரிந்த போர்களில் பிரான்சின் புரட்சிப் போர்[1] பேர்பெற்றது.

1. Revolutionary war.

இந்நிகழ்ச்சி மக்கள் வரலாற்றில் இணையற்றது எனக் கொண்டாடப்படுவது. ஏனெனில், இப்புரட்சிக்குப் பின்னரே ஐரோப்பாவில் குடியாட்சி முறை எல்லா நாடுகளிலும் நிறுவப்பட்டது. மேலும் மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படையான உரிமை (சுதந்தரம்),[1] பொதுமை (சமத்வம்)[2] ஒரு பிறப்பு (சகோதரத்துவம்)[3] என்னும் மூவகைக் கோட்பாடுகளும் பிரஞ்சுப் புரட்சியின் பயனேயாம். இதுபோன்ற காரணங்களால் பிரான்சின் புரட்சிப் போர் மக்கள் வாழ்க்கையில் ஒரு புதிய ஊழியைப் பிறப்பித்த நிகழ்ச்சியெனப் போற்றப்படுகின்றது.

இப்போர் 1789-ஆம் ஆண்டில் தொடங்கிற்று. பிரான்சின் சட்ட மன்றத்து உறுப்பினர் விரும்பியபடி அரசன் நடக்கமறுத்ததனால், பாரிசு[4] நகரத்து மக்கள் பாசடைல்[5] என்னும் சிறைக்கூடத்தைத் தகர்த்து அதிலுள்ள கைதிகளை விடுதலை செய்தனர். அதன்பின், 10,000 பெண்கள் அரசன் வதிந்துவந்த வெர்சல்[6] என்னும் நகருக்குச் சென்று, அரசனையும், அரசியையும் கைதியாக்கி அவர்களைப் பாரிசுக்குக் கொணர்ந்து காவலில் வைத்தனர். இதற்கிடையில் சட்ட மன்று உறுப்பினர் பிரான்சின் அரசியல், வாழ்க்கை நிலை, சமயத் திட்டம் முதலிய பல துறைகளிலுமுள்ள எல்லாக் கேடுபாடுகளையும் ஒழித்துப் புதியதோர் அரசியல் திட்டத்தையும் அமைத்து, அரசன் அதன்படி நடக்க வேண்டுமெனக் கேட்டனர். இப்புதிய அரசியல் திட்டத்தை ஒப்புக்கொள்ளுவதைவிட நாட்டைவிட்டு ஓடிப்போய்விடுவதே நலமென்று

1. Liberty. 2. Equality 3. Fraternity. 4. Paris. 5. Bastile. 6. Versailles.

அரசன் எண்ணிப் பாரிசைவிட்டு வெளியேறினான். ஆனால், இடைவழியிற் பகைவர் கையிற் பட்டு மீண்டும் கைது செய்யப்பட்டான்.

இதற்கிடையில், பிரஞ்சு அரசன் சார்பாக ஆஸ்திரியாவும் பிரசியாவும்[1] பிரான்சின்மேல் போர் தொடங்கின. மன்னன் சூழ்ச்சியால் இப்போர்எழுந்ததெனப் பிரஞ்சு மக்கள் முடிவு செய்து 1794-ஆம் ஆண்டில் அரசனை வாளுக் கிரையாக்கினர். அரசனை ஆதரித்த பல்லாயிரக்கணக்கான மக்களையும் அங்ஙனமே கொன்றனர். பிரான்சை எதிர்த்துப் போர் புரிய வந்த பகையரசர்களை யெல்லாம் புறங்காட்டி ஓடச்செய்தனர். மேலும், அன்னவர் நாடுகளுக்கெல்லாம் தம் படைகளை யனுப்பி, அந்நாட்டு மக்களின் அரசியலிலுள்ள குறைகளையும் நீக்கினர். இங்ஙனமாகத் தம் நாட்டிலும் பிறநாடுகளிலும் இருந்த எல்லாக் கேடுகளையும் பிரஞ்சு மக்கள் இப்புரட்சிப் போரினால் ஒழித்தனர்.

இப்புரட்சிப்போரில்லாமல் பிரான்சின் கேடுகளை ஒழித்திருக்க முடியுமா என்பதும், இப்போரில்லாமல் ஐரோப்பாவின் ஏனை நாடுகளில் குடியரசை ஏற்படுத்தியிருக்கமுடியுமா வென்பதும் வரலாற்றைக் கற்போர் மனத்தில் எழும் கேள்விகள். இக்கேள்விகளுக்கு நாம் இங்கு விடையளிக்க வேண்டுவதில்லை. இப்போர் இறந்தகாலநிகழ்ச்சி; இறந்தகால நிகழ்ச்சியொன்று இங்ஙனமில்லாமல் வேறு வகையாய் நிகழ்ந்திருக்கவேண்டும் எனக் கூறுவதில் யாது பயன்? ஆனால் ஒன்று உறுதி. அஃது இப்புரட்சிப் போரினால் பிரான்சுக்கும் ஐரோப்பாவுக்கும் நன்மை

1. Prussia.

கள் விளைந்தமை எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை தீமைகளும் விளைந்தன என்பது.

தம் உரிமைகளுக்காகத் தொடங்கிய போரினுல் பிரஞ்சுமக்கள் தம் எல்லா உரிமைகளையும் இழந்தனர். டான்டன்[1] ரோபசுபீயர்[2] என்னும் தலைவர்கள், தம் அச்சத் தன்மையான ஆட்சிக்காலத்தில்[3] அரசினரால் ஐயுறப் பட்ட எண்ணிறந்த மக்களை நடுநிலை உசாவலின்றித் தூக்கிலிட்டுக் கொன்றனர். அவர்கள் பொருள்களையும் பறிமுதல் செய்தனர். இறுதியில் எல்லாப் பிரஞ்சுமக்களும் நெப்போலியனுடைய கொடுங் கோலாட்சிக்குக் கீழ்ப்பட்டனர்; ஐரோப்பிய நாடுகள்மேலெல்லாம் வீண் போர்கள் தொடுக்க ஏவப் பட்டனர்; முடிவில் பெருஞ்சிறுமையு மடைந்தனர். புரட்சிப் போரினுல் விளைந்த நன்மைகளிற் பல அதனுல் விளைந்த தீமைகளாற் கெட்டழிந்தன! மேலும், 1830-ஆம் ஆண்டிலும், 1848-ஆம் ஆண்டிலும் மீண்டும் புரட்சிப் போர்கள் எழுந்தன. இறுதியில் கண்ட ஆண்டுக்குப் பின்னரே பிரஞ்சு மக்கள் தம் அரசியல் உரிமைகளைப் பெற்றனர். இவ்வுரிமைகளையுங் கூடத் தற்போதுள்ள பெடேயின்[4] ஆட்சியின்கீழ் இழந்து நிற்கின்றனர்! அரசியல் உரிமைகளுக்காகப் புரியும் போர்களால் விளையும் நன்மைகள் நிலையற்றன வென்னும் உண்மையைப் பிரஞ்சுமக்கள் வரலாறு உணர்த்துகின்றதன்றே?

இவ்வரலாற்றையும் ஆங்கிலேயரின் அரசியல் உரிமை வரலாற்றையும் ஒப்பு நோக்கினுல் போரில்லாமற் பெறப்படும் உரிமைகளே நிலைபெறும் உரிமைகள் என்னும் உண்மை வெள்ளிடை மலைபோல

1. Danton. 2. Robespierre. 3. Reign of Terror. 4. Petain.

விளங்கும். 1215-ஆம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள குருக்கள், செல்வர்கள், பொது மக்கள் ஆகிய மூவகைப் பிரிவினரும் ஒன்று சேர்ந்து, போர் புரியாமலே சான்[1] என்னும் அரசனைக் குடிகளின் உரிமைகள் பொறிக்கப்பட்ட ஒரு பட்டையத்தில் கையெழுத்திடச் செய்தனர். இப்பெரும் பட்டையமே[2] ஆங்கில அரசியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது. இதை அரசியல் உரிமைகள் அடங்கிய "பைபில்"[3] என ஆங்கிலேயர் கொண்டாடுகின்றனர். இப்பெரும் அரசியல் வெற்றி போரினால் விளைந்ததன்றென்பதை நாம் மீண்டும் வலியுறுத்த வேண்டியதில்லை.

ஆங்கிலேயரின் வரலாற்றில் 1215-ஆம் ஆண்டில் பெற்ற இவ்வெற்றியைவிடப் பின்னும் பெருஞ்சிறப்பு வாய்ந்தது 1688-ஆம் ஆண்டில் பெற்ற அரசியல் வெற்றி என்னலாம். இவ்வெற்றியும் போரிலிருந்து தோன்றியதன்று. நாம் முற்கூறியபடி 1688-ஆம் ஆண்டில் இரண்டாம் சேம்சு அரசன் நாட்டைவிட்டு ஓடினான்.

அவ்வமையம் ஆங்கிலத்தலைவர்கள் பலர் ஒன்றுகூடி, ஆலந்து நாட்டரசனை மூன்றாம் உல்லியம் அரசனையும் மேரி அரசியையும் இங்கிலாந்தின் அரசர்களாக ஏற்றுக்கொண்டு அரசர்கள் பார்லிமெந்தின் ஆணைப்படி ஆட்சி புரியவேண்டுமென்று சட்டமியற்றினார்கள். இந்நிகழ்ச்சியைத் தான் ஆங்கிலேயர் தம் வரலாற்றில் சிறப்பு வாய்ந்த புரட்சி[4] என்றும், போரில்லாப் புரட்சி[5] என்றும் போற்றுகின்றனர். இப்புரட்சி காரணமாக ஒரு சிறு போரும்

1. John. 2. Magna Carta. 3. Bible. 4. Glorious Revolution. 5. Bloo Dless Revolution.

எழவில்லை. ஓர் உயிரும் இறக்கவில்லை. இங்ஙனம் பெற்ற வெற்றியே ஆங்கிலேயரின் அரசியல் உரிமைகளை நிலைபெற்றிலங்கச் செய்கின்றது. இதைவிடப் பெருமை வேறு யாது வேண்டும்?

2

ஒரு நாட்டின் உரிமையை அழிக்க ஓர் எதிரி வருங்காலத்து, அந்நாட்டு அரசனோ, அம்மக்களோ அவ்வெதிரியை எதிர்த்துப் போர் புரிந்ததற்கு நம் நாட்டு வரலாற்றிலும் எடுத்துக்காட்டுகள் உள. அலெக்சாந்தர்[1] என்னும் மாபெருங் கிரேக்க அரசன் இந்தியாவின்மேற் படையெடுத்து வந்த காலத்தில் (கி. மு. 326) சீலம்[2] என்னும் ஆற்றங்கரையில் அவ்வரசனை எதிர்த்துப் போர்புரிந்த போரசு[3] என்னும் வீரனும்; மகமது கோரி[4] முதல்தடவை இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தபொழுது (கி. பி. 1191) அவனைப் புறங்காட்டி ஓடச் செய்த பிரிதிவிராசு[5] என்னும் அரசிளைஞனும்; அக்பர் என்னும் மொகலாயப் பேரரசனுக்குப் பணிய மறுத்ததனால், தன் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டுப் பன்னிரண்டாண்டுகளாகக் காடுகளிலும் மலைகளிலும் பதுங்கியிருந்து, இறுதியில் தன் நாட்டைக் கைப்பற்றிய பிரதாபசிங்[6] என்னும் சித்தூர்[7] அரசனும்; இந்து சமயத்தை அழிக்க முயற்சி செய்த ஔரங்கசீப் என்னும் மொகலாய மன்னனை எதிர்த்துப் போர் புரிந்த சிவாஜி[8], ராசாராம்[9], தாராபாய்[10] என்னும் மகாராட்டிர மக்களும் இன்னும் இவர்களைப்போன்ற எண்ணிறந்த

1. Alexander. 2. Jhelum. 3. Porus. 4. Mohammad Ghori. 5 Prithiviraj. 6. Pratab Singh. 6. Chittoor. 8. Shivaji. 9. Raja Ram. 10. Lara Bai.

வீரர் பலரும் நம்நாட்டுக்கு அணிகலன்களாகவல்லவா விளங்குகின்றனர்! இங்ஙனம் அழியாப் புகழுடன் வாழும் வீரர்களில்லா நாடு மணமில்லாத மலரை யொக்குமன்றோ? இம்மக்கள் புரிந்தபோரை இழிந்த தெனக் கூறல் தகுமா?

கிரேக்க மக்கள் வரலாற்றிலும் இத்தகைய வீரச் செயல்கள் நிறைந்த பல நிகழ்ச்சிகள் உள்ளன. இவற்றுள் முதன்மையானது பெர்சிய[1] அரசனான தேரியசை[2] எதிர்த்துப் புரிந்த போராகும். இப்போரில் (கி. மு. 480) எதிரி பக்கத்தில் எகுபது[3] அசிரியா[4] இந்தியா, ஆப்பிரிக்கா முதலான நாற்பத்தைந்து நாடுகளி லிருந்து இரண்டு கோடி காலாட்படைகளும், ஒரு கப்பலுக்கு 200 வீரர்களடங்கிய 1200 பெருங் கப்பற் படைகளும், 3000 சிறு கப்பற் படைகளும் இருந்தன. இப்படைகளைக் கண்ட திரேசு[5] மாசி தோனியா[6] என்னும் இரு மாகாணங்களும் தலை பணிந்துவிட்டன. ஆதன்சும் பார்ட்டாவுமோ தம் பழம் பகையை மறந்து, உடன்பிறந்தாரைப்போல ஒருமித்து, எதிரியை எதிர்க்கத் துணிந்தன. இவ்விரண்டு நாடுகளுக்கும் 7000 பேரடங்கிய ஒரு சிறு படையிருந்தது. இப்படை லியோனிதசு[7] என்னும் பார்ட்ட வீரன் தலைமையில் தெர்மாப்பைலே[8] என்னுமிடத்தில் பெர்சியரை வழிமறிக்கச் சென்றது.

கடற்கரை மணலையொத்த தன் பெரும்படையைக் கண்ட அளவில் கிரேக்கர் ஓடிவிடுவாரென எண்ணித் தேரியசு நான்கு நாள் காத்திருந்தான். ஆனால் கிரேக்கப் படையோ ஒரு சிறிதும் அசைய

1. Persia. 2. Darius. 3. Egypt. 4. Assyria.
5. Thrace. 6. Macedonia. 7, Leonidas. 8, Thermopylae.

வில்லை. ஐந்தாம் நாள் தேரியசு போர் தொடங்கினன். இரேக்கர் அஞ்சா நெஞ்சுடன் எதிர்த்துத் தாக்கினர். பெர்சியர் பக்கமே பல்லாயிரக் கணக்கினர் மாண்டனர். அரசன் திகைத்தான். இனி நேர்முகமாகப்போர் செய்து இரேக்கரை வெல்லமுடியாதென்று உணர்ந்து, கணவாயின் ஒரு புறத்திலிருந்த கள்ளவழியாய்க் இரேக்கருக்குத் தெரியாமல் அவர்களுக்குப் பின் வந்து, அவர்களைச் சூழ்ந்துகொண்டு போர் தொடங்கினன். 4000 இரேக்கர் மடிந்தனர். அவர்களுள் லியோனிதாசும், அவனது உட்படையைச் சார்ந்த 300 வீரர்களும் இறக்கும்வரை போர்புரிந்து கணவாயின் வாயிலிலேயே மாண்டனர். இதுவன்றோ வீரம்!

தெர்மாப்பைலேயில் வைக்கப்பட்டுள்ள வெற்றிச்சின்ன மொன்றில் கீழ்க்கண்ட அடிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

(தமிழ் மொழிபெயர்ப்பு)

"ஈங்குச் செல்லும் மக்காள் நீவிர்
பார்ட்டா சென்று பகர்வீர் நாங்கள்
பணியை முடித்துப் படுத்தோம்"13

என்ன வீரம்! லியோனிதாசின் புகழ் இன்றைக்கும் நிலவுவதில் என்ன விந்தை!

தெர்மாப்பைலேயின் வெற்றி அத்தேனருக்குப் பெரிய ஊக்கம் அளித்ததனால் அவர்கள் சாலமிசு[1] என்னும் வளைகுடாவில் பெர்சியருடைய கப்பற்படையைத் தகர்த்துப் பெருவெற்றி பெற்றனர். இவ்வெற்றிக்குப் பின் ஆதென்சு கல்வியிலும், வணிகத்திலும், அரசியலிலும் உயர்நிலை யடைந்து உலகுக்கே

1 Salamis.

பெருந்தொண்டு ஆற்றிற்று. இப்போரை இழிந்த தெனக் கூறுவமோ?

இங்ஙனமாகத் தம் உரிமைகளைக் காப்பாற்ற எதிரிகளை எதிர்த்துப் போரிடும் வீரர்களையும் நாடுகளையும் நாம் போற்றுவது இயல்பே. ஆயினும், வரலாற்றை ஊன்றிக் கற்கும்போது, இத்தகைய உரிமைப் போர்களிலும் கேடுகள் கலந்துள்ளன என்பது விளங்காமலில்லை.

கிரேக்க நாட்டின்மேற் பெர்சியர் படையெடுத்து வந்ததற்கு ஒரு முதன்மையான காரணம், சின்ன ஆசியாவிற் குடியேறியிருந்த சிலர் கிரேக்கரிற் பெர்சியரை எதிர்த்துப் போர் தொடங்கிச் சார்டிசு[1], என்னும் அவர்களது தலைநகரை நெருப்புக் கிரையாக்கினதாகும். இச்செயலுக்கு உதவி புரிந்தவர்கள் அத்தேனர். இவ்வுண்மையைக் கேள்வியுற்ற பெர்சிய அரசனான டேரியசு "அத்தேனரைத் தண்டிப்பேன்" எனச் சூளுரைத்தான். "அரசே, அத்தேனரை மறந்துவிடாதீர்" 14 என்று நாடோறும் தனக்கு நினைவூட்டி வருமாறு ஓர் அலுவலாளருக்கும் கட்டளையிட்டு வைத்தான். கிரேக்கர் செய்த பிழையினாலன்றோ பெர்சியப் போர் எழுந்தது! இவர்கள் பிழையினால் எழுந்த போரில், இவர்கள் வீரச் செயல் செய்துவிட்டால், இவர்கள் குற்றம் நீங்கிவிடுமோ?

மேலும், பெர்சியரை எதிர்த்துப் போர் புரிந்து அப்போரில் வெற்றி பெற்றதனால் கிரேக்கருக்கும், சிறப்பாக அத்தேனருக்கும் பல நன்மைகள் விளைந்தன. ஆயினும், இப்போருக்குப் பின் சில கேடுகளும்

1 Sardis.

எழுந்தன. பெர்சியர் மீண்டும் படையெடுத்து வரா திருப்பதற்காக ஆதென்சு நகர நாட்டின் தலைமையின் கீழ்ப் பல நகர நாடுகள் ஒன்றுகூடி ஓர் ஒற்றுமை அரசை[1] ஏற்படுத்தின. நாளடைவில் இவ்வரசு ஆதென்சு நகரின் தனி ஆதிக்கத்துக் குட்பட்டது. மற்றை நாடுகளின் உரிமைகள் கொஞ்சங் கொஞ்ச மாகக் குறைக்கப்பட்டன. ஆதென்சு பல நாடுகளை ஆட்சி செய்யும் ஒரு பெருங் கொடுங்கோல் அரசாக மாறிற்று. இவ்வாட்சி பார்ட்டாவுக்குப் பொறு மையை அளித்தது. இதனால் இவ்விரு நாடுகளுக்கும் பத்தாண்டுகளாகப் (கி. மு. 431—421) பெரியதோர் போரும் நடந்தது. இப்போரினால் இறுதியில் இரு நாடுகளும் கேடடைந்தன.

இங்ஙனம் கூறுவதனால், ஓர் எதிரி ஒரு நாட்டின் மேற் படையெடுத்து வரும்போது அந்நாட்டு மக்கள் அவ்வெதிரியுடன் போர் புரியாது அவ்வெதிரிக்குப் பணிந்துவிட வேண்டுமென்பது கருத்தன்று. இத் தகைய போரிலும் தீமை கலவாமல் இல்லை என்பதே யாம் வலியுறுத்தும் உண்மை. இப்பகுதியின் இறு திப் பிரிவில் நாம் எடுத்துக்காட்டும் வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்தும்,இந்நூலின் இறுதிப் பகுதியிற் கூறப்படும் காரணங்களிலிருந்தும், ஓர் எதிரி ஒரு நாட்டின்மேற் படையெடுத்து வராதபடி தடுப்பதனா லும், அவ்வெதிரி தோன்றுவதற்குரிய காரணங்களை அகற்றுவதனாலும், இத்தகைய போர்கள் நிகழாமற் செய்யலாம் என்பதே வரலாற்றுக் கலையிலிருந்து நாம் பெறும் உண்மை. போர் இயற்கைவிதி யன்று. போரை அகற்றி வாழ்வதே இயற்கை விதி. நோய்

1 The Athenian league.

வாய்ப்பட்டிறப்பதே இயற்கை விதியென்று கூறு வார் எவரேனுமுண்டோ? இது நிற்க;

3

ஒரு நாடு தன்னை அடிமைகொண்ட மற்றொரு நாட்டை எதிர்த்துப் போர் புரிந்து தன் உரிமைகளைப் பெற முயலுவது முறையானதா அன்று என்பதுபற்றிச் சிறிது ஆராய்வோம். இத்தகைய உரிமைப் போர்களுக்கு வரலாற்றிற் பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. அவற்றுள் சுவிட்சர்லாந்தும், ஆலந்தும், அமெரிக்காவும் முதன்மையானவை.

சுவிட்சர்லாந்தின் அரசைப்பற்றி முன்னரே கூறியுள்ளோம். இவ் வரசு தோன்றுவதற்குக் காரணமாகவிருந்த, ஊரி[1], சுவிட்ச்[2], அண்டர்வால்டன்[3] என்னும் மூன்று ஊர்களின் உரிமையையும் அழித்து விடுவதென்று அவ்வூர்களை ஆண்டுவந்த ஆத்திரிய அரசன் தன் தம்பியை அனுப்பினான்.

ஆத்திரியப் படைகள் போர்ப் பயிற்சி பெற்றவை. போர்க்கலை முறைப்படியே யன்றி வேறு முறைப்படி போரிடும் பழக்கம் அற்றவை. சுவிசு மக்களோ பயிர்த் தொழிலாளிகள். போர்முறையைப்பற்றி ஒன்றும் அறியாதவர்கள். அவர்கள் ஆத்திரியப் படைகளை எதிர்த்துப் போர் புரிந்த முறை மிகவும் வியப்பானது. தம் ஊர்களுக்குள் நுழையும் இடங்களிலெல்லாம் மரங்களையும் கிளைகளையும் தறித்துப் பரப்பி, எதிரிகளின் வழியை அடைத்து, மார்காட்டன்[4] என்னும் ஒரு கணவாயைமட்டும் திறந்த வழியாக விட்டுவைத்தனர். ஆத்திரியப் படைகள் இக்

1 Uri. 2 Schwitz. 3 Unterwalden. 4 Margarten.

கணவாய் வழியாக உள்ளே நுழையவும், சுவிசு மக்கள் மலையினின்று பெருங் கற்களை உருட்டிவிட்டுப் பலரைக்கொன்றனர். மேலும் அவர்களுடைய படை, ஆத்திரியப் படையின் பின்பக்கமாகவும் வந்து அதைச் சூழ்ந்து தடுத்துக்கொண்டது. அதனால், அக் கணவாய் வழியிலேயே அவர்களுக்குப் பெரிய வெற்றி உண்டாயிற்று (கி. பி. 1315). தப்பியோட முயன்ற ஆத்திரியரிற் பலர் அண்டையிலிருந்த ஏரியில் வீழ்ந்து மாண்டனர்!

மார்காட்டனில் பெற்ற வெற்றி, சுவிசு மக்களின் வரலாற்றில் ஓர் எல்லைக் கல்லைப் போல விளங்குகின்றது. இவ்வெற்றி தெர்மாப்பைலேயில் கிரேக்கர் பெற்ற வெற்றியைவிடச் சிறந்தது. இவ்வெற்றியின் பயனாக லூசன்[1], பிரென்[2], கிளேரசு[3] முதலான வேறு எட்டு ஊர்கள் முற்கூறிய மூன்று ஊர்களுடன் சேர்ந்தன. சுவிட்சர்லாந்தின் அரசு முன்னைவிட வலுத்தது.

மார்காட்டனில் தாங்கள் அடைந்த தோல்வியும் சுவிசு மக்கள் பெற்ற வெற்றியும் ஆத்திரியருக்கு அளவில்லாக் கோபத்தை மூட்டின. எப்படியாயினும் சுவிட்சர்லாந்தின் தனி ஆட்சியை அழித்து, அவ்வூர்களை மீண்டும் தன் வயப்படுத்திக்கொள்வதென்று தீர்மானித்து, ஆத்திரிய அரசன் மீண்டும் ஒரு போர் தொடங்கினான். இப்போர் செம்பாக்[4] என்னுமிடத்தில் 1386-ஆம் ஆண்டில் நடைபெற்றது. ஆத்திரியப் படையில் ஏறக்குறைய 1,000 செல்வர்களும் 6,000 வாள் வீரரும், 10,000 குதிரை வீரரும், 6,000 காலாட் படையினரும் இருந்தனர். சுவிசு மக்களின்

1 Luzern. 2 Brun. 3 Glarus. 4 Sempach.

படையிலோ 1500 பேர்மட்டுமே இருந்தனர். இவர்களுடைய போர்க் கருவிகள், தடிகளும் கோடரிகளுமே! போர் தொடங்கிய சில நொடியில் சுவிசுப் படை முறியடிக்கப்பட்டது. அப்படையின் கொடியும் ஆத்திரியர் கையில் வீழ்ந்தது. அந்தோ மார்காட்டனில் தாம் பெற்ற உரிமையையெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் இழக்கும் நிலைமைக்கு உள்ளாயினர்.

அவ்வமயம் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது. சுவிசுப் படையிலிருந்த அர்னல்டு வின்கல்ரீட்[1] என்னும் ஒரு போர் வீரன்: "எல்லோரும் என் பின்னே வருக" என்று உரத்துக் கூவிக்கொண்டு, எதிரிப் படையின் இடையிற் பாய்ந்தான். தன் கோடரியாற் பகைவரிற் பலரைக் கொன்றான். அதற்குள் அவன்பின் வந்த பல சுவிசு வீரர்களும் அங்ஙனமே எதிரிகளைத் தாக்கினர். ஆத்திரியரின் குதிரைப் படை மிரண்டு அவர்களுடைய காலாட் படையையும் வாள்வீரர் படையையும் கலைத்தது. 3000 ஆத்திரியர் மடிந்தனர்! ஏனையோர் உயிர்தப்பி ஓடினர்!

சுவிசு மக்கள் பெரும் வெற்றி பெற்றனர். ஆத்திரியர் சுவிசு மக்களின் வெற்றியை ஒப்புக்கொண்டு அவர்கள் நாட்டுக்குத் தனி ஆட்சி அளித்தனர். 1424-ஆம் ஆண்டிலும், 1648-ஆம் ஆண்டிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் சுவிட்சர்லாந்தின் தனி ஆட்சியை ஒப்புக்கொண்டன.

இங்ஙனமாக ஆத்திரியரை எதிர்த்துப் போர் புரியாவிட்டால் சுவிசு மக்கள் தனி ஆட்சியைப்

---

1 Arnold Winkelreid.

பெற்றிருக்கக் கூடுமா? மார்காட்டன் போரின்றி, அவர்களின் வீரம் பெருகி யிருக்குமா? அர்னல்டு வின்கல்ரீட் என்னும் வீரனின் தீரச் செயல் இன்றிச் சுவிட்சர்லாந்து தனி ஆட்சி நாடாக நிலைபெற்றிருக்கக் கூடுமா? இந்நிகழ்ச்சிகளிலிருந்து ஒரு நாடு தன் உரிமைகளுக்காகத் தன்னை அடிமைகொண்ட நாட்டுடன் எதிர்த்துப் போர் புரிவது கட்டாயம் என்று தோன்றுகின்றதன்றோ?

சுவிசு மக்களைப் போலவே ஆலந்து மக்களும் தம் உரிமைகளுக்காகத் தம் எதிரிகளை எதிர்த்துப் போர் புரிந்தனர். ஆலந்து மக்கள் பிராட்டெத்தாந்துப் பிரிவினர். ஆனல் அவ்வமையம் அவர்களது நாட்டை ஆண்டுவந்த இரண்டாம் பிலிப்பு[1] என்னும் பானிய அரசனே கத்தோலிக்கப் பிரிவினன். ஆலந்தில் பிராட்டெத்தாந்துப் பிரிவை அழித்துக் கத்தோலிக்கப் பிரிவை நிறுவவேண்டுமென்பது அவனது பேரவா. இதற்காக அவன் 20,000 வீரர்கள் அடங்கிய ஒரு பெரும் படையை ஆலந்துக்கு அனுப்பி, அப்படையின் உதவியினல் ஆயிரக் கணக்கான மக்களைச் சிறையிலிட்டும், கத்தோலிக்கர் சமயத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களைக் கொன்றும், இப்படையின் செலவுக்காகக் குடிகளிடம் கடு வரி தண்டியும், இங்ஙனமாக ஆலந்து மக்களின் உரிமைகளையெல்லாம் அழிக்கத் தொடங்கினன்.

குடிகள் அரசனை எதிர்த்துப் போர் புரிவதெனத் தீர்மானித்தனர். அவர்களிற் பலர் கடற்கொள்ளைக்காரர்களாக மாறிப் பானியப் படைகளுக்கு வந்த உணவுகளையும் போர்க் கருவிகளையும் கொள்ளையிட்

1 Philip II.

டனர். இக்கொள்ளைக்காரரிற் சிலர் 1572-ஆம் ஆண்டில் பிரில்[1] என்னும் நகரத்தைத் தாக்கிப் பானியப் படைகளை முறியடித்துத் தங்கள் தலைவனுன உல்லியம் என்பவனை ஆலந்து நாட்டுக்கு அரசனுக ஏற்படுத்தினர்.

1572-ஆம் ஆண்டில் இங்ஙனம் தொடங்கிய இவ்வுரிமைப் போர் 1609-ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. ஆலந்து மக்கள் உல்லியம் அரசனுடைய திறமையினுல் ஒவ்வோர் ஊராகவும், ஒவ்வொரு நகரமாகவும் சிறிது சிறிதாகத் தம் நாட்டைக் கைப்பற்றிப் பானியரைத் தோல்வியுறச் செய்து இறுதியில் வெற்றி பெற்றனர்.

ஏறக்குறைய நாற்பதாண்டுகளாக நடந்த இக் கொடும்போரில் ஆலந்து மக்களில் ஏறக்குறைய 50,000 பேர் மடிந்தனர். பல நகரங்கள் பாழாக்கப் பட்டன. ஆயினும் இப்போரின்றி ஆலந்து மக்கள் பானியரின் அயல் ஆட்சியை அழித்திருக்கக்கூடுமோ? அங்ஙனம் உயிரிழக்காவிட்டால் அவர்கள் தம் உரிமைகளை அடைந்திருக்கக் கூடுமோ? மேலும், இப் போரிற் பெற்ற வெற்றியின் பயனுகவன்றே ஆலந்து மக்கள் புதிய பயிர்த்தொழில் முறைகள், வெளிநாட்டு வணிகம், பாங்கித் தொழில், உயர்தரக் கல்வி, ஓவியக் கலை முதலான பல துறைகளிலும் ஏறக் குறைய இருநூறுண்டுகளாகத் தலைசிறந்து விளங்கினர்?

ஆலந்து மக்களைப்போலத் தம் உரிமைகளுக் காகப் போர் புரிந்தவர்களில் அமெரிக்கரை நாம் சிறப்பாகக் கூறவேண்டும். இவர்களிற் பெரும்பாலோர், பதினேழாம் நூற்றுண்டில் இங்கிலாந்திலின்று வட

---

1 Brill.

அமெரிக்காவின் தென்பகுதி நாடுகளுக்குச் சென்று குடியேறியவர்கள். இதனால் இவர்கள் இங்கிலாந்தி லுள்ள ஆங்கில அரசருடைய ஆட்சிக்கு உட்பட்டு நடந்துவந்தனர்.

இங்ஙன மிருக்கையில் இங்கிலாந்துக்கும் பிரான் சுக்கும் 1756-ஆம் ஆண்டில் ஒரு போர் நிகழ்ந்தது. இப்போரில் வட அமெரிக்காவின் வட பகுதியான கானடாவிலுள்ள பிரஞ்சுக்காரர் தென் பகுதியிலுள்ள அமெரிக்கரோடும் போர் புரிந்தனர். இறுதியில் அமெரிக்கர் வெற்றி பெற்றனர். இவ்வெற்றிக்குக் காரணம் ஆங்கில அரசியலார் அளித்த உதவியே. ஆதலால் இப்போரில் ஏற்பட்ட செலவின் ஒரு பகுதி யை அமெரிக்கர் கொடுக்க வேண்டுமென்று ஆங்கில அரசியலார் முடிவு செய்தனர். ஆயினும், அமெரிக் கக் குடிகளின் உடன்பாடு பெறுமல் அவர்கள்மேல் வரி விதித்துப் போர்ச் செலவின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்வதென்று தீர்மானித்து, 1765 ஆம் ஆண்டில் முதன் முதலாகப் "பத்திர வரி"[1] விதித்த னர். பின்னர்த் தேயிலை முதலான இறக்குமதிப் பொருள்களின் மீதும் வரி விதித்தனர்.

'குடிகளின் உடன்பாடில்லாமல் வரி கொள்ளு தல் கூடாது' 15 என்னும்கோட்பாட்டைநிலைநிறுத்து வதற்காக அமெரிக்கர் இவ் வரி விதிப்புகளை எதிர்த் தனர். "இங்ஙனம் ஒரு நாட்டு மக்கள் தம் உரிமை களைப் போற்றுவது பாராட்டத் தக்கது; அமெரிக் கரது இசைவு இல்லாமல் அவர்கள்மேல் வரி விதிப் பது முறையாகாது." 16 என்று அக்காலத்திலிருந்த பர்க்[2], பிட்[3] என்னும் அரசியல் வல்லுநர் எடுத்துக்

1 Stamp Duty. 2 Barke. 3 Pitt. the Earl of Chatham.

கூறினர். ஆயினும் அரசரும் அவர் அமைச்சர்களுமோ 'தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று ஓரே பிடியாக வரி விதித்துப் பணம் திரட்டத் தொடங்கினர். இதன் விளைவாகவே போர் எழுந்தது.

அமெரிக்கரை எளிதில் வென்றுவிடலாம்; அவர்களை என்றும் தம் ஆட்சியின் கீழ் அடக்கி வைத்துக் கொள்ளலாம் என ஆங்கிலேயர் எண்ணினர். பெரிய பெரிய படைகளையும், வல்லவர்களான படைத் தலைவர்களையும் அனுப்பினர். ஆயினும் தம் உரிமைகளுக்காக ஒரு நாட்டு மக்கள் எல்லோரும் ஒருமித்துப் போரிடும்போது எதிரிப் படைகள் என்ன செய்யக் கூடும்? இறுதியில் அமெரிக்கர் வெற்றி பெற்றனர். ஆங்கிலேயர் அமெரிக்காவை இழந்தனர் (1783).

நியூ யார்க்[1] நகருக்குள் நுழையுமிடத்தில் 'மக்கள் உரிமை[2]' என்னும் பெயர் பூண்ட ஒரு பெருஞ் சின்னம் ஐரோப்பாவைப் பார்த்துக்கொண்டிருக்கும்படி வைக்கப்பட்டுள்ளது. இச்சின்னம் அரசியல் உரிமைக்காகப் போராடி வெற்றிபெற்ற பண்டை அமெரிக்க மக்களின் பெருமையையும் தமது குறுகிய நோக்கத்தால் அமெரிக்காவை இழந்த ஆங்கில மக்களின் குறைவையும் உலகுக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றது எனலாம்.

இதுகாறும் விவரித்த உரிமைப் போர்கள் இன்றியமையாதன வென்றுவது, இவற்றால் நன்மையேயன்றித் தீமையொன்றும் நேரிடவில்லையென்றுவது நாம் கூறுவதற் கிடமில்லை. எடுத்துக் காட்டாக, அமெரிக்காவின் உரிமைப் போர் அந்நாட்டு மக்களுக்குத் தனியாட்சி யுரிமையை யளித்தது; ஆயினும்

1 New York 2 Statue of Liberty.

இவ்வுரிமை அமெரிக்காவுக்கும் உலகுக்கும் கேடு விளைவிக்காமலில்லை. அமெரிக்காவைப் போன்ற ஒரு பெரிய நாடானது, கானடா, ஆத்திரேலியா[1] முதலான நாடுகளைப்போல ஆங்கிலப் பொதுமை நாடு[2]களுடன் இணைக்கப்பட்டிருந்தால் அஃது, உலக அரசியல் ஒற்றுமைக்குப் பேருதவி புரிவதாகும் என்பதில் ஐயமில்லை. நெப்போலியன், இட்லர் போன்ற அரக்க அரசுகளின் எழுச்சிக்கும் அது தடையாயிருக்குமன்றோ? அமெரிக்காவின் தனியரசே சர்வதேச சங்கத்தின் அழிவுக்கு ஒரு முதன்மையான காரணம் என்பதையும் எவர் மறுக்கக் கூடும்? ஆதலால் உரிமைக்காகப் போர் புரிவதில் கேடும் எழும் என்பது பெறப்படுகின்றது.

எனினும், சுவிட்சர்லாந்து, ஆலந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் உரிமைப் போர்களை நாம் இழிந்தனவெனக் கூற முடியாது. இந்நாடுகளை முறையே ஆட்சி செய்துவந்த ஆத்திரியா, பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகள் அக்காலத்திய அரசியற் கோட்பாட்டின்படி தம் ஆட்சிக்குட்பட்ட நாடுகளிலுள்ள மக்களுக்கும் தம் நாட்டு மக்களைப் போலவே உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற உண்மையை உணராதிருந்தன. இந்நாடுகளின் ஆட்சிக் குட்பட்ட நாடுகளும் போர் புரிந்து உரிமையைப் பெறும் முறையைத் தவிர வேறு முறையை அறியாதிருந்தன. எனவே இருதிறத்து நாடுகளுக்கும் போர்கள் நிகழ்ந்தன.

ஆனால், இக்காலத்திலும் ஒரு நாடு தன் உரிமைகளுக்காகப் போர் புரிய வேண்டும் எனக் கூறுவது இழுக்காகும். போரின்றி உரிமைகளைப் பெறும் வேறு

1 Australia. 2 British Commonwealth of Nations.

முறை யிருந்தால் அம்முறையைக் கைக்கொள்வது மேன்மையே யன்றோ? இதற்கு அயர்லாந்தின் வரலாற்றிலும் இந்தியாவின் வரலாற்றிலும் சில எடுத்துக்காட்டுகள் உள்ளன. அவற்றைக் கீழே காண்க.

அயர்லாந்து மக்களிற் பெரும்பாலோர் கத்தோலிக்கப் பிரிவினரா யிருந்ததனுலும், வேறு பல காரணங்களினுலும் அவர்கள் ஆங்கில ஆட்சியின் கீழ்ப் பற்பல இடைஞ்சல்களுக் குட்படுத்தப்பட்டனர். இவ்விடைஞ்சல்களை நீக்க அவர்கள் பல முறை போரும் புரிந்தனர். ஆனால் ஒவ்வொரு போரிலும் அவர்கள் தோல்வி யடைந்ததனுல் அவர்களுடைய இடைஞ்சல்கள் மேலும் மேலும் மிகுதிப்பட்டன.

இதனுல் 18-ஆம் 19-ஆம் நூற்றூண்டுகளிலுள்ள கிரெட்டான்[1] பார்னெல்[2] என்னும் அயர்லாந்து தலைவர்களிற் சிலர் தம் நாட்டு மக்களின் உரிமைகளை ஆங்கிலப் பார்லிமெந்தின் உதவியினுல் சிறிது சிறிதாகப் பெறுவதற்கு முயன்றனர். இம்முயற்சியின் பயனுக 1782-ஆம் ஆண்டில் அயர்லாந்துப் பார்லிமெந்துக்குச் சில உரிமைகளும்[3] 1829-ஆம் ஆண்டில் கத்தோலிக்கப் பிரிவினருக்குச் சில அரசியல் உரிமைகளும்[4] 1880-ஆம் ஆண்டில் பயிர்த்தொழிலாளருக்குரிய சில உரிமைகளும்[5] வழங்கப்பட்டன.

இவற்றுடன் அயர்லாந்துக்குக் குடியாட்சியுரிமையும்[6] வழங்கவேண்டுமென்று ஆங்கில அரசின் முதல் அமைச்சரான கிளாட்சன்[7] முயற்சி செய்தார். இதைப் பார்லிமெந்து உறுப்பினர் ஏற்றுக்கொள்ள

1 Grattan. 2 Parnell. 3 Independence of Irish Parliament. 4 Catholic Emancipation. 5 The Land Act. 6 Home Rule. 7 Gladstone.

மறுத்தனர். இதனால், ஆங்கிலப் பார்லிமெந்தின் உதவியினால் தம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலா மென்று நம்பியிருந்த அயர்லாந்து மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இவ்வமயத்தில் அயர்லாந்தில் **ஆர்தர் கிரிப்பித்**[1] என்னுந் தலைவர், ஒருவர் தோன்றினார். தம் உரிமைக் காகவும் அயர்லாந்து மக்கள் போரிடக்கூடாது என் பதும் ஆங்கிலப் பார்லிமெந்தின் உதவியை எதிர் பார்க்கக் கூடாதென்பதும் அவருடைய கோட்பாடு கள். ஆதலால் அவர் அயர்லாந்து மக்கள் தம் உரிமை களைத் தம் சொந்த முயற்சியினாலே பெறவேண்டு மென்று **சின்பென்**[2] என்னும் ஒரு கட்சியை நிறுவினார். இக்கட்சியினர் அயர்லாந்திலுள்ள ஆங்கில அரசினருடன் ஒத்துழையாமை, படையில் சேராமை, வரி கொடாமை முதலிய முறைகளைக் கையாடினர்.

இவ்வியக்கத்தின் பயனாக ஆயிரக்கணக்கான பேர் சிறை சென்றனர். ஆனால் 1918-ஆம் ஆண்டில் இக்கட்சியினர் பார்லிமெந்துத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்றனர். இங்ஙனம் தெரிந்தெடுக்கப் பட்ட சின் பென் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அனைவரும் **டப்ளின்**[3] என்னும் நகரில் கூடித் தங்கள் நாட்டுக்கு முழுக் குடியாட்சியையும் தனியாட்சியை யும் ஏற்படுத்தி ஆங்கில ஆட்சியை அகற்றினர்!

இப்புதிய குடியரசுக்கு **டிவாலரா**[4] தலைவராக வும், ஆர்தர் கிரிப்பித்து துணைத் தலைவராகவும் தேர்ந்

1 Arthur Griffith. 2 Sinn Fein. இத் தொடர் அயர்லாந்து மக்களின் காலிக் (Gaelic) மொழியில் 'நாம் நாமே' (We Ourselves) என்னும் பொருள் கொண்டது. 3 Dublin. 4 De Valera.

தெடுக்கப்பட்டனர். ஆங்கில அரசினர் இறுதியில் இவ்வமைப்பை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

பிராட்டெத்தாந்துப் பிரிவினரும் ஆங்கிலேயரும் நிறைந்த அல்ட்டர்[1] மாகாணத்தி லுள்ளவர்கள் டிவாலராவின் அரசுக்குள் அடங்கியிருக்க மறுத்த தனுல் அவர்களுக்காகத் தனித்த ஓர் அரசும் ஏற் படுத்தப்பட்டது. இது நிற்க.

இந்தியாவின் உரிமைப் போரும் போரில்லாப் போரே யாகும். இதனைத் தொடங்கிய காந்திப் பெரி யார் மக்களின் வாழ்க்கையில் போர் கூடாது என்னும் கொள்கையை யுடையவர். இவர் முதன்முதலாக 1919-ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினர். இப்போரைப்பற்றிய கருத்து வேறுபாடுகள் பல இருப்பினும், ஆங்கிலேயர் இந் திய மக்களுக்கு முழுக் குடியாட்சி யுரிமையை வழங்க முயற்சி செய்யாதது மிகவும் வருந்தத் தக்கதே. உல கத்திலுள்ள பெரிய நாடுகளில் இந்தியா ஒன்றுமட் டுமே குடியாட்சி யுரிமையின்றி இருப்பது ஆங்கில ஆட்சிக்கே மிகவும் குறைவு எனக் கூறுவது மிகை யாகாது.

நாம் இதுகாறும் விவரித்த உரிமைப் போர்களி லிருந்து தெளிவாகும் உண்மைகளைத் தொகுத்துக் கூறுவோம்: பண்டைக் காலத்தில் வலு நிறைந்த ஒரு நாடு வலுக் குறைந்த மற்றொரு நாட்டைக் கைப் பற்றி அதனை ஆட்சி செய்வது முறையெனக் கருதப் பட்டது. ஆகலால் அதன் ஆட்சிக்குட்பட்ட அடிமை நாடு போர் புரிந்தே தன் உரிமையைப் பெறவேண் டியதாயிற்று. இத்தகைய உரிமைப் போர்களில் நன்

1 Ulster

மையும் தீமையும் கலந்தே கிடைக்கின்றன. ஆனால் தற்காலத்தில் எல்லா நாடுகளுக்கும் குடியாட்சியும் தனியாட்சியும் பிறப்புரிமை எனக் கருதப்படுகின்றன. ஆதலால்; இவ்வுரிமைகளைப் பெற எக்காரணத்தை முன்னிட்டும் போர் புரியக் கூடாதென்றும், போரில்லாத முறைகளையே கையாள வேண்டுமென்றும் வரலாற்றுக் கலை நமக்கு அறிவுறுத்துகின்றது

4

இவ்வுலக வரலாற்றின் வியப்புக்களில் ஒன்று காலாகாலங்களில் அலெக்சாந்தர், செங்கிட்கான், தாமர்லேன், நெப்போலியன், இட்லர்போன்ற, பெரிய போர் வீரர்கள் தோன்றுவது. இவர்கள் ஏன் தோன்றுகிறார்கள்? இவர்களால் உலகுக்கு யாது பயன்? இவர்களுடைய போர்களால் ஏன்பல்லாயிரக் கணக்கான மக்கள் அழிய வேண்டும்? என்பன போன்ற கேள்விகள் வரலாற்றைக் கற்கும் ஒவ்வொருவர் மனத்திலும் எழுகின்றன. இக்கேள்விகளுக்கு இவ்விடத்தில் நாம் விடையளிக்கப் புகவில்லை. ஆயினும் இப்படிப்பட்ட அரக்கப் போர்வீரர்கள் தோன்றிய காலத்தில் அவர்களை எதிர்த்துப் போர்புரிவது கட்டாயமா என்பதுபற்றிச் சிறிது கூறுவோம்.

தனது இருபதாவது வயதில் அலெக்சாந்தர் என்னும் மாசிதோனிய அரசன் உலக முழுவதையும் போரில் வென்று மன்னர் மன்னனாக ஆட்சி செய்ய வேண்டுமென்று எண்ணங் கொண்டான். முதலில் கிரேக்க நாடுகளின்மீது பாய்ந்தான். இவ்வீரனின் போர்த் திறமையைக் கண்ட பல நாடுகள் எதிர்க்

காது பணிந்தன. தீபசு[1] என்னும் நாடு மட்டும் எதிர்க்கத் துணிந்தது. அதன் விளைவு இவ்வரலாற்றை இப்பொழுது கேட்போரையும் திடுக்கிடச் செய்கின்றது! அலெக்சாந்தரை எதிர்க்கத் துணிந்ததனால் தீபசு நகரம் தரையோடு தரையாய், இடிக்கப்பட்டது. 60,000 மக்கள் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோரெல்லாம், பெண்டு பிள்ளைகளுள்பட, அடிமைகளாக விற்கப்பட்டனர். தீபசுக்கிழைத்த அழிவைக் கண்ட மற்றக் கிரேக்க நாடுகள் அலெக்சாந்தருக்குத் தலை பணிந்து, அவனை அரசனாக ஏற்றுக்கொண்டனர்.

அதன் பின்னர் அலெக்சாந்தர் பெர்சியாவின் மேற் படையெடுத்து, அந்நாட்டரசனைக் கொன்று, அந்நாட்டின் நகரங்களையும் ஊர்களையும் அழித்து, இங்ஙனமாகத் தன் ஆட்சியைப் பரப்பிக்கொண்டு இந்தியாவுக்குட் புகுந்தான். இந்தியாவில், பஞ்சாப், சிந்து மாகாணங்களிலுள்ள அரசர்களையெல்லாம் வென்று, பல்லாயிரக் கணக்கான மக்களையும் கொன்றான். அதன்பின் அவனுடைய படை போர் புரிய மறுத்ததனால் வருத்தத்துடன் தன் நாட்டுக்குத் திரும்பிச் சென்றான். செல்லும் வழியில், தனது 33-ஆம் வயதில் பாபிலோன்[2] நகரில் காய்ச்சல் நோயினால் மாண்டான். அவன் ஆட்சியும் அவனுடன் அழிந்தது. "அலெக்சாந்தரின் தோற்றமும் மறைவும் ஒரு வால் வெள்ளி[3]யைப் போன்றுள்ளது; அவன் வந்ததும், போனதும், அவன் பெயர் நிலைபெற்றதுந் தவிர அவனால் விளைந்த பெரு நன்மை ஒன்றுமில்லை" என்கின்றார் ஓர் ஆசிரியர்.17

1 Thebes. 2 Babylon. 3 Meteor.

அலெக்சாந்தர், தாமர்லேன், செங்கிட்கான்



அலெக்சாந்தர் பெரிய போர்வீரன். பல போர்களில் பெரும் வெற்றி பெற்றவன். பல நாடுகளைக் கைப்பற்றியவன். "இனி வெல்லுவதற்கு வேறு நாடுகள் இல்லையே" என்று ஒரு தடவை விம்மி யழுதவன். இங்ஙனம் தோள்வலி நிறைந்து விளங்கினானேயன்றிக் குணத்திலேனும் அரசுத் திறமையிலேனும் பெருமை பெற்றவனல்லன் அலெக்சாந்தர். தன்னைக் கடவுள் என்று கூறிய அகங்காரி; தன் கையினாலேயே தன் நண்பர்கள் பலரைக் கொன்ற கோபி; நகரங்களையும் மக்களையும் அழித்த நாசகாலன், தன் ஆட்சிக் குட்பட்ட நாடுகளுக்குப் பாட்டைசாலைகள் முதலாகப் போடாதவன்; இவனைப் பெரியவீன்[1] என்று அழைப்பது பொருத்தமோ என்கின்றனர் வரலாற்று நூலோர் சிலர். [18]

அலெக்சாந்தரைப் போன்ற வேறொரு பெரும் போர் வீரன் செங்கிட்கான். இவன் தனது 51-ஆம் வயதில் மங்கோலியரின் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இம்முதிர்ந்த வயதில் ஒரு மனிதன் சாந்தமாயிருப்பது இயல்பு; அன்றித் துறவியாகவும் மாறலாம். ஆனால் செங்கிட்கானுக்கோ இவ்வயதிலேதான் போர்வாழ்க்கை தொடங்கிற்று!

தனது ஆட்சி நாடாகிய நடு ஆசியா[2] விலிருந்து கிழக்கே சென்று, முதலில் வட சீனாவிலுள்ள கின்[3] அரசை அழித்து, அதன்பின் மான்சூரியா[4] நாட்டையும் பெக்கிங்[5] நகரத்தையும் பிடித்தான். பின், அதற்கு வடகிழக்கிலுள்ள கொரியா[6] நாட்டையும் வென்றான். அதற்குக் கிழக்கே செல்லுகையிற் கடல் குறுக்கிட்ட

1. Alexander the Great. 2. Central Asia. 3. Kin.
4. Manchuria. 5. Pekking. 6. Korea.

தால் மேற்கே திரும்பி, குவாரசம்[1] என்னும் நாட்டைக் கைப்பற்றி, அதன் அரசனையும் மக்களையும் அழித்தான். அந்நாட்டுத் தலைநகரான பொக்காரா[2]வில் மட்டும் 10,00,000 மக்களைக் கொன்றான். இங்ஙனமே சாமர்க்கன்ட்[3], கிரீட்[4], பாக்[5] முதலான மற்றெல்லா நகரங்களையும் அழித்து அவற்றில் வாழ்ந்த மக்களையும் கொன்று, 1150-ஆம் ஆண்டில் கசினி[6] நகரத்தையும் அழித்தான். "செங்கிட்கான் சென்றவிடம் பாலைவனம்" என்பது பழமொழியாக வழங்கிற்று.

நகரங்களையும் ஊர்களையும் நாசஞ்செய்வது செங்கிட்கானின் கோட்பாடு. இதற்கு அவன் கூறிய காரணம் அவற்றில் வாழும் மக்கள் நல் லுணவுண்டு நல்லுடை யுடுத்திச் சுகமாக வாழ்கின்றனர் என்பது தான்! எல்லா மக்களும் தன் கூட்டத்தவரைப்போல வீடு வாசலின்றிக் கூடாரங்களில் வாழ்ந்து ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்திற்கு எப்பொழுதும் அலைந்து கொண்டே யிருக்க வேண்டு மென்பது அவனது வாழ்க்கையின் குறிக்கோள்! இதற்காக அவன் மக்களை ஏன் கொன்றிருக்க வேண்டும் என்று சிலர் வினவலாம். இதற்கு விடையளிப்பது எளிது. தான் இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னேதான் அவன் எழுத்து முறை உலகத்தில் இருப்பதாக அறிந்தானாம்! வேறு கூறவேண்டுவதும் உண்டோ ?

இவ்வரலாற்றைக் கற்போர் கேட்க வேண்டிய கேள்வி: "செங்கிட்கான் என்னும் விலங்கைக் கடவுள் ஏன் படைத்தார்?" என்பதே. அக்காலத்து மக்கள் உலக நிகழ்ச்சிக ளெல்லாம் கடவுள் ஆணைப்படியே

1. Khwarazam. 2. Bokhara. 3. Samarkand. 4. Herat. 5. Balkh. 6. Ghazni.

நடக்கின்றனவென்று எண்ணினராதலால் தீயோரை ஒழிக்கச் செங்கிட்கான் தோன்றினன் எனக்கூறினர். இதுபற்றியே இவனுக்குக் கடவுளின் சாட்டை[1] என்னும் சீரிய பெயரும் கிடைத்தது! ஆனால் உண்மையில் செங்கிட்கானுக்கும் கடவுளுக்கும் இவ்வகைத் தொடர்பு கிடையாது. மக்களின் மடமையினாலேயே இப்படிப்பட்ட குரூர வீரர்கள் தோன்றுகிறார்கள் என்பதும் மக்கள் ஒன்று சேர்ந்தால் இவர்களை அழிப்பது எளிதென்றும் வரலாற்றுக் கலை அறிவிக்கின்றது. இது நிற்க.

செங்கிட்கான் வழிப்பிறந்த தாமர்லேன்[2] என்னும் வேறோர் அரக்கன் செங்கிட்கானைவிடக் கொடியவனாக விளங்கினான். இவன் 1369-ஆம் ஆண்டில் சாமர்க்கண்ட் என்னும் நாட்டுக்குச் சிற்றரசனானான். அவ்வாண்டிலிருந்து அவன் இறக்கும்வரை (1405) தம் ஆயுளை யெல்லாம் போரிலேயே கழித்தான். போர் புரிவதைக்காட்டிலும் மக்களைக் கொல்லுவதில் அவனுக்கு மிக்க விருப்பம். அதிலும் அங்ஙனம் கொல்லப்பட்டவர்களின் மண்டை யோடுகளை எடுத்து அடுக்கி விளையாடுவது இன்னும் மிகுதியான விருப்பம். ஒரு தடவை பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொன்று அவர்களுடைய மண்டை யோடுகளைக் கொண்டு எகுபது நாட்டு ஐப்[3] போன்ற ஒரு கோபுரத்தை அடுக்கிப் பார்த்து அகமகிழ்ந்தான்! இன்னொரு தடவை ஈராயிரம் பேரைக் கோபுரம் போல நிற்கச் செய்து, அவர்களைச் சூழச் செங்கலும் சுண்ணாம்பும் வைத்து ஒரு கோபுரமே கட்டி முடித்

1. The Scourge of God. 2. Tamerlane. 3. Pyramid.

தான்! இப்படிப்பட்ட அரக்கனைக் கடவுள் ஏன் படைத்தார் என நாம் ஐயுறுவது இயல்பேயன்றோ?

இவ்வரக்கன் 1398-ஆம் ஆண்டில் கைபர் கணவாய் வழியாக இந்தியாவின்மேற் படையெடுத்து வந்தான். அவன் சிந்து ஆற்றைக் கடந்து பஞ்சாபுக்குட் புகவும் அம்மாகாணக் கவர்னர் அவனை எதிர்த்துப் போர் புரிந்தான். போர் புரிந்து பயன் என்ன? கவர்னர் எளிதில் முறியடிக்கப்பட்டான். தாமர்லேன் வெற்றி வேந்தனாக நேரே டெல்லிக்குச்சென்று அதனை ஆண்ட சுல்தானையும் வென்று அந்நகரத்தைக் கைப்பற்றினான்.

தம் அரசனை யிழந்த டெல்லி மக்கள் தாமர்லேனுக்குப் புகலடைந்து அவனைத் தங்கள் அரசனாகவும் ஏற்றுக்கொண்டனர். தாமர்லேன் அவர்களுக்கு அடைக்கலங் கூறினான்!

அரக்க பரம்பரையிற் பிறந்து, அரக்கத் தொழிலையே புரிந்து வந்த தாமர்லேனுக்கு அடைக்கலம் அளிப்பதன் பொருளாவது, தான் அளித்த வாக்கைக் காப்பாற்றுவதன் கடமையாவது தெரியுமா? அடைக்கலம் அளித்த அடுத்த நொடியிலேயே அம்மக்களைக் கொல்லும்படி ஆணையிட்டான். பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொல்லும் வேலை அவன் படைக்குப் பெருஞ் சிரமமாகப் போய்விட்டதாம்! இதற்கிடையில் நகரத்திலிருந்த பொருள்களையெல்லாம்கொள்ளையிட்டு முடிந்ததனால் அதன்பின் டெல்லியில் இருப்பதில் பயனில்லை என்றெண்ணித் தாமர்லேன் தன் நாட்டுக்குத் திரும்பினான்! போகும் வழியிலும் எதிர்ப்பட்ட ஊர்களையும் மக்களையும் அழித்துக் கொண்டே சென்றான்!

சாமர்க்கன்ட் சென்றவுடன் பெர்சியா, மெசெப்பொத்தோமியா நாடுகளின்மேற் படையெடுத்து, அங்குள்ள நகரங்களையும் ஊர்களையும் அழித்து, 1402-ஆம் ஆண்டில் துருக்கியரையும் போரில் வென்று, அதன்பின் 1405-ஆம் ஆண்டில் ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு சீனுவுக்குச் சென்றான். செல்லும் வழியில் நோய்வாய்ப்பட்டு இறந்தான். அவனது அரசும் அவனுடன் அழிந்தது! மக்கள் ஆயுளுக்கு ஒரு முடிவு இருப்பதன் அருமை இதில் நன்கு விளங்குகின்றதன்றோ?

அலெக்சாந்தர், செங்கிட்கான், தாமர்லேன் முதலானோர் பெரும்பாலும் ஆசியாக் கண்டத்தையே தாக்கி, அதன் நாடுகள் பலவற்றைக் கொள்ளையிட்டு, அதன் மக்களிற் பலரைக் கொன்றனர். இதுபோன்ற அழிவுகள் ஐரோப்பாவிலும் நிகழ்ந்துள்ளன. கி. பி. மூன்றும் நான்காம் நூற்றூண்டுகளில் அலாரிக்[1], கெய்சரிக்[2], அட்டில்லா[3], முதலான மிலேச்சர்[4] தலைவர்கள் உரோம அரசைத் தாக்கி அதன் நகரங்களை அழித்துக் கணக்கற்ற மக்களை வாளுக்கும் நெருப்புக்கும் இரையாக்கினர். இதற்குப் பின் ஒன்பதாம் நூற்றூண்டில் டென்மார்க்கு நிலப்பகுதிகளிலிருந்து படையெடுத்து வந்த வடநாட்டார்[5] இங்கிலாந்து, பிரான்சு, சேர்மனி முதலான நாடுகளிலுள்ள நகரங்களையும் கோவில்களையும் கொள்ளையிட்டனர். பத்தாம் நூற்றூண்டில் மகமதியர் ஐரோப்பாவின் தென்பகுதி நாடுகளையும் இங்ஙனமே பாழாக்கினர்.

---

1. Alaric. 2. Gaiseric. 3. Attila. 4. Barbarian
5. Northmen.

இங்ஙனமாக நாடுகளும் நகரங்களும் ஏன் காலா காலங்களில் பாழாக்கப்படவேண்டும்? மக்கள், ஈக்களையும் எறும்புகளையும்போல ஏன் கொல்லப்பட வேண்டும்? தாமர்லேன் அட்டில்லா போன்ற கொடிய வீரர்கள் ஏன் தோன்றவேண்டும்? அல்லது மக்கள் ஏன் அவர்களை உடனே அழிக்காது விட்டனர்? என்பன போன்ற கேள்விகள் இவ்வரலாற்றைக் கற்போர் உள்ளத்தில் எழுகின்றனவல்லவா?

இப்படிப்பட்ட ஓர் அரக்கப் போர்வீரனைப் பல நாட்டினர் ஒன்று சேர்ந்து அழித்திருந்தால் அது மக்கள் வரலாற்றில் ஒப்பற்ற நிகழ்ச்சியாகு மன்றோ? ஆம்; பத்தொன்பதாம் நூற்றூண்டில் இத்தகைய நிகழ்ச்சி யொன்று உண்மையாகவே நடந்தது. இது நெப்போலியன் என்னும் பிரஞ்சுப் போர்வீரனைப் பற்றியது. இதைச் சற்று விரிவாய்க் கூறுவோம்.

நெப்போலியன் 1769-ஆம் ஆண்டில் கார்சிக்கா[1] என்னும் தீவில் பிறந்தான். இத்தீவைப் பிரெஞ்சுக்காரர் வாங்கின ஆண்டில் அவர்கள் அங்குள்ள இளைஞர்கள் பலரைப் பாரிசு நகருக்குக் கொண்டுபோய் அவர்களுக்குப் போர்ப்பயிற்சி அளித்தனர். இவர்களில் நெப்போலியன் ஒருவன்! என்ன விந்தை! பிரெஞ்சுக்காரர் கார்சிக்காவை விலைக்கு வாங்கினது சனியனை விலைக்கு வாங்கிஞற் போன்றதாகும். கார்சிக்காவின் வீதியில் விளையாடிக்கொண்டிருந்த நெப்போலியனைப் பாரிசுக்குக்கொண்டுபோய் அவனுக்குப் போர்ப்பயிற்சி அளித்தது, காட்டிற் கிடந்த பாம்பை வீட்டிற்குக் கொண்டுபோய்ப் பாலூட்டி வளர்த்தது போன் றிருக்கின்றதன்றோ? இந்நிகழ்ச்சியைக் கடவு

1. Corsica.

ளின் திருவிளையாடல் என்போமா? மக்களின் ஊழ் வினைப் பயன் என்போமா? நிற்க.

பாரிசிற் போர்ப்பயிற்சி பெற்றபின் நெப்போலியன் பிரஞ்சுப் படையிற் சேர்ந்தான். தனது இருபத்துநான்காம் வயதில் (1793) தூலன்[1] என்னுமிடத்தில் ஒரு பெரும்போர் புரிந்து புகழ்பெற்றான். அதனால் 1796-ஆம் ஆண்டில் இத்தாலிக்கு அனுப்பப்பட்ட பிரஞ்சுப்படைக்குத் தலைவனாக நியமிக்கப் பட்டான். அவன் இந்த இத்தாலிப் போரில் அரும் பெரும் வெற்றிகள் பெற்று ஒப்புயர்வில்லாப் பெருமையுடன் பிரான்சுக்குத் திரும்பினான். தங்களை மீட்கும் தலைவன் நெப்போலியனே எனப் பிரஞ்சு மக்கள் எண்ணி, 1801-ஆம் ஆண்டில் அவனைத் தங்கள் அரசனாக ஏற்றுக்கொண்டனர்! அரசனை ஒழிக்க அவர்கள் தொடங்கிய புரட்சிப் போர் அவர்கள் அரசனையே மீண்டும் பெறுவதாக முடிந்தது! பாம்பை யொத்த நெப்போலியனைப் பிரஞ்சு மக்கள், அரசனாகக் கொண்டால், அவனால் விளையுந் தீமைகளையும் நுகரவேண்டுவது முறையே யன்றோ? இத்தீமைகளைக் கடவுள் ஏற்பாடு என்று கூறுவதில் யாது பயன்? இது நிற்க.

நெப்போலியனுடைய ஆவலெல்லாம் ஆட்சி ஒன்றுதான். "என் தலைவி! ஆட்சியே என் தலைவி! இவ்வாட்சியைப் பெற நான் அரும்பாடு பட்டேன்! ஆதலின் என் தலைவியை வேறொருவருக்குங் கொடேன். அவளை என்னைவிட்டுப் பிரிக்கவும் இசையேன்" 19 என்று ஒரு தடவை அவன் கூறினான். இவ்வாட்சியைப் பெறுவதற்காகத்தான் அவன் ஏறக்

1. Toulon.

குறைய இருபதாண்டுகளாக ஐரோப்பாவின் எல்லா நாடுகளுடனும் போர் தொடுத்தான். இதற்காகவே முப்பது நூறாயிரம் பிரஞ்சு மக்களின் உயிரைச்சூறை யாடினான். இத்தலி, ஆலந்து, பெல்சியம் ஆத்திரியா, போலந்து, செர்மனி, ருசியா, பெயின் ஆகிய எல்லா ஐரோப்பிய நாடுகளையும் வென்று, தன்னை மன்னர் மன்னனாக்கினான். தன் ஒரு தம்பியை ஆலந்திலும், மற்றொரு தம்பியைப் பெயினிலும் அரசர்களாக்கினான்; எல்லா நாடுகளும் எல்லா மக்களும் தனக்கு அடங்கியிருக்க வேண்டும் என்பதே நெப்போலியனுடைய ஆட்சியின் வேட்கை.

ஆனால், கடலாகிய இயற்கை அரணாலும் கடற்படையாகிய செயற்கை அரணாலும் காக்கப்பட்டிருப்பதனால் "எவருக்கும் பணியோம்" என்று எப்பொழுதும் தனி ஆட்சியாளராய் விளங்கி வரும் ஆங்கிலேயர்மட்டும் நெப்போலியனை எதிர்த்துப் போர் புரிந்து வந்தனர். அவர்களுடைய கடற்படைத் தலைவனான நெல்சன் பிரஞ்சுக் கடற்படையையும் அழித்தான். இதன்பின், 1811-ஆம் ஆண்டில் ருசியா நெப்போலியனை எதிர்த்தது. இப்போரில் நெப்போலியன் தன் அரிய வீரர்களையெல்லாம் இழந்து தலையிறக்கத்துடன் திரும்பினான். திரும்பும் வழியில் ஆத்திரியாவும் செர்மனியும் 1813-ல் லிப்சிக்[1] என்னுமிடத்தில் நெப்போலியனைத் தோல்வியுறச் செய்தன.

ஐரோப்பாவை அடிமை கொண்ட அரக்க மன்னர் மன்னன் முடி யிழந்தான்; எல்பா என்னும் மத்திய தரைக் கடலிலுள்ள ஒரு தீவுக்குச் சிறையாக

1. Leipzig.

அனுப்பப்பட்டான். இத்தீவினின்றும் தப்பி யோடி வந்து, மீண்டும் ஒரு பிரஞ்சுப் படையைத் திரட்டி, வாட்டர்லூ என்னுமிடத்தில் போர் புரிந்தான். இப் போரிலும் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டான். மீண் டும் சிறைப்படுத்தப்பட்டுத் தென்கடலிலுள்ள எலினுத்[1] தீவுக்கு அனுப்பப்பட்டான்.

இங்ஙனம் இருபதாண்டுகளாகப் புரிந்த இவ்வுரி மைப் போர்களினுலன்றோ நெப்போலியனது அரக்க ஆட்சி அழிக்கப்பட்டது? அந்நிகழ்ச்சியை மக்கள் வரலாற்றில் ஒப்பற்ற நிகழ்ச்சியெனக் கூறுவது மிகையாகுமோ?

நெப்போலியன் எலினுத் தீவில் தன் இறுதி நாட் களைக் கழித்தான். இச்சிறைவாசத்தினுற்றுன் அவ னுக்கு அரசியல் ஞானம் உதயமாயிற்றுப் போலும்! தான் இறக்குமுன் அவன் கூறிய கூற்றுக்களில் ஒன்று: "உலகத்தில் இரு வலிமைகள் உள்ளன; ஒன்று வாள் வலிமை; மற்ருென்று உரிமை யுணர்ச்சி வலிமை; இறுதியில் உரிமை யுணர்ச்சி வலிமையே வாள் வலிமையை வெல்லும்!" 20 என்பது.

உரிமை உணர்ச்சியால் ஐரோப்பிய மக்கள் நெப் போலியனின் ஆட்சியை அழித்தது ஒரு பெரும் நிகழ்ச்சியே என்பதில் சிறிதும் ஐயமில்லை. மக்கள் ஒற்றுமைப்பட்டால் இத்தகைய அரக்க அரசு களை அழிக்கலாம் என்பதும் அவர்கள் முயன்ருல் இவ்வரசுகளைத் தோன்ருதிருக்கச் செய்யலாம் என்ப தும் நாம் வரலாற்றுக் கலையிலிருந்து பெறும் உண் மைகள். இவ்வுண்மைகளை இப்பொழுது நடக்கும் இவ்விரண்டாம் உலகப் போரிலிருந்தும் இனி விவ

1. Helena.

ரித்துக் காட்டுவோம். நோய் வந்தபின் மருந்திடு வதைவிட நோய் வராமல் தடுப்பது சிறந்தது. அது போல அரக்க அரசுகள் எழும்பியபின் அவற்றோடு பொருது அவற்றை வெல்லுவதைவிட அவை எழும் பாது தடுப்பதே சிறந்தது.

> "பகைவர் ஆரப் பழங்கண் அருளி
> நகைவர் ஆர நன்கலஞ் சிதறி
> ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால்"

என்னும் பழந் தமிழ்த் தொடர்களில் (பதிற்றுப் பத்து) இச்சிறப்பொழுக்கங்களைக் காணலாம்.

> "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்"

என்னுந் திருக்குறள் அறிவுரையும் இங்கே நினைவுகூர் தற்குரியது.

6. வணிகப் போர்களும் ஆட்சிப் போர்களும்

இவ்வுலக வரலாற்றிற் சில வேளைகளில் மிகச் சிறிய நிகழ்ச்சிகள் மிகப் பெரிய மாறுதல்களை விளை வித்துவிடுகின்றன! இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் ஒன்று, 1453-ஆம் ஆண்டில் **கான்ஸ்டான்டிநோபிள்** என்னும் நகரம் துருக்கியர் கையில் வீழ்ந்ததாகும்.

பல நூற்றாண்டுகளாக இந்நகரத்துத் துறைமுகத் தின் வழியேதான் மிளகு, ஏலக்காய், பஞ்சுத்துணி, பட்டாடை முதலான கீழ்நாட்டு வணிகப் பொருள்க ளெல்லாம் மேல் நாடுகளுக்குச் சென்றுகொண்டிருந் தன. இத்துறைமுகத்தைக் கைப்பற்றியவுடன்

துருக்கியர், மிகு விரைவில் மிகுந்த ஊதியம் பெற விரும்பிக் கீழ் நாட்டு வணிகப் பொருள்களின்மேல் மிக்க வரிகளை விதித்து மேனாட்டு வணிகத்துக்குப் பேரிடைஞ்சல்களை விளைவித்தனர்.

இவ்விடைஞ்சல்களை நீக்க வேண்டி, ஐரோப்பிய மக்கள் நேரே கீழ் நாடுகளுக்குச் செல்லத் தக்க கடல் வழியைக் கண்டறிய முயற்சி செய்தனர். இம் முயற்சியில் **போர்த்துக்கேசியர்** வெற்றி பெற்றனர். அவர்களுடைய மாலுமிகளில் ஒருவரான **வாசுகோடிகாமா**[1] என்பவர் ஆப்பிரிக்காவைச் சுற்றி, இந்துமா கடலையும், அரபிக் கடலையும் கடந்து, **கள்ளிக்கோட்டை**[2] என்னுமிடத்தில் 1498-ஆம் ஆண்டில் வந்திறங்கினார் ! பாய்க் கப்பலிலேயே பதினாயிரம் மைல் கடற் பிரயாணஞ்செய்து இப்புதுவழியைக் கண்டறிந்தது மிக்க பெருமைக் குரியதன்றோ ?

புதிய கடல் வழியைக் கண்டறிந்ததனால் இந்திய வணிகப் பொருள்கள் நேரே ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகப்பட்டன. துருக்கியர்அரபியர் முதலானோருடைய வணிகம் முற்றிலும் அழிந்தது. கான்ஸ்டான்டி நோபிளின் செல்வம் கனவைப்போல் மறைந்தது. மேல்நாடுகளின் செல்வம் மலைபோல் ஓங்கியது. கீழ் நாடுகளெல்லாம் ஒவ்வொன்றாய் மேல் நாடுகளின் ஆட்சிக்குட்பட்டன. ஒரு சிறு நிகழ்ச்சியால் மேலது கீழும் கீழது மேலுமாக மாறின ! துருக்கியரின் வெற்றியால் உலகுக்கு நேர்ந்த விளைவுகளின் விசித்திரம் என்னே !

போர்த்துக்கேசியரைப்போலவே பானியரும் இந்தியாவுக்குச் செல்லத்தக்க கடல் வழியைக் கண்

1. Vasco de Gama. 2. Calicut.

டறிய முயன்றனர். 1492-ஆம் ஆண்டில் அவர்களு டைய மாலுமிகளில் ஒருவரான கொலம்பசு என்பவர் உலகம் உருண்டையா யிருப்பதனுல், பெயினிலிருந்து நேரே மேற்கே சென்ருல் கிழக்கிலுள்ள இந்தியாவுக் குப் போய்ச் சேரலாம் என்று துணிந்து, இதற்குமுன் ஒருவரும் சென்றிராத அட்லாண்டிக் கடலின் வழியே சென்ருர். அறுபத்தொன்பது நாள் பயணத்திற்குப் பின். தரையைக் கண்டார். 'இந்தியாவைக் கண் டேன்' என அகமகிழ்ந்து, அங்குள்ள பருத்தி, புகை யிலே முதலிய பொருள்களையும் கிறித்து சமயத்திற் சேர்ப்பதற்காக "இந்தியர்"களென்று இருவரையும் பெயினுக்குக் கொண்டு வந்தார். இவர் இங்ஙனம் கண்டறிந்த நாடு பகாமாத்[1] தீவுகள்! இந்தியாவன்று! ஆனல், பின்னர் அமெரிக்காவும் கண்டறியப்பட்டது.

அமெரிக்காவைக் கண்டறிந்த நிகழ்ச்சி கீழ் நாடு களுக்குக் கடல் வழியைக் கண்டறிந்த நிகழ்ச்சியைக் காட்டிலும் பெருமை வாய்ந்தது எனலாம். ஏனெ னில் பல்லாயிரக் கணக்கான ஐரோப்பியர் இப்புதிய உலகு[2]க்குக் குடியேறினர். அங்கிருந்து அளவிறந்த பொன்னையும் வெள்ளியையும் ஐரோப்பாவுக்கு அனுப்பினர். அங்குத் தம் அரசையும் ஏற்படுத்தினர். ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் வணிகம் எல்லே யில்லாது பெருகிற்று. ஆனல், தொடக்கத்தில் இந் நலன்களெல்லாம் புதிய உலகை முதன்முதலாகக் கண் டறிந்த பானியரின் தனி உரிமைகளாகவே விளங்கின!

கீழ் நாடுகளின் வணிகம் போர்த்துக்கேசியர் கையில்! புதிய உலகத்தின் வணிகமும் ஆட்சியும் பானியர் கையில்! இங்ஙனமாக இவ்விரு நாட்டு

1. Bahama Islands. 2. New World.

புதிய கடல் வழி


வட அமெரிக்கா
பசிபிக் மா கடல்
அட்லாண்டிக் கடல்
ஆசியா
ஆப்பிரிக்கா
இந்தியா
இந்து மா கடல்
ஆத்திரேலியா
தென் அமெரிக்கா
பகாமா தீவுகள்
பிலிப்பைன் தீவுகள்
THE POPES LINE
கொலம்பசு
மாகலன்
மாகலன்
மாகலன்
மாகலன்
மாகலன்
வாசுகோடி
காமா
① இங்கிலாந்து
② போர்ச்சுக்கல்
③ ஸ்பெயின்
④ நன்னம்பிக்கை முனை
வாசுகோடி காமா
கொலம்பசு
மாகலன்

மக்களும் தழைத்து ஓங்கினர். மற்றை நாட்டினரோ தம் பழைய வறுமையிலேயே ஆழ்ந்து கிடந்தனர்! இத்தகைய ஏற்றத் தாழ்வுகளால் இவ்விரு நாடுகளுக்கும் மற்றை ஐரோப்பிய நாடுகளுக்கும் போர் எழும் நிலைமை ஏற்பட்டது.

இங்ஙனம் போர் எழாதபடி தடுக்கக் கிறித்து சமயத் தலைவரான பாப்பு 1493-ஆம் ஆண்டில் பூகோளத்தை வட முனையிலிருந்து தென் முனை வரைக்கும் இரண்டாகப் பிரித்து, அசோர்[1] தீவுகளுக்கு முந்நூறு மைலுக்கு மேற்கேயுள்ள நாடுகளெல்லாம் பெயினுக்கும், அவற்றிற்குக் கிழக்கேயுள்ள நாடுகளெல்லாம் போர்ச்சுக்கல்லுக்கும் சொந்தமானவை என்று தீர்ப்பிட்டார்! இத்தீர்ப்பு, போரை மூட்டுவதற்கானதேயன்றிப் போரைத் தடுப்பதற்கானதன்று என்பது சொல்லாமலே விளங்கும்.

இதன் பின்னர், செர்மனி, இங்கிலாந்து, ஆலந்து முதலிய நாடுகள் பாப்புவின் ஆட்சியை அகற்றித் தத்தம் நாடுகளில் பிராட்டெத்தாந்துப் பிரிவை ஏற்படுத்தினமையால், வணிகப் போட்டியும் சமயப் பிரிவுகளும் சேர்ந்து நாம் முற்கூறியபடி மூன்று நூற்றாண்டுகளாக ஐரோப்பாவைப் போரில் ஆழ்த்தின.

முதலில் டச்சுக்காரருக்கும் (ஆலந்து நாட்டு மக்கள்) போர்த்துக்கேசியருக்கும் போர் நிகழ்ந்தது. ஐந்து ஆண்டுகளுக்குள் (1602-1607) போர்த்துக்கேசியர் தோல்வி யடைந்தனர்! கிழக்கிந்தியத் தீவுகளான சாவா[2] சுமத்திரா[3] முதலானவை டச்சுக்காரர் வயப்பட்டன. 1607-ல் போர்த்துக்கேசிய-பானியக்

1. Azores. 2. Java. 3. Sumatra.

கப்பற் படையும் நொறுக்கப்பட்டது. இதனால் கீழ் நாட்டு வணிகமெல்லாம் டச்சுக்காரர் தனிஉரிமையாக மாறிற்று! பானியரது அடிமைத்தனத்தினின்றும் நீங்கித் தனி யாட்சி யுரிமையை அடைந்த ஆலந்து மக்களின் வெற்றி வியக்கத்தக்கதேயாம்.

ஆனால் ஆலந்து மக்களின் வெற்றி நிலையா வெற்றியாக முடிந்தது! அவர்களுக்கு இரண்டாண்டு களுக்கு முன் கிழக்கிந்திய வணிகத் துறையில் இறங்கிய ஆங்கிலேயரும் சாவா, சுமத்திரா முதலான தீவுகளுக்குச் சென்று, அவர்களுடன் போட்டியிட்டு, முதலில் தோல்வியடைந்த போதிலும், இறுதியில் வெற்றி பெற்று, இந்திய வணிகத்தையெல்லாம் தம் தனி உரிமையாக்கிக்கொண்டனர். இங்கிலாந்தும் ஆலந்தும் பிராட்டெத்தாந்துப் பிரிவைத் தழுவிய ஒரு சமய நாடுகள் ஆயினும் வணிகத் துறையில் இரு நாடுகளுக்கும் கடும் போர்!

ஆலந்தை வென்ற இங்கிலாந்துக்குப் போட்டியாகப் பிரான்சு 1610-ஆம் ஆண்டில் இந்திய வணிகத் துறையில் இறங்கிற்று. பிரஞ்சுக்காரர் காரைக்கால், புதுச்சேரி, மசூலிப்பட்டினம், சந்திரநாகூர் முதலான பலவிடங்களிற் கோட்டைகள் கட்டித் தம் வணிகத்தைப் பெருக்கி வந்தனர். இவ்விடங்களுக்குப் பக்கத்திலேயே ஆங்கிலேயரும் தம் வணிகத்தைத் தொடங்கியிருந்ததனால் இரு நாட்டினருக்கும் முதலில் போட்டியும் முடிவிற் போரும் எழுந்தன.

வணிகத்திற் போட்டியெழுவது இயல்பு. இப்போட்டி வணிகர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மை விளைவிப்பதே. ஆயினும் போட்டி காரணமாக இவ்விரு நாட்டு வணிகர்களுக்கும் போர்

எழுந்ததற்குக் காரணம் இவர்கள் இந்தியாவில் ஆட்சி புரிய வேண்டும் என்று எண்ணியதே யாகும்.

ஏனெனில், இவ்வமயத்தில் மொகலாயரின் அரசு சிதைந்து, நாடெங்கும் அமைதி குன்றிச் சிற்றரசர்கள் பலருக்குள்ளும் இடைவிடாது போர்கள் எழுந்துகொண்டிருந்தன. இப்போர்கள் மூலம் பிரஞ்சுக்காரர் தம் ஆட்சியை நிறுவிவிடலாம் என்று எண்ணினர். கர்நாடகப் போர்கள் என வழங்கப்படும் இப்போர்களில் (1740-1755) பிரஞ்சுக்காரர் முதலில் வெற்றி பெற்றனர். ஆனால் இறுதியில் பெருந்தோல்வியடைந்து, தங்களுடைய கோட்டைகளையும் வணிகத்தையும் ஆட்சியையும் இழந்து இந்தியாவை விட்டு வெளியேறினர்.

ஆங்கிலேயரின் வெற்றி இணையற்ற வெற்றி என்பதில் ஐயமென்னே? தங்களுக்குப் பலவாண்டுகளுக்குமுன் கிழக்கிந்திய வணிகத் துறையில் இறங்கியிருந்த மற்றை ஐரோப்பியர்களையெல்லாம் ஒவ்வொருவராக வென்று, அவரவர்களின் வணிகத்தையும் ஆட்சியையும் தம் உரிமையாக்கினர். 1763-ஆம் ஆண்டுக்குப் பின் அவர்களை எதிர்க்கத்தக்க வேறு ஐரோப்பியர்கள் இந்தியாவில் இல்லாதொழிந்தனர். எனவே, அதன்பின் ஆங்கிலேயர் இந்தியாவைச் சிறிதுசிறிதாகக் கைப்பற்றி இறுதியில் நாடு முழுவதிலும் தம் ஆட்சியைப் பரப்பினர். ஒரு வணிகக் கூட்டத்தவர் கையில் வீழ்ந்த ஒரு பெரிய நாடு இந்தியாவைத் தவிர வேறில்லை! ஆங்கிலேயரைப்போல எங்கும் இணையற்ற வெற்றி பெற்ற மக்கள் வேறெவரும் இலர்! என்னே வரலாற்றின் வியப்புக்கள்!

நிற்க, ஆங்கிலேயர் இந்தியாவில்மட்டும் அன்றிப் புது உலகிலும் பெரும் வெற்றிகள் பெற்றனர். முதலில் பானியருடைய கப்பல்களையும் நாடுகளையும் கொள்ளையிட்டனர். இக்கொள்ளையிற் சிறந்து விளங்கிய டிரேக்[1] என்பவருக்கு ஆங்கில அரசியான எலிசபெத்து[2] 'சர்[3]' என்னும் மேன்மைப் பட்டம் சூட்டினாள்! இவ்வீரன் 1586-ஆம் ஆண்டில் காடிசு[4] என்னும் பானியத் துறைமுகத்துக்குள்ளேயே சென்று அங்கிருந்த பல பானியக் கப்பல்களை நாசஞ் செய்து விட்டுத் திரும்பினான். ஆங்கிலேயர் அளவில்லா மகிழ்ச்சி யடைந்தனர். தங்கள் வீரன் 'பெயின் அரசனின் தாடியைப் பொசுக்கிவிட்டான்!' எனக் கொண்டாடினர்.

"இச்செயல்கள் முறையாகுமோ?" என நாம் வினவலாம். இதற்கு ஆங்கில வரலாற்று நூலோர் 'இத்தகைய கொள்ளைக்காரர் எழும்பிப் பெயினை அழித்திராவிட்டால், பானிய அரசன் எலிசபெத்தரசியை எளிதிற் கொன்றிருப்பான்; இக்கொள்ளையைத் தடுக்க முயன்றிருந்தாலும் எலிசபெத்து வெற்றிபெற்றிராள்; தன் நாட்டு வருமானம் குறைவாக இருந்ததனால் இக்கொள்ளையில் ஒரு பங்கை அவள் பெற்றும் வந்தாள்; எல்லா நாடுகளும் போர் புரிந்துவந்த காலத்தில் இங்கிலாந்து மட்டும் வாளாவிருக்குமா?' என்பனபோன்ற ஒன்றுக்கொன்று முரண்பட்ட விடைகளை அளிக்கின்றனர். 21

இவ்விடைகளைச் சீர்தூக்கும் வேலை நமக்கு வேண்டா. ஏனெனில், அக்காலத்திற் கடற்கொள்ளைக்காரர் மிகவும் கண்ணியமாகப் பாராட்டப்பெற்று

1 Drake. 2 Elizabeth. 3 Sir. 4 Cardiz.

வந்தனர். 'வணிகம் என்பது கொள்ளையிடுவதும் ஆட்சியென்பது அழிப்பதும்' என்பன அக்காலத்திய அறம்! மேலும், ஆங்கிலேயரைப்போலவே மற்ற ஐரோப்பியரும் தாம் சென்ற விடமெல்லாம் மக்களைக் கொள்ளையிட்டும் அழித்தும் வந்தனர். மேலும் அந்தோ, எல்லா ஐரோப்பிய வணிகர்களும் ஆப்பிரிக்காவுக்குச் சென்று, அங்குள்ள நீகிரோ மக்களை வேட்டையாடிப் பிடித்து, அவர்களைக் கொண்டு போய் அமெரிக்காவில் விற்றுப் பெருத்த ஊதியமும் பெற்றனர்! இதைவிடப் பெரிய இழிசெயல் வேறு யாது? இருபது நூற்றாண்டுகளாகக் கிறித்து சமயம் ஐரோப்பாவிற் கைக்கொள்ளப்பட்டு வந்தும் அஃது இன்னும் நீர்க்குட் பாசி போலவே விளங்குகிறது போலும்! இது நிற்க;

பெயினைக் கொள்ளையிட்டதன் விளைவாக இங்கிலாந்துக்கும் பெயினுக்கும் ஒரு பெருங் கடற்படைப் போர்[1] நிகழ்ந்தது. இப்போரில் பெயினுடைய பெருங் கப்பல்களெல்லாம் ஆங்கிலேயக் கப்பல்களால் எளிதில் அழிக்கப்பட்டன. அனுமார் தன் வாலில் நெருப்புப் பந்துகளைக் கட்டிக்கொண்டு இலங்கையைச் சுட்டெரித்தது போல், ஆங்கிலேயர் தம் சிறு கப்பல்கள் சிலவற்றில் நெருப்பைக் கொளுத்தி அவற்றை நள்ளிரவில் பானியக் கப்பல்களுக்கிடையே செலுத்தி, அவற்றிற் பலவற்றை அழித்தனர்! இந்நெருப்புக்குத் தப்பியோட முயன்ற பல பானியக் கப்பல்கள் புயல்வாய்ப்பட்டுச் கடற்கரைப் பாறைகளில் மோதி யுடைந்தன. "கடவுள்

1 Armada.

காற்றை ஊதினுர்; அது பானியக் கப்பல்களை உடைத்தன"! 22 என ஆங்கிலேயர் தம் வெற்றியைப் போற்றினர். கடவுள் ஆங்கிலேயர் பக்கத்தில் நின்று போர் புரியவில்லை; பானியர் பக்கத்திலும் நிற்க வில்லை. புயற்காற்று இல்லாவிடினும் ஆங்கிலேயரே வெற்றி பெற்றிருப்பர். ஏனெனில் அவர்கள் கப்பற் படையில் திறமைவாய்ந்த மாலுமிகளும் நாட்டுணர்ச்சி மிகுந்த வீரர்களும் நிரம்பியிருந்தனர். புதிய முறைப் பீரங்கிகளையும் செய்துவைத்திருந்தனர். "கடற்படைப் போரை உலகுக்குக் கற்பித்தவர் ஆங்கிலேயரே" 23 என வரலாற்று நூலோர் கூறுகின்றனர். இவ்வெற்றிக்குப் பின் இங்கிலாந்தின் ஆட்சி முன்னிலும் உயர்ந்து விளங்கிற்று.

இதன்பின், பிரான்சை யாண்ட பதினுன்காம் லூயி அரசன் தனது ஆட்சியை இங்கிலாந்தின் ஆட்சியைவிட மிகுதியாகப் பெருக்கிவிடுவதென்று எண்ணினுன். இதற்காக ஆலந்து, முதலான அண்டைநாடுகள்மீது போர் தொடுத்தான். ஆனுல் இப்போர்களி லெல்லாம் இங்கிலாந்து, பெயின், ஆத்திரியா முதலான மற்றெல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து லூயிஅரசனை எதிர்த்தமையால், லூயி முடிவில் தோல்வியடைந்தான். அதுவுமன்றிக் கடலுக்கப்பாலுள்ள தன் ஆட்சி நாடுகளையும் இழந்தான். பெயின் அரசைப் பிரான்சுடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று லூயி புரிந்த போரில்[1] (*1701—1713*) இங்கிலாந்துக்கு **நியூபவுண்ட்லண்ட்[2] நோவாசுகாசியா[3], அட்சன்பே[4] ஆகிய**

1 The War of the Spanish Succession.

2 Newfoundland. 3 Novoscotia. 4 Hudson Bay.

அட்லாண்டிக் நாடுகளும் சிபிரால்டர்[1] மைனர்க்கா[2] ஆகிய மத்தியதரைக்கடல் நிலப் பகுதிகளும் கிடைத்தன.

இதற்குப் பின் நடந்த ஏழாண்டுப் போரில்[3] (1756 – 1763) பிரான்சு கானடாவையும், லூசியானா[4]வையும் இழந்தது. பிரான்சுக்குத் துணையாகப் போர் புரிந்த பெயினும் தனக்கு உரிமையான பிளாரிடா[5] மாகாணத்தை இழந்தது.

இங்ஙனமாகத் தம்மை எதிர்த்துப் போர் புரிந்த எல்லா ஐரோப்பிய மக்களையும் ஆங்கிலேயர் வென்று, அன்னவர் ஆட்சி நாடுகளையெல்லாம் தம் வயமாக்கித் தம் வணிகத்தையும் செல்வத்தையும் அளவின்றிப் பெருக்கிவந்தனர்.

இவ்வமயத்திற்றான் அவர்களால் உலகத்தின் பொருளாதார வாழ்க்கையில் எல்லையில்லா மாறுதல்கள் எழும்படியான ஒரு பெரும் நிகழ்ச்சி நிகழ்ந்தது. அஃது நூல் நூற்பது, துணி நெய்வது, நிலக்கரி தோண்டுவது, இரும்புக் கருவிகள் செய்வது முதலான தொழில்களில் புதிய புதிய இயந்திரங்களை அமைத்து, இவ்வியந்திரங்களை நீராவியினால் இயக்கிக், கையினாற் செய்வதைவிட அழுத்தமாகவும் நூறு முதல் ஆயிரம் பதினாயிரம் மடங்குவரை விரைவாகவும் பொருள்களைச் செய்யும் புதிய முறைகளைக் கண்டறிந்ததாகும். மேலும், இச்செய்பொருள்கள் நீராவியின் உதவியினாலேயே இயக்கப் பெற்ற புகை வண்டிகள் மூலமாகவும் கப்பல்கள் மூலமாகவும் உலகத்தின் பல பாகங்களுக்கும் மிக எளிதாகவும்

1 Gibralter. 2 Minorca. 3 Seven Year's War.
4 Louisiana. 5 Florida.

மிகக்குறைந்த செலவிலும் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன. இங்கிலாந்து, உலகத்தின் தொழிற்சாலையாகவும், வணிகத் துறையாகவும், பாங்கியாகவும் எழுச்சி பெற்றது. இச்சிறு நாட்டின் பேறு என்னே பெருமை யுடைத்து !

வணிகத்திலும், கடற்படையிலும் ஆட்சி நாடுகளிலும் இயந்திரத் தொழிலின் முறைகளிலும் செல்வத்திலும் ஒப்புயர்வில்லாது விளங்கிய இவ்விங்கிலாந்தை வெல்ல முடியாமற்ருன் நெப்போலியன் தோல்வியுற்ருன். நெப்போலியனை எதிர்த்துப் புரிந்த போரில் ஆங்கிலேயருக்குப் பங்கில்லாமற் போகுமா? 1815-ஆம் ஆண்டில் வியன்ன[1] நகரில் கூடிய மாநாட்டில் டச்சுக்காரருக்கு உரிமையான நன்னம்பிக்கை முனை[2] இலங்கை ஆகிய இரு நிலப் பகுதிகளும், பிரஞ்சுக்காரருக்கு உரிமையான மொரிசியசு[3] எலிகோலண்டு[4] ஆகிய தீவுகளும், மத்தியதரைக் கடலிலுள்ள மால்டா[5] தீவும் அயோனியன்[6] தீவுகளும் ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்டன.

இதற்கு முன்னரே 1769-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆத்திரேலியாவைக் கண்டறிந்திருந்தனர். அதனால், தென் கடலிலுள்ள அத்தனிக் கண்டமும் அவர்கள் ஆட்சிக்குட்பட்டது.

என்ன பெருமை; உலகத்தில் தோன்றிய எல்லா அரசுகளிலும் ஆங்கில அரசே ஒப்புயர்வின்றி விளங்குகின்றது ! இவ்வாட்சி நாடுகளில் ஞாயிறு மறைவதில்லை 24 யென்ற பழமொழியும் வழங்கி வருகின்றது.

---

1 Vienna. 2 Cape of Good Hope. 3 Mauritius.
4 Heligoland. 5 Malta. 6 Ionian Islands.

ஆங்கில ஆட்சி 1815-க்கும் 1870-க்கும் இடையில் உச்சநிலை யடைந்திருந்தது. ஏனெனில் அவ்வமயம் ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளெல்லாம் நெப்போலியனுடைய போர்களினுற் சிதைந்து நலிந்து கிடந்தன. எனவே, அவை தத்தம் சிறு பணியைச் செய்துகொண்டு, செவ்வாய் முதலான கிரகங்களைப் போல ஞாயிருகிய இங்கிலாந்தைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தன எனலாம். இது காரணமாக ஐரோப்பாவில் அமைதியும் நிலவியிருந்தது.

ஆனுல், 1870-ம் ஆண்டுக்குப் பின் இந்நிலையிற் பெரிய மாறுதல் ஏற்பட்டது. அதற்குக் காரணம் ருசியா, இத்தலி, பிரான்சு, செர்மனி முதலிய பல நாடுகள் பேரரசுகளாக மாறினமையும், இப்பேரரசுகளுக்குள் வணிகப் போட்டியும் ஆட்சிப் போட்டியும் எழுந்தமையுமேயாகும். அந்தோ, ஐரோப்பாவின் அமைதி நீங்கி வல்லரசுகளின் போர் தொடங்கிற்று! இந்நிகழ்ச்சிகளைச் சிறிது விவரமாகக் கூறுவோம்.

ருசியா பல நூற்றுண்டுகளாகப் பின்னடைந்த நிலைமையிலேயே இருந்துவந்தது. ஆனுல், 1682-ஆம் ஆண்டில் அந்நாட்டுக்கு அரசனுக எழுந்த பீட்டர்[1] என்பவரும், அதன்பின் அரசியாக ஆண்ட காதரைன்[2] (1762-1796) என்பவரும் தம் நாட்டின் அரசியல் முறை, வாழ்க்கை நிலை, பொருளாதார அமைப்பு ஆகிய எல்லாத் துறைகளிலும் பல சீர்திருத்தங்கள் செய்து, பல கைத் தொழில்களையும் நிறுவித், தம் நாட்டை ஒரு பேரரசாக விளங்கச்செய்தனர். ருசியர் தம் செல்வாக்கைப் **பெர்சியா**[3] வரைக்கும் பரவச் செய்

1 Peter. 2 Catherine. 3 Persia.

தனராதலால், தம் இந்திய ஆட்சிக்குக் கேடு வருமோ வென ஆங்கிலேயரும் ஐயுறவேண்டியதாயிற்று!

1815-ஆம் ஆண்டில், இத்தலி, எட்டுத் தனித் தனி ஆட்சிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றிற் பெரும் பகுதி ஆத்திரியர் வயமிருந்தது. இங்ஙனம் தம் நாடு துண்டு துணுக்குக்களாகப் பிரிக்கப்பட்டும் அயலவர் ஆட்சிக்குட்பட்டும் கிடப்பதைக் கண்ட **காரிபால்டி**[1] **மாசீனி**[2] என்னும் இத்தலிய வீரர்கள் இருவர் நாடெங்கும் தொண்டர் படைகளைத் திரட்டி, ஆத்திரியரைப் போரில் வென்று, தம் நாட்டுக்கு ஒற்றுமையையும் தனி ஆட்சியையும் அளித்தனர். இங்ஙனம் தனியாட்சி யுரிமையைப் பெற்ற பின் இத்தலி தன் கடற்படை, தரைப்படை, கைத்தொழில், வணிகம் முதலிய பல துறைகளிலும் தீவிர முயற்சி செய்து, விரைவில் ஒரு வல்லரசாகத் திகழ்ந்தது.

பதினன்காம் லூயி அரசன் காலத்திலும் நெப்போலியன் காலத்திலும் தன்னுடைய ஆட்சி நாடுகள் பலவற்றை இழந்திருந்த பிரான்சும் 1857-ல் **அல்சீரியா**[3], 1858-ல் கொச்சின் சீன[4], 1863-ல் **கம்போடியா**, 1893-ல் **சயாம்**[5] முதலான புதிய நாடுகளைக் கைப்பற்றி, இயந்திரத் தொழிற்சாலைகளையும் வணிகத்தையும் பெருக்கிப் பேரரசாக உயர்ந்தது.

புதிய வுலகிற் குடியேறித் தன்னந் தனியே வாழ்ந்துவந்த அமெரிக்கரும் 1898-ல் பெயினெடு போர்புரிந்து, **பிலிப்பைன் தீவு**[6] களையும், **கியூபா**[7], **ஆவாய்**[8] முதலான தீவுகளையும் ஆட்சி நாடுகளாக அடைந்தனர். மேலும், வட அமெரிக்கத் தொழிற்சாலை

1 Garribaldi. 2 Mazzini. 3 Algeria. 4 Cochin China. 5 Siam. 6 Philippine Islands 7 Cuba 8 Hawai

முதலாளிகளும் பாங்கர்களும் தென் அமெரிக்க நாடு களுக்குச் சென்று, அங்குத் தம் பொருளாதார ஆட்சியை நிறுவினர். இங்ஙனமாக அமெரிக்காவும் ஒரு பேரரசாக மாறிற்று.

ருசியா, இத்தலி, பிரான்சு, அமெரிக்கா ஆகிய இந்நாடுகளின் எழுச்சியைவிடச் செர்மனியின் எழுச்சியே பேரெழுச்சியாகும். இதற்குக் காரணர் அந்நாட்டின் ஒருபகுதியான பிரசியாவில் அமைச்சராக விளங்கிய பிசுமார்க்[1] என்பவர். "இரத்தமும் இரும்பும்" [2] என்பது இவரது ஆட்சிமுறையைக் குறிப்பிட இவர் வழங்கிய சொற்றொடர். இக்கோட்பாட்டுக் கிணங்க இவர் 1851-ல் டென்மார்க்கோடு போர் தொடுத்துச் செல்சவிக், ஆல்சடன்[3] என்னும் இரு மாகா ணங்களையும் செர்மனியுடன் சேர்த்துக்கொண்டார். 1865-ல் ஆத்திரியாவோடு போர்தொடுத்துச்செர்மனி நாடுகளை ஒற்றுமைப்படுத்தினர். 1871-ல் பிரான் சோடு போர்தொடுத்து, ஆல்சசு, லொரேய்ன்[4] என்னும் இரு பிரஞ்சு மாகாணங்களையும் பறித்துக்கொண்டார். இம் மூன்று போர்களிலும் பெற்ற வெற்றியால் செர்மனி ஐரோப்பாவில் மிகப் பெரிய வல்லரசாக மாறிற்று. அதன் படைப் பெருக்கும் தொழிற் பெருக்கும் இங்கிலாந்துக்குப் போட்டியாக விளங் கின.

ஐரோப்பாவில் வல்லரசுகள் எழுந்த இக்காலத் தில் இங்கிலாந்து அமைதியடைந்து சும்மா இருந்து விடவில்லை. அதன் வணிகம் பெருகப் பெருக அதன் ஆட்சி நாடுகளும் பெருகின! இந்தியாவை ஆட்சிக்

1 Bismarch. 2 Blood and Iron.
3 Schleswig and Holstein. 4 Alsace-Lorraine.

குட்படுத்தியபின் 1880-ல் பர்மாவும், பலுசட்டானும்[1] கைப்பற்றப்பட்டன. பின்னர், சிங்கப்பூர் மலேயா முதலான தீவுகளும், சீனுவிற் பல நகரங்களும், எகுபதும் சூயசு கால்வாயும்[2] தென் ஆப்ரிக்காவும் ஆட்சிக்குட்பட்டன. இதனுல் மற்ற வல்லரசுகளின்பகையும் பொருமையும் மேன்மேலும் பெருகின! இறுதியில் போரும் எழுந்தது.

இப்போருக்கு மூல காரணராக விளங்கியவர் செர்மன் அரசரான கெய்சர் உல்லியம்[3] என்பவர். இவர், தாம் அரசரானவுடன்; "செர்மனியில் ஒருவரே ஆட்சி புரிய வேண்டும்: அது நானே" 25எனக் கூறித் தன் நாட்டின் எழுச்சிக்கும் பெருமைக்கும் பல்லாண்டுகளாக உழைத்து வந்த பிசுமார்க்கை அமைச்சினின்றும் நீக்கிச் செர்மனியின் கைத்தொழில்களையும் கடற்படையையும் பெருக்கி, இங்கிலாந்துடன் போர் புரிவதெனத் தீர்மானித்தார். கெய்சர் உல்லியம் சென்ற வழி பதினுன்காம் லூயி அரசன், நெப்போலியன் முதலானேர் சென்ற வழியே!

செர்மனியின் எழுச்சியைக் கண்டு அஞ்சிய பிரான்சு, 1897-ல் ருசியாவுடன் நட்புப் பாராட்டித் தன்னைச் செர்மனி எதிர்த்த காலத்தில் அது தனக்கு உதவிசெய்யவேண்டுமென்று அதனுடன் ஓர் ஒப்பந்தஞ் செய்தது. ஆங்கிலேயர் சப்பானுடனும் பிரான்சுடனும் ஒப்பந்தஞ் செய்தனர். செர்மனி ஆத்திரியாவுடனும் துருக்கியுடனும் ஒப்பந்தஞ் செய்தது!

இவ்வொப்பந்தங்களினுல் ஐரோப்பிய நாடுகள் இருபெரும் பகைக் கூட்டங்களாகப் பிரிந்தன. இருபுறத்திலும் போர்க்கருவிகள் மிகுதியாகச் செய்யப்

1 Baluchistan. 2 Suez Canal. 3 Kaiser William II.

பட்டன. போரை ஒருவரும் விரும்பாவிட்டாலும், போர் எழுவது உறுதியாகத் தோன்றிற்று.

1914-ஜூன்-28-ல் ஆத்திரிய இளவரசரும் அவர் மனைவியும் **பாசினியா**[1] நாட்டுத் தலைநகரான **செரா சிவோ**[2] வழியாகச் செல்லுகையில் அந்நகரத்து இளைஞ னொருவனால் சுடப்பட்டு இறந்தனர். இக்கொலையில் **பாசினியா**வுக்கு அண்டை நாடான **செர்பியா**[3] கலந் திருக்க வேண்டுமென்று கருதி, ஆத்திரியா செர்பியா வின்மேல் போர்தொடுத்தது. செர்பியாவுக்குத் துணை யாக ருசியா சேர, ருசியாவுக்குத் துணையாகப் பிரான் சும், ஆத்திரியாவுக்குத் துணையாகச் செர்மனியும் போரிற் கலந்தன. "பதினான்கு நாளைக்குள் பாரிசைப் பிடித்துக்கொள்வோம்" எனச் சூளுரைத்த கெய்சர் பெல்சியத்தின் வழித் தனது படையை அனுப்ப முயன்றார்; பெல்சியம் மறுத்தது. ஆங்கிலேயர் பெல் சியத்துக்கும் பிரான்சுக்கும் துணையாகப் போரில் இறங்கினர். முதல் உலகப் போர் தொடங்கிற்று.

---

7. முதல் உலகப் போர்

1914-க்கும் 1818-க்கும் இடையில் நிகழ்ந்த முதல் உலகப் போர் இதற்கு முன் நிகழ்ந்திராத ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். ஏனெனில், உலகத்தி லுள்ள ஏறக்குறைய எல்லா நாடுகளும் ஒன்றோ டொன்று பொருத முதற்போர் இதுவே. மேலும், இப்போரிற்றான் முதன் முதலாகப் பலப்பல கொடிய போர்க் கருவிகள் வழங்கப்பட்டன. அன்றியும், இப்போரினால் விளைந்த அழிவுகளும் கேடுகளும்

---

1 Bosnia. 2 Serajevo. 3 Serbia

அளவுகடந்தவை. இதனால், போரை ஒழித்து விடுவதென எல்லா நாடுகளும் முடிவு செய்தன. 1914-ம் ஆண்டுப் போர் ஓர் ஊழியை முடித்து மறு ஊழியைத் தொடங்கிய போர் என மக்கள் எண்ணுகின்றனர்.

இப்போரினால் விளைந்த கேடுகளை இங்கு விவரித்துச் சொல்ல இடமில்லை. அவற்றை இவ்வளவு அவ்வளவு என்று அளவிட்டுச் சொல்லவே இயலாதென்று அறிஞர் கூறுகின்றனர். போர்க்களத்திற்குச் சென்று போர் புரிந்தோர் தொகை மட்டும் $6\frac{1}{2}$ கோடி. இறந்த போர்வீரர்களின் தொகை 1 கோடி. காயம் பட்டோர் உறுப்புக் குறைந்தோர், சிறைப் பட்டோர் முதலானோர் 3 கோடி. ஆகாய விமானங்களால் அழிக்கப்பட்ட பொதுமக்கள் $1\frac{1}{2}$ கோடி. வீடு வாசல் இழந்தோர் ஆதரவற்றோர் $2\frac{1}{2}$ கோடி. போருக்குப் பின் எழுந்த கருப்பினாலும் கொள்ளை நோயாலும் மடிந்தோர் பலப் பல கோடி. அந்தோ! இத்தனை கோடி மக்களையும் எமனுக்கு இரையாக்கிய இக்கொடிய போரை நினைக்கும்பொழுதே உடல் நடுங்குகின்றதன்றோ? பண்டைக்காலப் போர்களிலும் நம் நாட்டில் இத்தகைய கேடுகள் விளைந்தமை பின்வரும் செய்யுளினால் அறியப்படுகின்றது.

"தோளுந் தலையுந் துணிந்து வேறாகிய
சிலைத்தோள் மறவர் உடற்பொறை யடுக்கத்து
எறிபிணம் இடறிய குறையுடற் கவந்தம்
பறைக்கட் பேய்மகள் பாணிக் காடப்
பிணஞ்சுமந் தொழுகிய நிணம்படு குருதியிற்
கணங்கொள் பேய்மகள் கதுப்பிகுத் தாட"

—சிலப். 205-10.

இப்போர் நிகழ்ந்த காலத்தில் ஐரோப்பிய நாடுகளிலுள்ள எல்லா வீடுகளிலும் அழுகையும் கண்ணீருமே குடிகொண்டிருந்தன! உணவுப் பொருள்கள் வேண்டிய அளவு கிடைக்காமையால் அவை ஒவ்வொருவருக்கும் அளவிட்டே வழங்கப்பட்டன. போலந்து நாட்டின் ஏழை மக்கள் இலை தழை முதலிய உணவுகளையே உண்ண நேரிட்டதாம். செர்மனியில் நூற்றுக்கு அறுபது விழுக்காடு ஆடு மாடுகள் உணவில்லாமல் இறந்தன. தமக்குப் பிறந்த குழந்தைகளை மூடுவதற்குக்கூடத் துணியில்லாமல் அவற்றின் பெற்றோர் அவற்றைக் காகிதங்களிற் சுற்றிவைத்தனராம்! இறந்தவர்களைத் தனித்தனிக் குழிகளில் புதைக்க முடியாமற் பல பிணங்களை ஒரே குழியில் இட்டுப் புதைத்தனராம்!

இது நிற்க; இம்முதல் உலகப்போரினால் விளைந்த பொருள் அழிவை அளவிட்டுச் சொல்ல எவரே வல்லவர்? எல்லா நாடுகளிலும் பெரும்பாலான மக்கள் போர்க் கருவிகள் செய்யும் பணிகளில் ஈடுபட்டிருந்தனராதலால், வாழ்க்கைக்கு வேண்டும் பொருளீட்டம் மிகவும் குறைவுபட்டது. போருக்குப் பின் தோன்றிய கருப்புக்கும் அதன் பயனாக எழுந்த கொள்ளை நோய்களுக்கும் முதன்மையான காரணம் இதுவே. மேலும், பெல்சியத்திலும், பிரான்சிலும், போலந்திலும், ருசியாவிலும் பயிரிடும் நிலங்களிற் பெரும்பகுதி போர்க்களமாக விளங்கியதனால், விளைபொருட் பெருக்கமுங் குறைந்தது. எல்லா நாடுகளிலும் மிகப் பல இருப்புப் பாதைகள், பாலங்கள், கட்டிடங்கள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள் முதலான நிலையான நிலையங்கள் வெடிகுண்டுகளால்

அழிக்கப்பட்டன. போருக்காக நேர்முறையிற் செலவான தொகை 800 நூறுயிரங் கோடி ரூபாய் என்றும், மற்ற வகையிற் செலவான தொகை 100 நூறுயிரங்கோடி ரூபாய் என்றும் ஓர் அமெரிக்க வல்லுநர் கணக்கிட்டிருக்கின்றுர்! 'போரினுல் நாகரிகம் பெருகுகின்றது' என்று ஐரோப்பிய அறிஞர்கள் சிலர் பிதற்றும்போது அதைத் 'தாலி பெருகிற்று' என நம் இலக்கண நூலோர் கூறும் பொருளிற்றுன் நாம் பொருள் கொள்ளவேண்டும் போலும்!

அந்தோ! என்ன கொடுமை! இப்போரில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகளோ மேல் நாடுகள்? கிறித்தவ நாடுகள்? இந்நாடுகளோ கீழ் நாடுகளுக்கு நாகரிகத்தை ஊட்டும் தாய் நாடுகள்? இது கிடக்க.

முதல் உலகப் போரின் நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் கூறுவோம். போர் தொடங்கியவுடன் செர்மானியர் தாம் முன் வகுத்திருந்த திட்டத்தின்படியே பாரிசைக் கைப்பற்றுவதற்காகப் பெல்சியத்துக்குள் நுழைந்தனர். பெல்சியம் வழி விட்டிருந்தால் பதினுன்கு நாளைக்குள் பாரிசு பிடிபட்டுப் பிரான்சும் இங்கிலாந்தும் தோற்று, செர்மனி இணையற்ற வெற்றி பெற்றிருக்கும! ஆனுல் இச்சிறு நாடு செர்மனியை எதிர்க்கவே போரின் முடிவு முற்றிலும் மாறுக முடிந்தது.

செர்மானியப் படைகள் ஆயிரம் பதினுயிரமாகப் பெல்சியத்துக்குள் நுழையவே, பெல்சியர் முதலிற் பின்காட்டி ஓடினர். ஆனுல் லீசு[1] என்னுமிடத்தில்

---

1 Liege.

அவர்கள் செர்மானியரை எதிர்த்துக் கடும்போர் புரிந்தனர்! இப்போரில் செர்மானியர் தம் படையிலுள்ள 40,000 வீரர்களை இழந்தனர்! பேர் இழப்பு; ஆயினும் வெற்றி! போர் தொடங்கிய 22-ம் நாளில்; அவர்கள் **நாமூர்**[1] நகரை யடைந்து அதன் பலத்த அரண்களை யெல்லாம் உடைத்தெறிந்து, பெல்சியத்தை வென்று பிரான்சுக்குட் புகுந்தனர்!

செர்மானியரை எதிர்க்க முடியாமல் பிரஞ்சுப் படைகளும் அவற்றிற்குத் துணையாக வந்த ஆங்கிலப் படைகளும் புறங்காட்டி ஓடின. பிரஞ்சு அரசியலார் பாரிசைக் காலி செய்து **போர்டோ**[2] நகருக்குப் புறப்பட்டுப் போயினர். பாரிசு செர்மானியர் கையில் வீழும் நிலைமையி லிருந்தது. ஆனால் விழவில்லை! பிரான்சும் இங்கிலாந்தும் தப்பிப் பிழைத்தன.

இதற்குக் காரணம் கிழக்குப் போர் முனையில் செர்மானியருக்கும் ருசியருக்கும் நடந்த போராகும். ருசியர் நாலு கோடி படையை யுடையவர். அவர்கள் படையெடுத்தால் மலை பெயர்ந்து உருண்டு வருவதைப்போன் றிருக்குமாம். எனவே, அவர்கள் கிழக்குப் பிரசியாவுக்குள் நுழைந்தவுடன் செர்மனியில் அச்சமும் நடுக்கமும் ஏற்பட்டன. ஆதலால் செர்மானியர் தமது மேற்குப் போர்முனையிலுள்ள படைகளில் ஒரு பகுதியைக் கிழக்குப் போர்முனைக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. இதுவே பாரிசு தப்பியதற்குக் காரணம். இதனால், ஆங்கிலப் படைகள் **மார்ன்**[3] ஆற்றங்கரையில் செர்மானியரை எதிர்த்துப் போர்புரிந்து வெற்றிபெறவும் முடிந்தது. இங்ஙனமாக ருசியர்கள் கிழக்கே (செப்டம்பர் 4—9) போர்

1 Namur. 2 Bordeaux. 3 Marne.

தொடங்கியிராவிட்டால், செர்மானியர் மேற்கே பாரிசைக் கைப்பற்றிப் பிரஞ்சுக்காரர் மேலும் ஆங்கிலேயர் மேலும் பெரும் வெற்றி பெற்றிருப்பர். கிழக்கிலும் மேற்கிலும் ஒரே சமயத்திற் போரிட நேரிட்டதால் செர்மானியர் இறுதியில் தோல்வியுற்றனர். இருபுறத்திலும் போர் எழ இடங்கொடுக்கக் கூடாதென்பது பிசுமார்க்கின் முதன்மையான கருத்து. இக்கருத்தை யொட்டியே இட்லரும் இவ்விரண்டாம் உலகப் போரில் ருசியாவுடன் ஒப்பந்தஞ் செய்து கொண்டிருக்கிறார். இது நிற்க;

மேற்குப் போர்முனையில் நின்ற செர்மானியப் படைகள் பிரசியாவுக்குள் வந்தவுடன் ருசியர் பின் வாங்கினர். தானன்பர்க்[1] என்னுமிடத்தில் (ஆகஸ்டு 25—31) ருசியப் படையிற் பெரும்பகுதி முழுதும் அழிக்கப்பட்டது. இப்பெரும் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர்கள் இன்டன்பர்க்[2] லூடன்டார்ப்[3] என்னும் இரு செர்மானிய வீரர்கள். இவ்வெற்றிக்குப் பின், இவர்கள் பெயர்களைக் கேட்ட அளவிலேயே பகைவர் படைகளெல்லாம் அஞ்சி நடுங்கினவாம்!

1914-ஆகஸ்டு முதல் 1916 டிசம்பர்வரை செர்மானியர் வெற்றிமேல் வெற்றி அடைந்துவந்தனர். அவர்கள், ஆங்கிலேயருக்குத் துணையாக மே, 24-ல் போரில் இறங்கிய இத்தாலியரைக் கேப்பரோட்டோ[4] என்னுமிடத்தில் முறியடித்தனர். நவம்பரில் துருக்கி செர்மனி பக்கம் சேர்ந்தது; துருக்கியை எதிர்த்து ஆங்கிலேயர் போர்புரிய, அவர்களைச் செர்மானியர் காலிப்போலி[5] என்னுமிடத்தில் புறங்காட்டி ஓடச்செய்

1 Tannenberg. 2 Hindenberg. 3 Ludendorff. 4 Caperetto. 5 Gallipoli.

மேற்குப் போர்க்களம்


ஆங்கிலக் கால்வாய்
கலே
பொலோன்
எய்ப்ரசு
பாசன்டேல்
வாட்டர்லூ
லீசு
மான்சு
நாமூர்
லக்சம் பர்க்
ஆமியன்சு
சாம் ஆறு
வெர்டன்
பாரிசு
ரைன் ஆறு
ரூர் ஆறு
பெல்ஜியம்
பிரான்சு
ஜெர்மனி

தனர். டிசம்பரில் ருமேனியா[1] செர்மனிக்குப் பகை யாகப் போர் தொடங்கியது; ஆனால் ஒரே அடியில் நொறுக்கப்பட்டது. ருமேனியாவின் விளைபொருள் களும் பெட்ரோல் எண்ணெயும் செர்மனிக்கு மிகவும் பயன்பட்டன. 1915-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் செர்மானியர் போலந்துக்குள்ளும் ருசியாவுக்குள்ளும் முன்னேறிச் சென்றனர்.

ஆனால், மேற்குப் போர் முனையில், ஆங்கிலப் படைகளும் பிரஞ்சுப் படைகளும் செர்மானியரை முன்னேறவொட்டாது தடுத்து வந்தன. எனினும் வெற்றிபெற முடியவில்லை. எனவே, இரு திறத் தாரும் பெருங் குழிகளை[2] வெட்டிக்கொண்டு, அவற் றுட் பதுங்கியிருந்து, ஓரோ வமையத்தில் மட்டும் வெளிப்போந்து போர்புரிந்து வந்தனர். 1916-சூலைக் குள் ஆங்கிலப் படைகளின் தொகை பெருகிற்று. செர்மானியப் படைகளின் தொகை சுருங்கிற்று. மேலும், ஆங்கிலேயர், குழிகளையும் மற்றுந் தடுப்புக் களையும் தாண்டிச் செல்லத் தக்க 'டாங்கி[3]' என்னும் ஒரு புதிய போர்க் கருவியைக் கண்டறிந்து அதைப் பயன்படுத்தினர். இதனால் சோம்[4] ஆற்றங்கரைப் பகுதியிலும், வெர்டன்[5] என்னுமிடத்திலும் செர்மானி யர் பெருந் தோல்வி யடைந்தனர்.

இதற்கிடையில் ஆங்கிலேயர் தம் கப்பற்படை யின் வலிமையினால் செர்மனிக்கு உணவுப் பொருள் கள் போகவொட்டாது தடுத்து வந்தனர். இக்கடல் முற்றுகை[6] யினால் செர்மானியர் மிகவும் இடர்ப்பட் டனர். எனவே, இதை ஒழிப்பதற்காகச் செர்மானியர்

1 Rumania. 2 Trenches. 3 Tanks. 4 Somme.
5 Verdun. 6 Naval blockade.

தம் நீர் மூழ்கிக் கப்பல்களின் உதவியினால் இங்கிலாந்துக்குச் செல்லும் கப்பல்களை ஆழ்த்தத் தொடங்கினர். இதில் சில அமெரிக்கக் கப்பல்களும் நாசமாயின. எனவே, 1917-ஏப்பிரல் 2-ல் அமெரிக்கா செர்மனியுடன் போர் தொடுத்தது.

அமெரிக்காவின் உதவி வருமுன் ஆங்கிலேயரைத் தோற்கடிப்பதற்காகச் செர்மானியர் மேற்குப் போர் முனையில் ஒரு பெரு முயற்சி செய்தனர். அவர்கள் அயின்[1] ஆற்றங்கரையில் புரிந்த போரில் (அக்டோபர் 1917) பல்லாயிரக் கணக்கான பிரஞ்சுப் படைகளை நாசஞ் செய்தனர். இதனால் பிரஞ்சுப் படைகள் போர் புரிய மறுத்துக் கலகஞ் செய்தன ! வெர்டன் போரில் வெற்றிபெற்ற **மார்சல் பெடேயின்**[2] என்பவரும் **கிளமென்சோ**[3] என்பவரும் வந்துதான் கலகத்தை அடக்க வேண்டியதாயிற்று! மேலும் ஆங்கிலேயப் படைகளில் 300,000 வீரர்கள் **பாசண்டேல்**[4] என்னுமிடத்தில் நடந்த ஓரே ஒரு போரில் உயிரிழந்தனர்.

எனினும் 1918-சூலை 18 முதல் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் செர்மானியரை எதிர்த்து முன்னேறத் தொடங்கினர். செர்மானியப் படைகள் உணவில்லாமல் திணறின. செப்டம்பரில் 600,000 அமெரிக்கப் படைகள்வந்திறங்கின. ஆங்கில-பிரஞ்சு-அமெரிக்கப் படைகள் மூன்றுக்கும் **போக்**[5] என்னும் ஓரே ஒரு தளபதி ஏற்படுத்தப்பட்டார். அவருக்கு உதவியாக இருந்த தளபதி **வேகாண்டு**[6] என்பவர். சூலை 18-ல் நேசப்படைகள் **ஆமியன்சு**[7] என்னுமிடத்தில் செர்மானியரைத் தாக்கி, அவர்களில் 30,000

1 Aisne. 2 Petain. 3 Clemenceau. 4 Passchendaele. 5. Foch 6 Weygand. 7 Amiens.

1918-ல் ஐரோப்பா



நார்வே
சுவீடன்
பின்லாந்து
டென்மார்க்
ருசியா
லேட்டிவியா
இங்கிலாந்து
சொ்மனி
போலந்து
பிரான்சு
செக்கோசிலோவேகியா
அங்கேரி
ருமேனியா
யூகோசிலோவியா
பல்கேரியா
பெயின்
போர்த்துகல்
கார்சிகா
சார்டினியா
இதலி
துருக்கி
அல்சீரியா
மொரொக்கோ
மால்டா
கிரீட்

பேரைச் சிறை பிடித்தன. "இந் நாளே சேர்மனியப் படைக்குக் கரிநாள்"[1] என லூடன்டார்ப் கூறினர். செப்டம்பர் 29-ல் ஆங்கிலேயர் சீச்பிரீட்[2] என்னும் சேர்மானியரின் போர் அரணைத் தாக்கினர். மறுநாளே சேர்மானியர் போரை நிறுத்திப் பணிந்துவிடுவதென முடிவு செய்தனர்!

1918, நவம்பர் 11-ல், 11 மணிக்குப் போர் நிறுத்தல்[3] அறிவிக்கப்பட்டது! நேச நாடுகளெல்லாம் அளவிலா மகிழ்ச்சி அடைந்தன.

போர் ஒழிந்த புதிய உலகம் தோன்றுமென எல்லோரும் எதிர் நோக்கினர். ஆனால், அந்தோ, இப்போரில் வெற்றிபெற்ற நாடுகளின் தலைவர்கள் வெர்சேல்சு நகரிற் கூடிப் "பழைய கறுப்பன் கறுப்பனே" என்றபடி போருக்கு முன்னிருந்த பழைய நிலைமையையே மீண்டும் அமைத்தனர். இக்காரணத்தினுற்றான் 'போரை ஒழிக்கப் புரிந்த போர்' போரை மீண்டுந் தூண்டிய போராக முடிந்தது. உலகம் எதிர்பார்த்த அமைதி மான் கண்ட கானலைப்போல மறைந்தது. இது நிற்க, வெர்சேல்சு உடன்படிக்கையின் முதன்மையான பிரிவுகள் பின் வருவன :—

சேர்மன் அரசுக்கு உரிமையான அல்சாசு—லொரேய்ன் மாகாணம் பிரான்சுக்கும், வட செல்சுவிக் மாகாணம் டென்மார்க்குக்கும், மேற்குப் பிரசியா மாகாணம் போலந்துக்கும் அளிக்கப்பட்டன. மேலும் டான்கிக்[4] என்ற முதன்மையான துறைமுகப் பட்டினமும் அதைச் சார்ந்த நிலப்பகுதியும் தனி யரசாக ஏற்படுத்தப்பட்டன. இதனுல் சேர்மன் அரசின்

---

1 The blackday of the German army. 2 Siegfried.
3 Armistice. 4 Danzig.

சிறப்பான பகுதியாகிய கிழக்குப் பிரசியா[1] தனது தாய் நாட்டினின்றும் பிரிக்கப்பட்டுத் துண்டிக்கப்பட்டது. நிலக்கரிச் சுரங்கங்கள் மிகுந்த சார் பள்ளத்தாக்கு[2] பதினைந்து ஆண்டுகளுக்குப் பிரஞ்சுக்காரர் ஆளுகையில் விடப்பட்டது. இறுதியாகச் செர்மனியின் ஆட்சி நாடுகளெல்லாம்[3] பறிக்கப்பட்டு, இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும், கனடாவுக்கும், தென் ஆப்பிரிக்காவுக்கும், ஆத்திரேலியாவுக்கும், நியூசிலாந்துக்கும் சப்பானுக்கும் கையளிக்கப்பட்டன. உலக முழுவதையும் வென்று ஆட்சி செய்வதற்கென்று செர்மானியர் தொடங்கிய போர் அவர்கள் வயத்திலிருந்த நாடுகளையும் அவர்கள் இழப்பதாக முடிந்தது!

செர்மானியர் தம் அரசின் பல பகுதிகளை இழந்ததுமன்றித் தம் போர்க் கருவிகளையும் கப்பற்படையையும் இழந்தனர். போர் நிறுத்திய பொழுதே அதற்கு முதல் தண்டனையாக அவர் தம் கப்பற் படையை ஆங்கிலேயர்பால் அளித்துவிட்டனர். அதன் பின், வெர்சேல்சு உடன்படிக்கைப்படி அவர்கள் போர்க் கப்பல்களைக் கட்டக்கூடாதென்றும், 100,000 ஆட்களுக்கு மேற்பட்ட படையை வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் நீர் மூழ்கிக் கப்பல்களையும், வானவூர்திகளையும் அமைக்கக்கூடாதென்றும் கட்டளையிடப்பட்டது.

மேலும், போர் நிகழ்ந்த நாடுகளில் ஏற்பட்ட அழிவுக்காகவும், நேசநாடுகளின் போர்ச் செலவில் ஒரு பகுதிக்காகவும் செர்மானியர் 6,600 கோடி பவுனை[4] ஆண்டுக்கு 100 கோடி பவுனாக அறுபத்

---

1 East Prussia. 2 Saar Valley. 3 Colonies.
4 Pound Sterling.

தாறு ஆண்டுகளிற் கொடுத்துத் தீர்க்கவேண்டுமென்றும் தீர்ப்பிடப்பட்டது.

இறுதியாக, 1914-ம் ஆண்டுப் போரைத் தொடங்கிய குற்றமும் பழியும் செர்மானியைச் சார்ந்ததே என்பதையும் செர்மானியர் ஒப்புக்கொள்ள வேண்டும் எனவும் வெர்சேல்சு உடன்படிக்கையிற் குறிக்கப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் திட்டங்கள் மிகக் கடுமையானவைகளே. ஆயினும், இவற்றினும் கடுமையான திட்டங்களைச் செர்மனி, தான் ருசியாவோடு செய்திருந்த உடன்படிக்கையிற்[3] குறிப்பிட்டிருந்தது. நான்காண்டுகளாக உலக முழுவதிலும் பெருங்கேடுகளை விளைவித்த பெரிய போருக்கு முதற் காரணமாக விளங்கிய செர்மானியர்மேல் வெர்சேல்சு உடன்படிக்கைகளைக் காட்டிலும் பதின்மடங்கோ நூறுமடங்கோ மிகுதியான கொடிய உடன்படிக்கைகளையும் சுமத்தியிருக்கலாம். அது முறையானதன்றென்று ஒருவருங் கூறார். ஆனால், கெய்சரின் ஆட்சியை விலக்கிவிட்டுப் புதிய குடியாட்சியைத் தொடங்கி, வருங் காலத்தில் மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் இசைந்து வாழவேண்டிய ஒரு பெரிய நாட்டுக்கு இத்துணைப் பெரியபாரத்தை ஏற்றிவைத்தது, பெருந்தவறாக முடிந்தது. இது நிற்க.

1929-ம் ஆண்டுக்குப்பின் தோன்றிய உலகப் பொருளாதாரக் குழப்பத்தால்[4] எல்லா நாடுகளும், சிறப்பாகச் செர்மனியும், பெருந்துயருக்குள் ஆழ்ந்

---

1 By the Reparation Commission of 1921. 2 Wan-guilt Clause. 3 Treaty of Brest Litovsk, 1917. 4 World Economic Depression.

தன. இங்கிலேயிலேதான் இட்லர் தோன்றி, 'வெர்சேல்சு உடன்படிக்கையைக் கிழித்தெறிவேன்; இழந்த நாடுகளைத் திருப்பிப் பெறுவேன்; வறுமையை ஒழிப்பேன்; செர்மனி மக்களே! எழுமின், எழுமின்!' எனக் கூறி நாட்டுணர்ச்சியை ஊட்டி மக்களின் மதியை மயக்கி, இவ்வுலகை மீண்டும் போரில் ஆழ்த்தியிருக்கின்முர் நிற்க;

செர்மனியின் துணைநாடான ஆத்திரியாவும் செர்மனியைப் போலவே பேரிழப்புக்கு உட்படுத்தப்பட்டது. போர் நிறுத்திய பொழுதே அதன் கப்பற்படை பிடுங்கப்பட்டது. அதன் மேற்கெல்லையிலுள்ள திரியேட்டி[1], இட்டிரியா[2], திரியன்டினே[3], தைரால்[4] என்னும் கடற்கரை நிலப்பகுதிகள் இத்தலிக்குக் கொடுக்கப்பட்டன. கிழக்கெல்லையிலுள்ள அங்கேரி தனியாட்சி நாடாக்கப்பட்டது. மேலும், வடகிழக்குப் பகுதியிலுள்ள பொகிமியா, மொரேவியா[5] முதலான பழைய ஆத்திரிய மாகாணங்கள் செக்கோசிலோவேக்கியா என்னும் பெயருடைய புதிய தனியாட்சி நாடாக நிறுவப்பட்டன. நாற்புறமும் சிதைக்கப்பட்டபின் ஆத்திரியா, அதன் தலைநகரானவீயன்ஞு[6] என்னும் ஒரேவொரு நகர் மட்டும் அடங்கிய மிக மிகச் சிறிய நாடாக மாற்றப்பட்டது! அது செர்மனியுடன் இணைக்கப்படக் கூடாதென்றும் வெர்சேல்சு உடன்படிக்கையிற் குறிப்பிடப்பட்டது!

செர்மனியின் அடுத்ததுணைநாடான பல்கேரியா[7], ஈசியன்[8] கடலையொட்டிய தென்பாகத்தைக் கிரீசுக்கும், மேல்பாகத்தின் ஒரு பகுதியை யூகோசிலோவியா[9]

1 Trieste. 2 Istria. 3 Trientino. 5 Tyrol. 5 Moravia. 6 Vienna. 7 Bulgaria. 8 Aegean. 9 Yugo-slavia.

வுக்கும், வடபாகத்தின் ஒரு பகுதியை ருமேனியா[1] வுக்கும் விடுத்துத்தானும் ஒரு சிறு நாடாகமாறியது.

செர்மனிக்குப் பகையாக நேச நாடுகளுடன் சேர்ந்து போர்புரிந்த ருமேனியாவுக்கோ, (மேற்காட்டியபடி பல்கேரியாவிலிருந்து ஒரு பகுதியும், ருசியாவிலிருந்து ஒரு பகுதியும் (பெசரேபியா[2], புக்கோவினு[3] என்னும் மாகாணங்கள்) அங்கேரியிலிருந்து ஒரு பகுதியும் (திரான்சில்வேனியா[4] மாகாணம்) கொடுக்கப்பட்டன. இப்புதிய ருமேனியா பழைய ருமேனியாவை விட இருமடங்குக்குமேற் பெருகி விளங்கியது.

ஆத்திரியாவுக்குப் பகையாக, முதன் முதலாகப் போரில் இறங்கிய மிகச் சிறிய செர்பியாவுக்கும் பங்கு கிடைத்தது! பழைய ஆத்திரியா=அங்கேரி அரசின் தென்பாகத்திலுள்ள பாசினியா, எர்சகோவீனு[5] முதலான ஐந்து மாகாணங்களும்மாண்டிநிகிரோ[6] நாடும், பல்கேரியாவின் மேற்கெல்லை மாகாணமும் செர்பியாவுக்குக் கொடுக்கப்பட்டன. இவ்வாற்றல் அது முன்னைவிட மூன்று மடங்கு பெரிய நாடாயிற்று! அதன் பெயரும் யூகோசிலோவியா என்று மாற்றியமைக்கப்பட்டது!

செர்மனியின் துணைநாடான துருக்கியும் தன் அரசில் ஒரு பெரும்பகுதியை இழந்தது. பலத்தீனுவும், இராக்[7] எனப்படும் மெசொப்பெத்தேமியா நாடும் ஆங்கிலேயருக்கும், சீரியா, பிரஞ்சுக்காரருக்கும் ஒப்படைப்பு நாடுகளாக[8] விடப்பட்டன. அரேபியா தனியாட்சி நாடாக அமைக்கப்பட்டது. சின்ன ஆசியாவிலுள்ள ஒருபகுதி கிரீசுக்குக் கையளிக்கப்

---

1 Rumania. 2 Bessarabia. 3 Bukovina. 4 Transylvania. 5 Herzegovina. 6 Montenegro. 7 Iraq. 8 Mandates.

பட்டது. இங்ஙனமாகத் துருக்கியும் ஒரு சிறு நாடாகக் குறைக்கப்பட்டது.

1917-ம் ஆண்டிலேயே ருசியா போரினின்றும் விலகி, செர்மனியுடன் தனி உடன்படிக்கை செய்திருந்தது. இவ்வுடன்படிக்கைப்படி, எத்தோனியா[1] லேட்டிவியா,[2] லித்துனியா[3] என்னும் ருசிய மாகாணங்கள் செர்மனியின் ஆட்சி நாடுகளாக்கப்பட் டிருந்தன. ஆனால் வெர்சேல்சு உடன்படிக்கைப்படி இந் நாடுகள் தனியாட்சி நாடுகளாக்கப்பட்டன. 1917-ல் பின்லாந்து[4] ருசியாவை விட்டுப் பிரிந்து, தன்னைத் தனியாட்சி நாடாக்கி யிருந்தது. வெர்சேல்சு உடன்படிக்கையில் இத்தனியாட்சி ஒப்புக்கொள்ளப் பட்டது.

செர்மனிக்குத் துணையாகப் போர் புரிந்த இந் நாடுகளின் நிலப் பகுதிகளைப் பிடுங்கி நேச நாடுகளுக்குக் கையளித்ததைக் குற்றமெனை நாம் கொள்ளக் கூடாது. தோற்றவர் நாடுகளை வென்றவர் எடுத்துக் கொள்வது அரசியல் மரபே.

ஆனால், வெர்சேல்சு உடன்படிக்கையை வரைந்தவர்கள், செர்மனிக்கும் அதன் துணை நாடுகளுக்கும் உரிய நிலப் பகுதிகளைத் தமக்குள் பங்கிடும் எண்ணத்துடன் அங்ஙனம் செய்யாது, 'ஒவ்வொரு நிலப் பகுதியிலுமுள்ள தனித்தனி மக்கட் கூட்டத்திற்கும் தனித் தனி அரசைஅளிக்கவேண்டும்'[5] என்றபுதியஅரசியற் கோட்பாட்டின்படியே அங்ஙனம் செய்தனர். போலர்[6] என்னும் தனித்த மக்கட் கூட்டத்திற்காகத்தான் போலந்து தனியாட்சி நாடாக்கப்பட்டது. இங்ங

---

1 Estonia. 2 Lativia. 3 Lithunia. 4 Finland.
5 Independence of nation-states. 6 Poles.

ணமே, எஸ்தோனியர், லேட்டிவியர், பின்லாந்தியர், ருமேனியர், அங்கேரியர் முதலானோருக்கும் தனித் தனி அரசுகள் நிறுவப்பட்டன. இப்புதிய ஐரோப் பிய அரசியற் கோட்பாடு இப்போரை நிறுத்துவதற் குப் பெரிதும் முயற்சி செய்த அமெரிக்கக் குடியரசுத் தலைவரான **விட்ரோ வில்சன்**[1] என்பவருடைய பதி னான்கு குறிப்புக்களைத்[2] தழுவியே அமைக்கப்பட்ட டன. இக்குறிப்புகளைச் செர்மனியும் அதன் துணை நாடுகளும், இங்கிலாந்தும் அதன் துணை நாடுகளும் ஒப்புக்கொண்டிருந்தன. ஆதலால் இத்திட்டங்கள் நேச நாடுகளின் தன்னலத்திற்காகவே அமைக்கப் பட்டனவென நாம் கூறுவதற் கிடமில்லை.

ஆயினும், இப்புதிய அமைப்புக்களெல்லாம் இப் பொழுது பிழைபட்டு அழிந்துவிட்டன. வெர்சேல்சு உடன் படிக்கையே இவ்விரண்டாம் உலகப் போருக் குக் காரணமாக அமைந்துவிட்டது எனப் பலரும் எண்ணுவதற்கும் இடங்கொடுத்துவிட்டது. இதற் குக் காரணம் என்ன ?

நாம் முதற்கூறியபடி, செர்மனியின்மேல் இறுத்த வெர்சேல்சு உடனபடிக்கை தன்னியல்பில் மிகக் கடு மையானதென்று கொள்வது தவறு: அதன் கடுமை யெல்லாம் 1929-ஆம் ஆண்டில் தொடங்கிய உலகப் பொருளாதாரக் குழப்பத்தின் வழிப் பிறந்ததே. அங் ஙனமே, செர்மனியினுடைய துணை நாடுகளின் நிலப் பகுதிகளில் தனித்தனி அரசை நிறுவியதும்தவறன்று. அது தற்கால அரசியற் கோட்பாட்டுக்கு முழுதும் இசைந்தது. ஆனால் இவ்வமைப்புக்களி லடங்கிய ஒரு பெருங் குறை, இப்புதிய அரசுகள் குடியாட்சி

---

1 Woodrow Wilson. 2 Fourteen Points.

முறையிற்[1] பயிற்சியற்றிருந்ததும் தம் தனியாட்சியைப் பாதுகாத்துக்கொள்ளத் தக்க அளவிற்குப்போர் வலிமை யுற்றிருந்ததுமேயாம். ஆதலாற்றான் இவற்றிற் பல இப்பொழுது செர்மனி, ருசியா, இத்தலி முதலான வல்லரசுகளால் எளிதில் விழுங்கப்பட்டு அழிந்து கிடக்கின்றன.

வெர்சேல்சு உடன்படிக்கையை வரைந்தவர்களுக்கு அரசியல் ஞானம் இவ்வளவு குறைவாக இருந்ததோ என்று நாம் வினவலாம். வரும் பொருள் உரைத்தலன்றோ அமைச்சின் பெருமை? அப்படியாயின், வெர்சேல்சு உடன்படிக்கையை உருவாக்கிய **வில்சன், லாயிட் சார்பி,[2] கிளமென்சோ[3]** என்னும் முப்பெரும் அரசியல் வல்லுநரும்[4] பெரும் பிழை செய்தவர் ஆவரோ?

ஆவர் என விடையளிப்பர் பலர். ஆனால், வரலாற்றை ஆழ்ந்து கற்போர் அங்ஙனங் கூறார். வெர்சேல்சு உடன்படிக்கையைச் செர்மனியும் அதன் துணை நாடுகளும் ஒப்புக்கொண்டதன் பின்னும் அதற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னும் இதிற் குறைகள் உண்டெனக் கூறியவர் மிகமிகச் சிலரேயாவர். எல்லா நாடுகளிலுள்ள எல்லா மக்களும் பெரும்பாலும் இவ்வுடன்படிக்கையைக் கொண்டாடினர். இனிப்போர் எழாதென்றும் எண்ணினர். நான்காண்டுகளாக எல்லா நாடுகளிலும் எண்ணிறந்த தீமைகளை விளைவித்த இக்கொடிய போரைச் சிறிது நினைவோரும், இனிப்போரே எழாமலிருக்கவேண்டும்

1 Democratic form of Government. 2 Lloyd George. 3 Clemenceau. 4 The Big Three.

என்னுங் கருத்தால் அங்ஙனம் எண்ணுவது இயல் பேயாம்.

இவ்வெண்ணத்திற்கு முதன்மையான காரணம் வில்சனுடைய பதினான்காவது குறிப்புப்படி அமைக் கப்பட்ட 'சர்வதேச சங்கம்' ஆகும். இச்சங்கத்தின் சிறப்பான சேவை போரை ஒழிப்பதும் அமைதியை நிலைநிறுத்துவதுமாக வரையப்பட்டிருந்தது. ஆதலால் இனிப் போர் எழாதென்று எல்லா நாடுகளும் எண் ணுதற்கு இடமாயிற்று.

ஆனால், இச்சங்கத்தின் வாயிலாக எதிர்பார்க்கப் பட்ட சேவை பல காரணங்களால் நடைபெறாததனா லும், 1929-ம் ஆண்டில் உலகப்பொருளாதாரக் குழப் பம் தோன்றினமையாலும் வெர்சேல்சு உடன்படிக் கையும் அதன் அடிப்படையான அமைப்பாகிய சர்வ தேச சங்கமும் பிழைபட்டழிந்தன.

வில்சன், லாயிட் சார்சு, கிளமென்சோ ஆகிய மூன்று அரசியல் வல்லுநரும் இருபதாண்டுகளுக் குப் பின் எழும் உலக நிகழ்ச்சிகளையெல்லாம் உன்னி அறிந்திருக்க வேண்டும் எனக்கூறுவது முறையன்று: அவர்கள் எதிர்பார்த்த அளவுக்குச் சர்வதேச சங்கம் தன் சேவையை ஆற்றியிருக்குமானால், வெர்சேல்சு உடன்படிக்கையின் குறைகள் குறைகளாக விளங்கி யிரா. உலக நிகழ்ச்சிகளெல்லாவற்றையும் மக்கள் தம் எதிர்கால உணர்ச்சியால் அறிந்துகொள்ளும் ஆற் றல் உடையரல்லர். ஆயினும் போர்கள் எழுவதைத் தடுப்பதற்கு அவர்கள் 1918-ல் சர்வதேச சங்கத்தை நிறுவிய முயற்சி மிக்க பெருமையுடைத்து என்பதில் ஐயமில்லை. இதுபற்றி மேலே ஆராய்வோம்.

8. சர்வதேச சங்கம்

1914-ம் ஆண்டுப்போர் மக்கள் வரலாற்றில் ஒரு புதிய ஊழியைப் பிறப்பித்துள்ளது என முன்னே கூறியுள்ளோம். ஏனெனில் இம்முதல் உலகப் போருக்குப் பின் வேறொரு போரும் எழவிடக்கூடாதென்பதே எல்லா மக்களும் எண்ணிய எண்ணம்.

என்னே பெருமை! பண்டை அரசியலின் அறம் ஒரு போரை முடித்து மறுபோரைத் தொடங்குவது; எளிய நாடுகளை வலிய நாடுகள் கவருவது; தோற்றவர் நாடுகளை வென்றவர் பங்கிடுவது; போரையே இயற்கை விதியெனக்கொண்டாடுவது! ஆனால் 1914-ல் நிகழ்ந்த போருக்குப் பின், மக்கள் அறிந்த புதிய அரசியல் அறம், போரையே முற்றிலும் ஒழிப்பது! எளிய நாடுகளை வலிய நாடுகள் தாங்குவது!* எல்லா நாடுகளும் ஒன்றோடொன்று ஒத்துழைப்பது! போரொழிந்த புதிய உலகை உருவாக்குவது! 1914-ம் ஆண்டுப் போருக்குப் பின், உலகில், ஒரு புதிய ஊழி தொடங்கியிருக்கின்றது எனக் கூறுவதில் என்னே மிகை?

மக்களிடையே இப்புதிய எண்ணத்தைப் பிறப்பித்தவர் அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவரான விட்ரோ வில்சன் என்பவர். இவர் பெருமையை நாம் அளவிட்டுக் கூறுவது முடியாது. போரில் வென்ற நாடுகள் வெற்றியை யன்று, அமைதியையே நம்

---

* எடுத்துக் காட்டாக, சிரியா, பலத்தீனு முதலான நாடுகள் ஒப்படைப்பு நாடுகள் (mandates) ஆக்கப்பட்டன.

குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்று இவர் பலகாலும் எடுத்துரைத்து வந்தார். அந்தோ, இவருடைய உயரிய நோக்கங்களையும் ஆழ்ந்த அறிவுரைகளையும் ஐரோப்பிய நாடுகள் கைக்கொண் டிருந்தால் இப்பொழுது நடக்கும் இவ்விரண்டாம் உலகப்போர் எழுந்திராது. பஞ்சு[1] என்னும் பெயரிய ஆங்கில விகடப் பத்திரிகை எடுத்துக் காட்டிய ஓர் உண்மை இங்கு உற்று நோக்கத் தக்கது. "வில்சன் விரும்பியது அமைதி; வெற்றி யன்று;[2] ஆனல் நேச நாடுகள் தேடி யடைந்தது அமைதி யன்று; வெற்றியே."[3] வெர்சேல்சு உடன்படிக்கையும் சர்வதேச சங்கமும் அழிந்திறந்தமைக்கு வேறு விளக்கம் வேண்டுமோ? இது நிற்க.

போரை நிறுத்துவதற்கு முதல் திட்டமாக வில்சன் பதினன்கு குறிப்புக்களை விடுத்திருந்தார். இக் குறிப்புக்களில் முதல் நான்கு குறிப்புக்களும் இறுதிக் குறிப்பும் சிறப்பானவை. இடைப்பட்ட ஒன்பதும் தோற்ற நாடுகளின் நிலப் பகுதிகளைப் பற்றியவை. லாயிட் சார்ச்சு கிளமென்சோவும் இடைப்பட்ட ஒன்பது குறிப்புக்களையும் வெர்சேல்சு உடன்படிக்கையில் மிகத் திறமையாக அமைத்தனர். சர்வதேச சங்க அமைப்பைப்பற்றிய இறுதிக் குறிப்பைச் சிறிது மனத் தாங்கலுடன் ஏற்றுக்கொண்டனர்.*

---

1 Punch. 2 Peace without victory. 3 Victory without Peace.

* சர்வதேச சங்கத்தைப்பற்றிக் கிளமென்சோ கூறியதாவது :—' இதை விரும்புகிறேன் ; ஆனல் இதில் எனக்கு நம்பிக்கை யில்லை. (I like it but I don't believe in it.) வெர்சேல்சு உடன்படிக்கையைப் பற்றிய லாயிட் சார்சு கூறியதைப் 'பஞ்சு'—"முட்டையிற் சில பகுதிகள் நன்று யிருக்கின்றன" (Parts of the egg are good) என்னும் ஆங்கிலப் பழமொழிக்கு ஒப்பிட்டுக் கூறலாம் என எடுத்துக் காட்டிற்று!

ஆனால் எல்லாக் குறிப்புக்களுக்கும் அடிப்படையான முதல் நான்கு குறிப்புக்களையும் ஒதுக்கினர். இவர்களுடைய செயல் நெய்யரியின் செயலைப் போன்று விளங்கிற்று. எனினும் மிகையாகாது. இவ்வுண்மையே வெர்சேல்சு உடன்படிக்கையின் குறைகளுக்கும் சர்வதேச சங்கம் அழிந்திறந்தமைக்கும் காரணம்.

இப்பதினான்கு குறிப்புக்களிலும் சிறந்த முதல் நான்கு குறிப்புக்கள் பின் வருமாறு:—(1) எந்த நாடும் மற்ற நாடுகளுடன் மறைவான உடன்படிக்கைகள்[1] செய்யக்கூடாது; எல்லா உடன்படிக்கைகளும் சர்வ தேச சங்கத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். (2) எல்லா நாடுகளாலுந் தடையுண்டானலல்லாமல், போர் நேரமாயினும் அமைதி நிலவுங் காலமாயினும், எந்நாட்டுக் கப்பலும் எக்கடலிலும் இடையூறின்றிப் போக்குவரவு செய்வதற்கு உரிமையிருக்கவேண்டும்,[2] (3) உலக வணிகத்துக்கு இடர்ப்பாடான வரி முதலிய தடைகளை ஒழிக்கவேண்டும். (4) போர்க்கருவிகளைக் குறைக்கவேண்டும்.

இந்நான்கு குறிப்புக்களில் வெர்சேல்சு உடன்படிக்கையை வரைந்த காலத்திலேயே, இங்கிலாந்து இரண்டாங் குறிப்பை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது! இதை ஏற்றுக்கொண்டால் மத்திய தரைக் கடலிலும் மற்றக் கடல்களிலுமுள்ள தன் கடல் ஆட்சியும் ஆங்கிலப் பொதுமை நாடுகளின் ஒற்றுமையும் அழிந்துவிடும் என்று லாயிட் சார்சு எடுத்துக் காட்டினர். வெர்சேல்சு உடன்படிக்கையே எல்லா

---

1 Secret Treaties. 2 Absolute freedom of navigation in peace and war (outside territorial waters) except when seas may be closed by international action.

நாடுகளும் ஒன்றுசேர்ந்து நேர்முகமாகச் செய்த உடன்படிக்கையன்று; ஆதலால் முதற் குறிப்பும் முதலிலேயே மாண்டது! இறுதி இரண்டு குறிப்புக்களின் வரலாறு நகுவதற்கு இடமாக முடிந்தது! ஏனெனில், வெர்சேல்சு உடன்படிக்கைக்குப் பின் எல்லா நாடுகளும் வணிகத் தடைகளையும் போர்க் கருவிகளையும் குறைப்பதற்கு மாறாக அவற்றை ஒன்று பத்தாகப் பெருக்கத் தொடங்கின.

பதினான்காவது குறிப்புப்படி அமைக்கப்பட்ட சர்வதேச சங்கமும் ஐந்து முதற் பதின்மூன்று குறிப்புக்களின்படி அமைக்கப்பட்ட அரசியல் திட்டங்களுமே வெர்சேல்சு உடன்படிக்கையில் அமைந்தன. இவ்வுடன்படிக்கைக்கும் சர்வதேச சங்கத்துக்கும் உயிர்நிலையைப் போன்ற முதல் நான்கு குறிப்புக்களுமோ நெருப்பிலிட்ட மெழுகைப்போல உருகி மறைந்தன. எனவே, சர்வதேச சங்கம் இயங்கிய காலமெல்லாம் அது வெற்றுடம்பு தாங்கியே நின்றது. இதுவே இச்சங்கம் அழிந்திறந்ததன் மறைபொருள். இனி, இச்சங்கத்தின் நோக்கத்தையும் அமைப்பையும் பணியையும் பற்றிய சில கருத்துக்களை எடுத்துக் கூறுவோம்.

சர்வதேச சங்கத்தின் நோக்கம், இவ்வமைப்பை ஒப்புக்கொண்ட நாடுகள் செய்த உடன்படிக்கையின்[1] முகவுரையிற் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:—“ இவ்வுடன்படிக்கையிற் கையெழுத்திட்டுள்ள நாடுகள் ஒன்றோடொன்று ஒத்துழைக்கவும், உலக அமைதியை நிறுவ முயலவும், போரை ஒழிக்கவும், சர்வதேசச் சட்டங்களையும் கைக்கொள்ளவும்,

1 Covenant.

ஒன்ருெடொன்று செய்யும் உடன்படிக்கைகளைக் காக்கவும் ஒப்புக்கொண்டு இச்சங்கத்தைத் தொடங்குகின்றன.'' இங்ஙனம் எல்லா நாடுகளும் தாம் ஒப்புக்கொண்ட இவ்வுடன்படிக்கையை நிறைவேற்றியிருந்தால் சங்கம் அழிந்திராது. போரும் எழுந்திராது. அந்தோ, ஐரோப்பாவின் அரசியல் அறம், உடன்படிக்கைகளை "வெறுங் காகிதங்கள்"[1] எனக் கொள்ளுவது! தம் வாக்கை நிறைவேற்றத் தவறும் நாடுகள் இப்படிப்பட்ட கொடிய போர்களுக்கு இரையாவதில் யாதொரு வியப்பும் இல்லை. நிற்க ;

இந்நாடுகள் செய்துகொண்ட உடன்படிக்கைகள் யாவை? சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுடன் போர் தொடுப்பதில்லையென்றும், போரை விளைவிக்கும் சச்சரவுகள் எழுந்தால் அவற்றைச் சங்கத்தின் விசாரணைக்கு விடுவதென்றும், சங்கம் பொதுமையாகத் தீர்க்கும் தீர்ப்பை ஒப்புக் கொள்ளுவதென்றும், இத்தீர்ப்பை ஒப்புக்கொள்ள மறுக்கும் நாட்டுடன் மற்ற நாடுகள் வணிகம் முதலான துறைகளிலுள்ள தொடர்புகளை உடனே அகற்றிப் போருக்குரிய காரணங்களை அழித்து அமைதியை நிறுவவேண்டும் என்றும் தீர்மானித்துக்கொண்ட கருத்துக்களேயாம். இவ்வுடன்படிக்கையின் திட்டங்களில் நாம் காணக்கூடிய குறை ஒன்றுமில்லை. குறையெல்லாம் இவற்றை இந்நாடுகள் கைக்கொள்ள மறுத்ததுதான்! உடன்படிக்கைகள் எல்லாம் பெரும்பாலும் உறுதி மொழிகளோடு நின்றுவிட்டன!

1 Treaties are mere scraps of paper.

இந்நாடுகள் இங்ஙனம் நடந்துகொண்டதன் காரணம், இவை தனியாட்சி நாடுகளாக விளங்குவதேயாகும். தற்கால அரசியல் வழக்கில், தனியாட்சி நாடுகளுக்கு மேற்பட்ட அரசு ஒன்றும் கிடையாது. எனவே, ஒவ்வொரு நாடும் தான் விரும்பியபடியே தன்னுடைய காரியங்களை நடத்திக்கொள்ளும் உரிமையுடன் விளங்குகின்றது. இத்தகைய அரசியல் உரிமைகளுடன் விளங்கும் நாடுகளைச் சர்வதேச சங்கம் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாது. எனவே, எல்லா நாடுகளும் நல் மனம் பொருந்தித் தாமே ஒன்றேரென்று ஒத்துழைத்தாலன்றிச் சங்கம் தனது பணியை ஆற்ற இயலாது. இதனாலேதான் ஐரோப்பிய நாடுகள் தத்தம் தனியாட்சி யுரிமையை நீக்கினலன்றிச் சர்வதேச சங்கம் போன்ற அமைப்புக்களால் எவ்வகைப் பயனும் எழாது எனச் சிலர் எண்ணுகின்றனர்.

மேலும், சங்கம் வேலை தொடங்கியபொழுது எல்லா நாடுகளும் அதன் உறுப்புக்களாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. செர்மனியும் அதன் துணை நாடுகளும் தகுதியற்றவை என விலக்கி வைக்கப்பட்டன! ருசியா பொதுவுடைமைப் புரட்சி[1]யில் ஆழ்ந்திருந்ததால், அதுவும் தள்ளிவைக்கப்பட்டது. தனியாட்சியாளர்[2] கையின் கீழிருந்த மெக்சிக்கோ முதலான நாடுகளும் ஒதுக்கப்பட்டன. இங்ஙனமாக, 1920 சனவரித் திங்களில் சங்கம் தன்பணியைத் தொடங்கியபோது ஏறக்குறைய 30 நாடுகள் சங்கத்துக்கு வெளியே யிருந்தன.

---

1 Communist revolution. 2 Dictators.

இவ்வாறு சங்கத்தைச் சேராது வெளியே நின்ற நாடுகளில் அமெரிக்கக் குடியரசு நாடு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்நாட்டுத்தலைவரான வில்சனே இச்சர்வதேச் சங்கத்தை ஈன்றெடுத்த தந்தையாயிருந்தும் இந்நாட்டு மக்கள் தம் தலைவருடைய குழந்தையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். ஐரோப்பிய அரசியல் செய்திகளில் அமெரிக்கா தலையிடக் கூடாது என்பது மன்ரோசட்டம்[1].

ஆயினும், தொடக்கத்தில், சங்கத்தின் பணி செவ்வனே நடைபெற்றது. ஆண்டுதோறும் பெரும்பாலான நாடுகளில் அமைச்சர்கள் சுவிட்சர்லாந்திலுள்ள செனிவா[2] நகரிற் கூடித் தம் நாடுகளுக்குப் பொதுவான அரசியல், பொருளாதாரம், கல்வி முதலான பல காரியங்களையும் நேரிற் கலந்து, பொதுமையான முடிவுக்கு வந்து அம்முடிவுகளைத் தம் நாட்டு அரசுகளுக்கு அறிவித்து அவ்வரசுகளின் மூலமாக அம்முடிவுகளை நிறைவேற்றி வைக்கும் முறைமை, உலக அரசியலிலே மிகவும் புதுமையாக விளங்கியது. சர்வதேச சங்கத்தின் ஆண்டுக் கூட்டங்கள் கிறித்து பிறந்தநாட் கொண்டாட்டத்தை[3] ஒத்திருந்தன என்று ஓர் ஆசிரியர் கூறுகின்றார்.

மேலும், சங்கத்தின் மேற்பார்வையிற், பல அரிய தொண்டுகளும் ஆற்றப்பட்டுவந்தன. போரிற் சிறைப்பட்ட மக்கள் தம் நாடுகளுக்குத் திரும்பிச் செல்லுவதற்குரிய உதவியெல்லாம் சங்கமே செய்து முடித்தது. துருக்கியிலிருந்து வெளியேற்றப்பட்ட பல்லாயிரக்கணக்கான கிரேக்கர்களுக்கும் ஆர்மீனியர்களுக்கும் ஆதரவு அளித்ததும் இச்சங்கமே.

---

1 Munroe Doctrine. 2 Geneva.
3 Christmas celebrations.

டான்சிங், சார் நிலப் பகுதிகளை ஆட்சி புரிந்து வந்ததும் இச்சங்கமே. மேலும் இச்சங்கத்தின் வாயிலாகத்தான் சீனாவில் நடைபெற்ற அபின் வணிகமும் குறைக்கப்பட்டது. இச்சங்கத்தின் கிளை நிலையமாகிய **தொழிலாளர் காரியாலயமும்**[1] தொழிலாளர் நலனுக்காகப் பல சேவைகளை ஆற்றியுள்ளது. சர்வ தேச சங்கம் அமைத்த **நீதி மன்றமும்**[2] பல நாடுகளுக்குள் எழுந்த சச்சரவுகளைப் பொதுமையாகத் தீர்த்து வைத்துள்ளது. இங்ஙனமாகப் பல துறைகளிலும் சர்வதேச சங்கம் மிக்க பயனளிக்கும் மிகப் பல பணிகளைப் புரிந்துள்ளது.

ஆனால், போரை ஒழிக்கும் முயற்சியில் அது பெரும் பயனொன்றையும் விளைவிக்க முடியாமற் போயிற்று! 1923-ல் இத்தலிக்கும் கிரீசுக்கும் ஒரு போர் எழுந்தது. இத்தாலியர் இப்போரைச் சர்வ தேச சங்கத்தின் விசாரணைக்கு விட மறுத்தனர்! அதனால் அரசியல் தூதுவர்கள்[3] அடங்கிய ஒரு கழகத்தார் கூடி இச்சச்சரவைத் தீர்த்துவைத்தனர். இத்தீர்ப்பைக் கிரீசும் இத்தலியும் ஒப்புக்கொண்டன. இங்ஙனம் இரு நாடுகளும் ஒப்புக்கொண்ட இத்தீர்ப்பைச் சர்வதேச சங்கம் ஆமோதித்தது! சங்கமே போர் எழாதபடி தடுத்துவிட்டது எனச் சங்க அமைச்சர்கள் பெருமையாகக் கூறிக்கொண்டனர்.

ஆனால் 1925-ஆம் ஆண்டில் கிரீசுக்கும் பல்கேரியாவுக்கும் போர் எழுந்தபோது சர்வதேச சங்கம் இரு நாடுகளையும் போரை நிறுத்தச் செய்து, இவற்றின் சச்சரவுகளைப் பொதுமையாகத் தீர்த்து, இவற்

---

1 International Labour Office. 2 Court of International Justice. 3 Ambassadors.

றிடையே அமைதியை நிறுவிற்று. இச்செயல் சங்கத்துக்கு மிக்க பெருமையையும் புகழையும் அளித்தது. ஆனால் இவ்விரு நாடுகளும் சிறு நாடுகளானமையால், சங்கத்தின் வெற்றி பெரிதாகப் பாராட்டப்படுவதற்கிடமில்லை.

அந்தோ! இதற்குள் சர்வதேச சங்கத்தினால் பெரும் பயன் ஒன்றும் விளையாது என்ற எண்ணம் எல்லா நாடுகளுக்குள்ளும் எழுந்தது. ஆதலால் அவை முன்போலத் தனித்தனியே ஒன்றோடொன்று ஒப்பந்தங்கள் செய்துகொள்ளத் தொடங்கின. நாளடைவில் செர்மனியின் வலிமையும் செல்வமும் ஓங்கி வந்தமையால், பிரான்சு, தனக்கு அண்மையிலுள்ள பெல்சியம், போலந்து, செக்கோசிலோவேக்கியா, யூகோசிலோவியா, ருமேனியா முதலான நாடுகளுடன் ஒப்பந்தஞ் செய்தது. பிரான்சுக்கு அஞ்சிய இத்தலி, ஆத்திரியா, அங்கேரி, பல்கேரியா முதலான நாடுகளுடன் ஒப்பந்தஞ் செய்தது. பிரான்சும் அதனுடன் ஒப்பந்தஞ் செய்த நாடுகளும் வெர்சேல்சு உடன்படிக்கையைக் காப்பதற்கும், இத்தலியும் அதனுடன் ஒப்பந்தஞ் செய்த நாடுகளும் அவ்வுடன்படிக்கையை மாற்றுவதற்கும் முயற்சி செய்தன. இங்ஙிலையில் போர் எழுவதைத் தடுப்பது மிகவும் அரிதன்றோ?

மேலும், ஒவ்வொரு நாட்டிலும் போர்க் கருவிகளின் பெருக்கம் மிகுந்தது. போர்க் கருவிகளைக் குறைப்பது சங்கத்தின் சிறப்பான பணியாதலால், இதனை ஆராய்ந்து முடிவு செய்வதற்காக 1925-ஆம் ஆண்டில் வல்லுநர் பலர் அடங்கிய ஒரு கழகம் நிறுவப்பட்டது. இக்கழகத்தார் ஐந்தாண்டுகளாக

முயன்று, "மலையைக் கல்லி எலியைப் பிடித்தாற் போல" எல்லா நாடுகளும் தங்களுடைய கடற்படை தரைப்படை வானப்படை முதலியவற்றிலுள்ள ஆட்களைக் குறைக்கவேண்டும்; போர்க் கருவிப் பெருக்கத்தைக் குறைக்கவேண்டும்; நச்சுப் புகை[1] முதலிய குரூர முறைகளைக் கையாளக் கூடாது; உடன் படிக்கைகளை மீறக்கூடாது என்பன போன்ற வெறும் 'விதிகளை' மட்டும் எடுத்துரைத்தனர்! மேலும், ஒரு நாட்டுப் பாதுகாப்புக்குக் கட்டாயம் ஏற்பட்டால் அந்நாடு இவ்விதிகளை விலக்கிக்கொள்ளலாம்[2] எனவுங் கூறி முடித்தனர்!

என்னே வியப்பான முடிவுகள்! இம்முடிவுகளைச் சீர்தூக்கி, மேலே செய்யவேண்டுவனவற்றை ஆராயும்படியாகச் சர்வதேச சங்கம் 1932-ஆம் ஆண்டில் செனிவா நகரத்தில் போர்க்கருவிகளைக் குறைக்கும் மாநாடு[3] ஒன்றைக் கூட்டிற்று. இதற்குச் சங்க உறுப்பு நாடுகளும், செர்மனியும் அமெரிக்காவும் ருசியாவும் தத்தம் சார்பாளர்களை அனுப்பின.

பல மாதங்களாகப் பல நாடுகளும் பலவாறும் முயன்றும் ஒரு முடிவும் உருவாகவில்லை. போலந்து தன் தரைப்படையைக் குறைக்க வேண்டுமென்று இங்கிலாந்து கூறியபோது இங்கிலாந்து தன் கடற் படையைக் குறைக்கவேண்டுமென்று போலந்து கூறிற்று; அல்லது செர்மனியினால் தான் தாக்கப் படாதபடியாவது இங்கிலாந்தும் பிரான்சும் தனக்கு உதவி செய்யவேண்டுமென்று போலந்து எடுத்துக்

1 Poison Gas. 2 Escape Clause.
3 Disarmament Conference

காட்டிற்று. இங்ஙனமே, ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டுக்கு அஞ்சிப் போர்க் கருவிகளைப் பெருக்கித் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எண்ணினதினால், ஒரு நாடாவது தன்னுடைய போர்க்கருவிகளைக் குறைக்க இணங்கவில்லை.

இதனால், அமெரிக்கக் குடியரசுத் தலைவரான கூவர்[1] என்பவர் 'எல்லா நாடுகளும் தத்தம் எல்லாப் படைகளிலும் மூன்றிலொரு பகுதியைக் குறைத்து விடவேண்டும்' என ஒரு பொதுத் திட்டம் கூறினார். இதை இங்கிலாந்தும் பிரான்சும் ஒப்புக்கொள்ள மறுத்தன. 'வெர்சேல்சு உடன்படிக்கைப்படி மற்ற நாடுகள் போர்க் கருவிகளைக் குறைக்காததனால், தானும் அந்நாடுகளைப்போலவே தன் படைகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டுவதுதான் என்று முடிவு கூறி, இட்லர், மாநாட்டை விட்டு விலகினார். மாநாடு கலைந்தது. எல்லா நாடுகளும் போர்க் கருவிப் பெருக்கத்தை மேலும் மிகுக்கத்தொடங்கின. போர்க் கருவிகளைக் குறைப்பதற்காகக் கூடிய மாநாடு, போர்க் கருவிகளைப் பெருக்குவதற்கான முறையில் முடிந்தது!

இதற்கிடையில் கடற்படைகளைக் குறைப்பதற்காகக் கூடிய வேறொரு மாநாடும் இங்ஙனமே ஒரு முடிவுக்கும் வராமல் கலைந்தது. முதலில் இங்கிலாந்து, அமெரிக்கா, சப்பான் ஆகிய மூன்று நாடுகளும் வாசிங்டன்[2] நகரில் 1927-ஆம் ஆண்டில் ஒரு மாநாடு கூடிப் பத்தாண்டுகளுக் கிடையில் புதிய பெரும் போர்க் கப்பல்களைக்[3] கட்டுவதில்லையென்று ஓர் ஒப்பந்தம் செய்தன. ஆனால் சிறிய போர்க்

1 Hoover. 2 Washington. 3 Capital Ships.

கப்பல்[1]களைக் கட்டுவதிலும் இத்தகைய ஒப்பந்தம் வேண்டுமென்று அமெரிக்கா கூற, இங்கிலாந்து அதற்கு இசைய மறுத்தது. நீர் மூழ்கிக் கப்பல்கள் கட்டுவதைக் குறைக்கும் ஏற்பாட்டைப் பிரான்சு ஏற்றுக்கொள்ள மறுத்தது.

இதனால் 1927-ல் செனிவாவில் வேறொரு கடற் படை மாநாடு கூட்டப்பட்டது. இதில் சிறிய போர்க் கப்பல்கள் கட்டுவதைப்பற்றி அமெரிக்காவும் இங்கி லாந்தும் உடன்பாடான முடிவுக்கு வராமையினால் இம்மாநாடும் கலைந்தது. அதன்பின் 1928-ஆம் ஆண் டில் பிரான்சும், இங்கிலாந்தும் ஒரு தனி ஒப்பந்தம் செய்தன. இவ்வொப்பந்தப்படி, பிரான்சு தனக்கு வேண்டிய அளவு நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டிக் கொள்வதென்றும், இங்கிலாந்து தனக்கு வேண்டிய அளவு சிறிய போர்க்கப்பல்களைக் கட்டிக்கொள்வ தென்றும் முடிவு செய்யப்பட்டது!

இம்முடிவு அமெரிக்காவுக்கு மிகவும் வெறுப்பை உண்டாக்கிற்று. ஆதலால், அது, இங்கிலாந்தைப் போலவே தானும் தனது கப்பற்படையைப் பெருக்க முனைந்தது. இதைக் கண்ட இங்கிலாந்து, "எல்லா நாடுகளும் வேறொரு மாநாடு கூடிக் கப்பற்படை களைக் குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும்," எனக் கேட்டுக்கொண்டது. இம்மாநாடு 1930-ல் லண்ட னிற் கூடியது. இதில் பிரான்சும் இத்தலியும் தங்க ளுக்கு வேண்டிய அளவு நீர்மூழ்கிக் கப்பல்களையும் சிறிய போர்க்கப்பல்களையும் பெருக்கிக்கொள்ளச் சம்மதி கேட்டன. இவ்விரண்டு நாடுகளின் கப்பற்

1 Light Cruisers.

படைகளைக் காட்டிலும் தனது கப்பற் படை பெரிதாக இருக்கவேண்டுமென்பது இங்கிலாந்தின் கோட்பாடானமையால், இவ்வேண்டுகோளுக்கு இங்கிலாந்து இசையவில்லை. இறுதியில், இங்கிலாந்து, அமெரிக்கா, சப்பான் ஆகிய மூன்று நாடுகள் மட்டும் 1937-ஆம் ஆண்டு வரைக்கும் முறையே 5, 5, 3 விழுக்காடு பெரிய போர்க் கப்பல்களைக் கட்டிக் கொள்வதென்னும் முடிவுக்கு வந்தன; ஆனால் வேறெந்த நாடாகிலும் தனக்கு முன்னிருந்ததைவிட மிகுதியான போர்க் கப்பல்களைக் கட்டினால், இந்த மூன்று நாடுகளும் இங்குக் காட்டிய திட்டத்தை மாற்றிக் கொள்ளலாம்[1] என்றும் முடிவு செய்யப் பட்டது!

இங்கிலாந்தைப் போலவும் அமெரிக்காவைப் போலவும் அதே விழுக்காட்டுக்குப்[2] போர்க் கப்பல்களைக் கட்டத் தனக்குச் சம்மதி அளிக்காவிட்டால், தான் இந்த ஒப்பந்தத்தை 1937-க்குப் பின் புதுப்பிக்க முடியாது என்று 1934-ல் சப்பான் அறிவித்தது. பிரான்சும் இத்தலியும் லண்டன் மாநாட்டு ஒப்பந்தத்துக்கு இசையாமையால் அவை தம் கடற்படையை மேலும் மேலும் பெருக்கத் தொடங்கின. இதைக் கண்டு அஞ்சிய இங்கிலாந்து, தன் திட்டத்துக்கு மேற் கடற் படையைப் பெருக்கிற்று. இங்கிலாந்தின் கடற்படை விழுக்காட்டுக்கு அமெரிக்காவும் தனது கடற் படையைப் பெருக்கிற்று. இதைக்கண்ட செர்மனியும் ருசியாவும் தத்தம் கடற் படைகளையும் பெருக்கின! கிணறு வெட்டப் பூதம் புறப் பட்டாற்போலக் கடற் படையைக் குறைக்கச்

---

1 Escalator Clause. 2 Full naval parity.

செய்த முயற்சியின் பயனாக, எல்லா நாடுகளின் கடற்படைகளும் மேலும் மேலும் பெருகி யோங்கின.

இதற்கிடையில், இதற்கு முன் எழுந்திராத ஒரு பெரும் பொருளாதார நெருக்கடி எல்லா நாடுகளையும் பெருந் துயரத்துக்குள் ஆழ்த்திற்று. 1926-ஆம் ஆண்டுமுதல், உணவுப் பொருள்களின் விலை குறையத் தொடங்கிற்று. இதனால், பயிர்த் தொழிலாளர், விளைவுகளை மிகுத்துத் தம் வருவாயை உயர்த்த முயன்றனர். விளைவுகளின் மிகுதியினால் விலைகள் மீண்டும் குறைய நேர்ந்தன. பயிர்த்தொழிலாளிகளின் வருவாய் குறையவே, அவர்கள் இயந்திரத் தொழிற்பொருள்களை முன்போல வாங்க முடியவில்லை. இதனால் செய் பொருள்களின் விலையும் வீழ்ந்தது. செய் பொருள்களைச் செய்வோரின் வருவாய் குறையவே அவர்கள் செலுத்தும் அரசிறையும் குறைந்தது. இறை குறைந்ததினால், அரசுகள் தாம் பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன்களைக் கொடுக்க முடியாமல் உழன்றன. முதலில் ஆத்திரியாவிலுள்ள ஒரு பெரிய பாங்கி[1] நொடித்தது. இப்பாங்கிக்குப் பல செர்மன் பாங்கிகள் கடன் கொடுத்திருந்தமையால் அப்பாங்கிகளும் நொடித்தன. இங்கிலாந்து பாங்கி[2] செர்மன் பாங்கிகளைக் காப்பாற்ற முற்பட்டது. அதனால், அது பிரஞ்சுப் பாங்கி[3]யிற் கடன் வாங்க நேரிட்டது. நேரிடவே, இங்கிலாந்து பாங்கியில் தங்கத்தை இட்டு வைத்திருந்த பிற நாட்டுப் பாங்கிகள் தம் இட்டு வைப்பைத் திரும்பிப்பெற்றன. இங்கிலாந்து பாங்கியிற்சட்டப்படி இருக்கவேண்டிய

1 Credit Anstalt. 2 The Bank of England. 3 Bank of France.

தங்க இருப்புக் குறைந்தது; அதனால் 1931 செப்டம்பர் 21-ல் இங்கிலாந்து தங்கத் திட்டத்தை நீக்க வேண்டியதாயிற்று. அதே மாதத்தில் இங்கிலாந்தைப் பின்பற்றி 20 நாடுகளும், 1933—ஜூலை மாதத்தில் அமெரிக்காவும் தங்கத் திட்டத்தை நீக்கின !*

தங்கத் திட்டம் நீங்கினமையால் உலகப் பொருளாதார நிலை முன்னிலும் கேடாயிற்று. நாட்டு நாணய மாற்றுத் திட்டங்கள் ஒரு நிலை பெருது அடிக்கடி மாறிக்கொண்டு வந்தன. அதனால் உலக வணிகம் பெரிதும் இடர்ப்பட்டது. இக்காரணங்களால், தம் விளை பொருள்களுக்கும் செய் பொருள்களுக்கும் வெளிநாட்டு வணிகத்தையே சார்ந்திருந்த நாடுகளும், கடன் பளுவாலும் பாங்கி நொடிப்பினுலும் பல இழப்புகளுக் குட்பட்டிருந்த செர்மனியும், பெருந் துன்பத்திற்கு ஆளாயின. இந்நேரத்திற்றான் "வெர்சேல்சு உடன்படிக்கையும் குடியாட்சியுமே செர்மனியை அந்நிலைக்குக் கொண்டு வந்தன," என்று கூறினுர் இட்லர். பொருளாதாரக் குழப்பத்தினுல் அலைவாய்த் துரும்புபோல உழன்றுகொண்டு வந்த செர்மன் மக்கள் தம் மீட்புக்கு வேறு வழியைக் காணுது, இட்லரைப் பின்பற்றி, அவரைத்தனியாட்சியாளராக ஒப்புக்கொண்டனர். இது நிற்க.

உலகப் பொருளாதார நிலையிலும் உலக நாணயத் திட்டங்களிலும் எழுந்த குழப்பங்களைப்போக்கச் சர்வதேச சங்கம், 1931-ஆம் ஆண்டு ஜூன் 21-ல் ஒரு மாநாடு கூடிற்று. இதற்கு 62 நாடுகளிலிருந்து

---

* இக்கருத்துக்கள் இவ்வாசிரியருடைய நாணயம் நாணயமாற்று என்னும் இரு நூல்களிலும் விரிவாய் விளக்கப்பட்டுள்ளன.

ஏறக்குறைய 2,000 வல்லுநர்கள் சார்பாளர்களாகக் கூடினர்.

அந்தோ, இம்மாநாடும் ஒரு முடிவுக்கும் வாராமலே, 1933-ம் ஆண்டு ஜூலை 27உ கலைந்தது. வரித் தடைகளை ஒழிக்கவேண்டுமென்று மேற்கு ஐரோப்பிய நாடுகள் எடுத்துக் கூறியபோது, காப்பு வரிகளால் தம் நாட்டுத் தொழில்களை வளர்த்துக் கொண்டு வந்த செக்கோசிலோவேக்கியா, ருமேனியா முதலான நாடுகள் அக்கருத்தை எதிர்த்தன. தம் கடன் பளுவைக் குறைக்க, அல்லது தம் விளை பொருள்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந் நாடுகள் வேண்டியபொழுது, மேற்கு ஐரோப்பிய நாடுகள், அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இதற்கிடையில், முதலில் நாணயமாற்றுத் திட்டங்களை ஒருநிலைப் படுத்தியபின், பிறர் கருத்துக்களை ஆராயலாம் என்று தங்கத் திட்டத்தைக் கைக்கொண்டிருந்த பிரான்சு முதலான நாடுகள் கோரின. இதற்கு இங்கிலாந்தும் அமெரிக்காவும் இணங்கவில்லை. இங்ஙனமாக ஒவ்வொரு நாடும் தனது பொருளாதார நலனையே கருதி, ஒன்றோடொன்று முரண்பட்ட கோட்பாடுகளையே எடுத்துரைத்தமையால் மாநாடு ஒரு முடிவுக்கும் வாராமலே கலைந்துவிட்டது.

இறுதியில், இதன் பயனாக, ஒவ்வொரு நாட்டிலும் பிறநாட்டு இறக்குமதிப் பொருள்களுக்கு விதித்திருந்த தடை வரிகள் பின்னும் மிகுதிப்படுத்தப்பட்டன. ஆங்கிலேயர் தம் நாட்டுக்குள் இறக்குமதியாக்கப்பட்ட பிறநாட்டுப் பொருள்களின்மேல் வரிகளை விதித்ததுமன்றிக், கானடா, ஆத்திரேலியா, இந்தியா முதலான தம் ஆட்சிக்குட்பட்ட எல்லா நாடுகளிலும்

இங்ஙனமே செய்யும்படி ஒட்டாவா ஒப்பந்தம்[1] ஒன்றையும் ஏற்படுத்துவாராயினர். எல்லா நாடுகளிலும் இறக்குமதிகளைத் தடுத்தல், அல்லது அவற்றின் அளவை வரையறுத்தல் எனப் பல முறைகள் கையாளப்பட்டன. வணிகத் தடைகளை ஒழிக்கவேண்டுமென்பது வில்சனுடைய பதினான்கு குறிப்புக்களில் ஒன்று. ஆனால் ஐரோப்பிய நாடுகள் செய்து முடித்ததோ இத்தடைகளைப் பன்மடங்காகப் பெருக்கினமைதான். இதற்கு முன்னரே நாம் மேலே கூறியபடி போர்க் கருவிகளும் மிகுதியாகப் பெருக்கப்பட்டன. இங்கிலேயில், சர்வதேச சங்கம் போரை ஒழிப்பதென்பது முடவன் கொம்புத்தேனை எடுக்க முயன்றதற்கு ஒப்பாயிற்று. எனவே, இரண்டாம் உலகப் போர் தொடங்கியதில் வியப்பொன்றும் இல்லை.

இப்போருக்குக் காரணங்கள் யாவை? நாட்டுணர்ச்சி[2] நாடுகளின் தனியாட்சி[3], வணிகப்போட்டி, ஆட்சிப் போட்டி, வெர்சேல்சு உடன்படிக்கையின் குறைகள், உலகப் பொருளாதாரக் குழப்பம், போர்க் கருவிகளின் பெருக்கம்-இவைபோன்ற பல காரணங்களை நாம் அடுக்கிக்கொண்டு போகலாம். இக்காரணங்களினாலேயே சர்வதேச சங்கமும் முடிவில் நிலைகுலைந்து மாய்ந்தது. இவ்வழிவுக்கு எல்லா வல்லரசுகளுமே பொறுப்பாளர் என்பதில் ஐயமென்னை? இக்கருத்துப் பின்வரும் நிகழ்ச்சிகளாலும் வலியுறுத்தப்படுகின்றது.

---

1 Ottawa Agreement.

2 Nationalism. 3 Sovereignty of States.

1935-ல் ஐரோப்பா



பின்லாந்து
நார்வே
சுவீடன்
டென்மார்க்
அயர்லாந்து
இங்கிலாந்து
ருஷ்யா
சேர்மனி
போலந்து
செக்கோஸ்லோவேகியா
பிரான்சு
ஆஸ்திரியா
அங்கேரி
ருமேனியா
யூகோசிலோவியா
பல்கேரியா
இத்தலி
ஸ்பெயின்
போர்த்துக்கல்
கார்சிகா
சார்டினியா
சிசிலி
துருக்கி
மொரொக்கோ
அல்ஜிரியா
டியூனிசு
மால்டா

1931-ல் சப்பான் மஞ்சூரியா[1]வின்மேற் படையெடுத்தபொழுது இவ்வல்லரசுகள் இப்போரைத் தடுத்திருந்தால் 1935-ல் இத்தலி அபிசீனியாவின் மேற் போர் தொடுத்து அந்நாட்டைக் கைப்பற்றியிருக்க முடியாது. இத்தலியும் சப்பானும் தடுக்கப் பட்டிருந்தால், செர்மனியையும் எளிதில் தடுத்திருக்கலாம். இட்லரின் அரக்க அரசு எழுவதற்குக் காரணங்கள் ஐரோப்பிய நாடுகளுக்குள் கிளறிக்கொண்டிருந்த பகையும், போட்டியும், ஒற்றுமை யின்மையும் என்பதில் ஐயமென்னை? தம் தவறுகளாலும் தந் நலத்தினாலும் போருக்குரிய காரணங்களைப் பெருக்கிப் போரை விளைவித்துக்கொண்டு, "யாம் தீமையை, ஒழிக்கப் போர் புரிகின்றோம்," எனக் கூறுவது முறையோ ?

ஆம்; இட்லரின் அரக்க அரசு உலகுக்குப் பெருங் கேடுகளை விளைவிக்கும் பெருந் தீமையே. 'செர்மானியரே கலப்பில்லாத உயர்ந்த சாதி; அவர்களே உலக முழுவதையும் ஆளவேண்டும்; அவர்களை எதிர்ப்போர் அழிக்கப்படவேண்டும்' என்னுங் கோட்பாடுகளையுடைய நாசிக் கட்சி[2]யினரும், இக்கட்சியின் தலைவரும் பண்டைக்காலத்துச் செங்கிட்கானின் பிறப்புக்கள் எனக் கூறுவது மிகையாகாயாது. இவ் வரக்க அரசை அழிப்பது மக்களின் கடமையே. ஆயினும், நாம் இப்பகுதியில் வலியுறுத்தப் புகுந்த உண்மை, இவ்வரக்க அரசின் எழுச்சிக்கு உரிய காரணங்களை இவ்வைரோப்பிய நாடுகளே பெருக்கிக் கொண்டன என்பதும், போரொழிந்த புதிய உலகை

1 Manchuria. 2 Nazi Party.

உருவாக்குவதற்காகச் சர்வதேச சங்கத்தை அமைத்த இந்நாடுகள் மீண்டும் போரையே விளைவித்திருக்கக் கூடாது என்பதுமேயாம். இவ்விரண்டாம் உலகப் போருக்குப் பின்னரேனும் இவ்வைரோப்பிய நாடுகள் போரை விலக்கி வாழுமோ என்பது இனி நாம் மேலே ஆராயவேண்டிய பொருள்.

---

9. இனிப் போர் ஒழியுமா ?

மக்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அவற்றின் உண்மைகளை அறிவிப்பதே வரலாற்றுக் கலையின் பணி. எதிர்கால நிகழ்ச்சிகளை முன்னறிவிப்பது அக்கலையின் பணியன்று; அங்ஙனம் அறிவிப்பது மக்கள் அறிவுக்குள் அடங்காத செயலும் ஆம்.

ஆயினும் மக்கள் வாழ்க்கையிற் பற்பல போர்கள் ஒழிந்துள்ளமை வெள்ளிடை மலை போல் விளக்கமாகின்றது. அரசர்களால் எழுந்த போர்களும், உள்நாட்டுப் போர்களும், சமயப் போர்களும் ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் ஒழிந்துள்ளன. இஃது வரலாற்றைக் கற்போருக்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும், உலகில் ஐந்திலொரு பகுதியான ஆங்கிலப் பொதுமை நாடுகளிலெல்லாம் அமைதி நிலவுவதும் மிக்க பெருமைக் குரியதேயாம். 'ஆங்கில ஆட்சியின் அமைதி'[1] என்னும் வழக்கு, வரலாற்றின் பழமொழியாக மக்களுள்ள அளவும் விளங்கும் என்பதிலும் ஐயமில்லை.

---

1 Pax-Britannica.

புதிய உலகு எனப்படும் அமெரிக்காக் கண்டம் முழுவதிலும் அமைதி நிலவுவதும் மகிழ்ச்சிக்குரியதே யாகும். அமெரிக்க ஒற்றுமை நாடுகளுக்குள் இனிப் போர் எழாது எனத் துணிந்து கூறலாம். அங்ஙனமே அமெரிக்காவுக்கும் கானடாவுக்கும் போர் எழுவதற்கும் ஒரு காரணமுமில்லை. தென் அமெரிக்கக் குடியரசு நாடுகளுக்குள் ஒரோவமையத்தில் இன்னும் போர்கள் எழுந்துகொண்டிருப்பது உண்மையே ஆயினும் இப்போர்கள் பெரிய அளவிலாவது மற்றை நாடுகளுக்குத் தீங்கிழைக்கும் முறையிலாவது நடைபெறவில்லை. நாளடைவில் இந்நாடுகளெல்லாம் அமெரிக்க ஒற்றுமை நாடுகளுடன் இசைந்து வாழும் எனவும் எதிர்பார்க்கலாம். எனவே, புதிய உலகிலுள்ள எல்லா நாடுகளுக்குள்ளும் நிலையான அமைதி நிலவும் எனத் துணிந்து கூற இடமிருக்கின்றது.

புதிய உலகுக்கும், (சிறப்பாக அமெரிக்க ஒற்றுமை நாடுகளுக்கும்) ஆங்கிலப் பொதுமை நாடுகளுக்கும் போர் எழுவதற்குங் காரணமில்லை. தம் உரிமையைப் பெறுவதற்காக 1773-ல் அமெரிக்கர் ஆங்கிலேயருடன் போர் புரிந்தனர். அதன்பின் ஒருமுறை தம் வணிகத்துக்கு ஆங்கிலேயர் இட்டிருந்த தடைகள் காரணமாகவும் போர் எழுந்தது. ஆனால், அதன்பின், இவ்விரண்டு பேரரசுகளும் ஒன்றோடொன்று ஒத்துழைத்தலையே தம் கோட்பாடாகக் கொண்டுள்ளன. இவ்வரசுகள் ஒத்துழைத்தால் உலக அமைதியை நிறுவுவது அரிதன்று.

கீழ் நாடுகள் பலவற்றிலும் அமைதி நிலவுவதும் குறிப்பிடத் தக்கதே. பண்டைக்காலத்தில் இடைவிடாது ஒன்றோடொன்று போர் புரிந்து வந்த எகுப்து

அசீரியா, மெசொப்பொத்தேமியா (இராக்), பெர்சியா முதலான நாடுகள் இப்பொழுது அமைதியுடன் வாழ்ந்துவருவது மக்கள் வாழ்க்கையிற் போர்கள் குறைந்திருப்பதற்குத் தக்க எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

என்னே! உலகத்திற் பெரும்பாலான பகுதிகளிற் போர்கள் ஒழிந்திருப்பதுமன்றி, இனிப் போர்கள் எழாதிருக்குமென்பதற்கான இயைபுகளும் வரலாற்றுக் கலையிலிருந்து நாம் அறியும் உண்மைகளானால், மக்கள் வாழ்க்கையில் இனிப் போர்கள் ஒழிந்துவிடும் என்று நாம் துணிந்து கூறுவதற்குத் தடையென்ன?

ஆனால் ஒரே ஒரு கண்டத்தில் வாழும் மக்களாற்றான் உலகிற் போர்கள் எழுகின்றன. இவர்களனைவரும் கிறித்தவர்கள். உலக நாகரிகத்தில் தலை சிறந்து விளங்குபவர்கள்; உலகிற் பெரும் பகுதியை ஆட்சி செய்பவர்கள்; எண்ணிறந்த வீரர்களையும் கலைஞர்களையும் அறிஞர்களையும் தோன்றச் செய்தவர்கள்; இவர்களே குடியாட்சியிற் பெருமை பெற்று விளங்குகின்றவர்கள்; வறுமையைத் தம் நாடுகளிலெல்லாம் ஒழித்துள்ளவர்கள்; பற்பல புதிய கலைகளை உலகுக்கு வழங்கியவர்கள்; அரிய பெரிய இயந்திரக் கருவிகளை அமைத்து உலக முழுவதையும் ஒன்றாக இணைத்து, விளங்கச் செய்பவர்கள்; சர்வ தேச சங்கத்தை உருவாக்கியவர்கள்; சுருங்கச் சொல்லின் மக்கள் வரலாற்றில் இதுவரையில் தோன்றியிராத மிகப் பெரிய நாகரிகத்தை வளர்த்தவர்கள்; மண்ணுலகையே விண்ணுலகமாக மாற்ற வல்ல ஆற்றல் வாய்ந்தவர்கள்; அந்தோ, இம்மக்கள் ஒருவரோடொருவர் போர்

புரிந்து, தாம் வாழும் கண்டத்தைப் 'பாதாள வுலகம் போலாக்கி, உலகிலுள்ள மற்ற மக்களையும் எண்ணி லாத் துன்பங்களுள் ஆழ்த்தி வருவது எவ்வளவு இரங்குதற்குரியதாயிருக்கின்றது! இம்மக்கள் போரை ஒழித்தால், உலகிற் போர் ஒழிவது உறுதி.

இவ்வைரோப்பிய நாடுகளின் பெருமையையும், இவை மக்களுடைய நாகரிகத்துக்குச் செய்துள்ள தொண்டுகளையும் ஒவ்வொன்றாய் விவரித்தால் இதைப் போற் பல நூல்கள் எழுதலாம். 'பார்லிமெந்து' அரசியல் முறை[1]யையும் இயந்திரத் தொழில் முறை களையும் உலகுக்கு அளித்த இங்கிலாந்தும்; ஒற்றுமை நாட்டு ஆட்சி முறை[2]யையும் ஓவியக்கலையையும் மக் களுக்கு வழங்கிய ஆலந்தும்; உரிமை, பொதுமை, ஒரு பிறப்பு என்னும் உயரிய கோட்பாடுகளை அரசியல் உலகில் நிறுவிய பிரான்சும்; கலவையியல் (இரசாய னம்) முதலான கலைகளில் அரும் பெரும் உண்மை களை ஆராய்ந்து வெளியிட்ட செர்மனியும்; கூட்டுறவு முறையினாற் பயிர்த் தொழிலின் பயனைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டிய டென்மார்க்கும்; இங்ஙனமாக, ஒவ்வொரு துறையிலும் எண்ணிறந்த தொண்டுகளை ஆற்றியுள்ள பிற ஐரோப்பிய நாடுகளும், போரினால் தம் நாகரிகத்தை அழித்து மறைந்தொழியுமாயின் உலகுக்கு அது பேரிழப்பான நிகழ்ச்சியே யென்பதி லும் ஐயமுண்டோ? இத்துணைத் தொண்டுகளை ஆற்றி இத்துணைப் பெருமைகளை யெய்திய இந்நாடு கள், இங்ஙனம் அழிவுறும் என நாம் எண்ணுவதும் வரலாற்றின் உண்மைக்கு இயல்பாக இல்லை. ஏனெ

1 Parliamentary system of Government.
2 Federal form of Government.

னில் போரை ஒழித்து வாழவேண்டும் என்ற உயரிய கோட்பாட்டைத் தம் குறிக்கோளாகக் கொண்டதனு னல்லவோ இவை சர்வதேச சங்கத்தை நிறுவின? இச்சங்கத்தை நிறுவிய இவ்வைரோப்பிய மக்கள் அழிந்தால், மக்கட் குலமே அழிந்து கெடும் எனவுங் கூறலாமன்றோ?

நாம் இங்குக் கூறியவை இக்காலத்திய வரலாற்று நிகழ்ச்சிகளையே ஆதாரமாகக் கொண்டவை. பண்டைக் காலத்திற் பெருஞ் சிறப்பு வாய்ந்து விளங்கிய எகுபது, பாபிலோன், கிரீசு, உரோம் முதலான நாடுகளின் நாகரிகம் கெட்டழிந்தது உண்மையே. அதுபோல ஐரோப்பிய நாகரிகமும் அதிலுள்ள குறைபாடுகளாற் கெட்டழியும்; முன்னம் அழிந்துபோன கிரேக்க உரோம நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு, அதினுஞ் சிறப்புவாய்ந்த ஐரோப்பிய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு அதினுஞ் சிறப்பு வாய்ந்த வேறொரு புதிய நாகரிகம் தோன்றலாம் எனக் கூறுவாரும் உண்டு. இஃது எவ்வாறாயினும் ஆகுக. மக்களின் எதிர்கால வரலாறு இன்னின்னவாறே நிகழும் எனத் திட்டமாகத் துணிந்து கூறுதல் கிடையாது. ஆயினும், ஐரோப்பிய மக்கள் முயன்றால் போரை ஒழித்து நாகரிகத்தை நிலைபெறச் செய்யலாம் என்பது இப்பகுதியில் நாம் வலியுறுத்தும் உண்மை.

நாம் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் வாழ்க்கையைப்பற்றி வரலாற்றுக் கலை அறிவிக்கும் உண்மைகளே. இவ்வுண்மைகள் யாவை? ‘இவ்வுலகம் மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையின் முடிவு இன்பம்; துன்பம் அன்று’ என்பனவே.

மக்கள் இன்புற்று வாழ்ந்து, இவ்வுலகத்தின் இயற்கைச் செல்வங்களை நுகரவேண்டுமானால், அவர்கள் பகுத்தறிவு படைத்து விளங்கவேண்டும். இவ்வறிவே மக்களையும் மற்றைப் படைப்புக்களையும் வேறாக்கிக் காட்டுவது. ஆயினும், இவ்வறிவே மக்களைத் துன்பத்தில் ஆழ்த்துவதுமாகவும் விளங்குகின்றது! எனவே, அறிவாற்றலால் மக்கள் தம் வாழ்க்கையை இன்புறவுஞ் செய்யலாம்; துன்புறவுஞ் செய்யலாம். எடுத்துக்காட்டாகத் தற்கால இயந்திரக் கருவிகளைக் கொண்டு மாளிகைகளை எழுப்பலாம்; பாலங்களைக் கட்டலாம்; கடல்களைக் கடக்கலாம்; வானத்திற் பறக்கலாம்; ஆயினும் இக்கருவிகளின் உதவியினாலேயே செய்யப்படும் வெடிகுண்டுகளைக் கொண்டு நாம் மேற்கூறிய அருஞ்செயல்களையெல்லாம் ஒரு நொடியில் அழித்தும்விடலாம்! வாழ்க்கையை இன்புறச் செய்யும் செயல்களுக்கும் துன்புறச் செய்யும் செயல்களுக்கும் காரணர் மக்களே; கடவுள் அல்லர்.

செங்கிட்கானையும் இட்லரையும் படைத்தவர் கடவுளே. ஆயினும், இவர்களுடைய தீச்செயல்களுக்குக் காரணர், இவர்களும், அவ்வக்காலத்திலேயே இவர்களுடைய எழுச்சியைத் தடுக்காது விட்ட மற்ற மக்களுமேயன்றிக் கடவுள் அல்லர். இத்தகைய அரக்க அரசர்கள் எழுவதற்குரிய காரணங்களை மக்கள் பெருக்கிக்கொண்டும், அல்லது அவர்கள் எழுங்காலத்தில் அவர்களைத் தடுக்காமலும் இருந்துவிட்டுப், பின்பு, 'செங்கிட்கான், இட்லர் போன்ற விலங்குகளைக் கடவுள் ஏன் படைத்தார்?' என்று வினவுவது எப்படிப் பொருந்தும்?

நாகரிகத்தாற் போரை அழிக்கவேண்டும். அல்லது போர் நாகரிகத்தை அழித்துவிடும். 22 போரை எழச் செய்வதும் போரைப் புரிவதும் மக்களே. ஆதலால், போரை ஒழித்து அமைதியை நிறுவுவதும் அவர்களே யாவர். 23 இதனுற்றான் ஐரோப்பிய மக்கள் முயன்றால், அவர்கள் போரை ஒழித்துவிடக் கூடும் என்று நாம் துணிந்து கூறுகின்றோம்.

ஆயினும் ஐரோப்பாவிற் போரை ஒழிப்பது அவ்வளவு எளிதான காரியமன்று. எளிதான காரியமாக இருந்தால் அங்குப் போர்கள் எழுந்திராவன்றோ! பத்தாண்டுகளுக்கு ஒரு முறை ஐரோப்பாவிற்போர் எழுவது கட்டாயம்' என்பது ஒரு செர்மன் அரசரின் கூற்று. 24 இங்ஙனம் போர் எழுவதற்குக் காரணங்கள் யாவை?

ஐரோப்பியப் போர்களுக்கு அடிப்படைக் காரணம் நாட்டுணர்ச்சியே.[1] குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் ஒரு கூட்டத்தவர் அப்பகுதியைத் 'தம் நாடு; தம் தாய்நாடு' என்று போற்றுகின்றனர். இது நாட்டுணர்ச்சியின் இயல்பு. பிறநாடுகளைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. சில நேரங்களில் சிலர்க்கு இவ்வுணர்ச்சி பிற நாடுகளைப் பகைக்கவும் இடந் தருகின்றது. நாட்டுணர்ச்சி ஐரோப்பாவின் நோய்" என்று அறிஞர் ஒருவர் எடுத்துக்காட்டுகின்றார். அந்தோ, இவ்வுணர்ச்சி மிகுதியினாலன்றோ, ஒரே நிறமும், ஒரே சமயமும், ஒரே நாகரிகமும் உடைய செர்மானியரும் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் ஒருவரையொருவர் பகைத்து ஒருவரோடொருவர் போர் புரிகின்றனர்?

1 Nationalism.

பின்லாந்தியர், எத்தோனியர்,கிரோட்டியர்[1], ருமேனியர் அங்கேரியர் போன்ற சிறு கூட்டத்தவர் மிகப் பலரும் ஐரோப்பாவில் வாழ்ந்து வருவதனுல், ஐரோப்பாவின் நாட்டுணர்ச்சி நோய் நம் நாட்டின் வகுப்புப்[2] பிரிவுணர்ச்சிபோல மக்களின் ஒருமையைக் கெடுத்துப் போர்களை விளைவிக்கிறது.

ஐரோப்பியரின் நாட்டுணர்ச்சியானது குலவுணர்ச்சி[3]யையும் எழுப்பியிருக்கிறது. இவ்வுணர்ச்சியைவளர்த்தவர்கள் செர்மானியரே.'செர்மானியரே உயர் குலத்தவர்' என்றும், 'மற்ற மக்களெல்லோரும் இழி குலத்தவ' ரென்றும், ஆதலின் 'செர்மானியரே ஆளப் பிறந்தவர்கள்; ஏனையோர் அவர்களுக்கு உழைக்கப் பிறந்தவர்கள்' என்றும் அவர்கள் பறை சாற்றி வருகின்றனர். அந்தோ, இவ்வுணர்ச்சி நீங்கினலன்றே ஐரோப்பாவில் நிலையான அமைதியை நாம் எதிர் பார்க்கக்கூடும்? இது நிற்க.

நாட்டுணர்ச்சியின் நச்சுக் கொடுமைக்கு மற்றுமொரு காரணம், ஒவ்வொரு நாடும் தனித்தனி ஆட்சியுடையதாக விளங்குவது. தனி ஆட்சியை யுடைய ஒவ்வொரு நாடும் தன் தன் நாட்டின் எல்லையை விரிக்கவும், வணிகத்தைப் பெருக்கவும், பிற நாடுகளைக் கவரவும் முயலுகின்றது. எனவே நாட்டுணர்ச்சிக்கு ஆணிவேராகவுள்ள தனியாட்சி யுரிமையை நீக்கி, எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒற்றுமை அரசை[4] நிறுவுவதே போரை ஒழிப்பதற்கு முதல் வழி.

மேலும், ஐரோப்பாவின் போர்களுக்குக் காரணமாக விளங்கும் வெளிநாட்டுக் காரணங்களையும் நீக்க

1 Croates. 2 Caste. 3 Racialism. 4 Federation.

வேண்டும். ஐரோப்பாக் கண்டம் மக்கட் பெருக்கு நிறைந்தது; இயந்திரத் தொழில்கள் மிகுந்ததும் ஆம். எனவே, ஐரோப்பிய நாடுகள் உணவுப்பொருள்களுக்காகவும் மூலப்பொருள்களுக்காகவும் தம் செய் பொருள்களை விற்பதற்காகவும் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் ஆட்சி நாடுகளைப் பெற்றுள்ளன. இவற்றில் எட்டு நாடுகள், உலகத்திலுள்ள மூன்றில் இரண்டு பகுதிகளை ஆட்சி செய்கின்றன. ஏனைய அறுபது நாடுகளுக்கு எஞ்சிய மூன்றில் ஒரு பகுதியே கிடைத்துள்ளது. இந்த ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் வரை உலகத்தில் எங்ஙனம் அமைதி நிலவும்? இந்த ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பது எங்ஙனம்?

இப்பொழுது ஆட்சி நாடுகளாக விளங்கும் இந்தியா முதலான எல்லா நாடுகளுக்கும் முழுக் குடியாட்சி யுரிமையும் தனியாட்சி யுரிமையும் வழங்க வேண்டும். ஆயினும் இந்நாடுகளின் உள்நாட்டு அமைதி,[1] வெளிநாட்டுப் பாதுகாப்பு,[2] பொருளாதாரப் பெருக்கம் முதலான காரியங்களைப் பத்தாண்டுகளுக்கோ இருபதாண்டுகளுக்கோ உலக ஒற்றுமை அரசின் மேற்பார்வையில் விட்டு வைக்கலாம். இம் மேற்பார்வை அமைப்பில் அவ்வவ் நாடுகளின்சார்பாளர்களுக்கும் இடம் அளிக்கவேண்டும்.

இத்திட்டத்தின்படி தனித்தனித் தொகுதியாக விளங்கத் தகுதி வாய்ந்தஒவ்வொருமக்கட் கூட்டமும் குறிக்கப்பட்ட ஒவ்வொரு நிலப்பகுதியிற் குடியாட்சியும் தனியாட்சியும் பெற்று விளங்கும்; அதனுடன், இவ்வெல்லா மக்கட் கூட்டங்களும் தம் எல்லாருக்கும் பொதுவான காரியங்களை நடத்திக்கொள்ளத்

1 Internal order. 2 External Defence.

தக்க ஓர் உலக ஒற்றுமை அரசின்[1] கீழ் வாழும். இவ் வரசின்கீழ் எல்லா நாடுகளுக்கும் சம வணிக உரிமை கள் வழங்கப்படும். ஒரேவகையான நாணயத் திட்ட மும் நிலைபெறும்.

நாம் இங்கு எடுத்துக் காட்டிய உலக ஒற்றுமை அரசு கனவா, நினைவா? ஐரோப்பிய நாடுகள் தத்தம் தனியாட்சி யுரிமைகளை நீக்குமா? ஒற்றுமை அரசை விரும்புமா? அதனை அமைப்பது எளிதா? இப் பொழுது நடைபெறும் இவ்விரண்டாம் உலகப் போருக்குப்பின், இத்தலி, செர்மனி ஆகிய இவ்விரு வல்லரசுகளும் அழிக்கப்பட்டு இவற்றை ஐரோப்பிய ஒற்றுமை அரசுக்குள் அடக்கி வைத்துக்கொண்டா லும், ருசியா இதிற் சேருமா? ருசியா, சப்பான், அமெரிக்கா ஆகிய இம்மூன்று வல்லரசுகளுக்கும் இவ் வமைப்பில் இடமுண்டா? என்பனபோன்ற மிகப் பல இடைஞ்சலான கேள்விகள் எழுகின்றன. ஐரோப் பிய ஒற்றுமை அரசு நினைவாக முடியினும், இங்கி லாந்து, பிரான்சு, ஆலந்து, இத்தலி முதலான நாடுகள் தம் ஆட்சி நாடுகளுக்கெல்லாம் தனியாட்சி யுரிமை களை வழங்குமா? ஆட்சிப் போட்டியும், வணிகப் போட்டியும் ஒழியாவிட்டால் போர்கள் எப்படி ஒழி யும்? அந்தோ! இங்ஙனம் ஆராயுங்கால் மக்கள் உள்ளளவும் போர் ஒழியாது போலும் என்னும் ஐய உணர்ச்சி மேலிடுகின்றது.

போர் நிகழும் பொழுது இனிப் போரைஒழித்து விடவேண்டும் என அறிஞர்கள் பலர் கூறி வரு கின்றனர். ஆனால் போரை முடித்து அமைதி உடன் படிக்கைகளை எழுதும்போது, வெற்றி பெற்ற நாடு

---

1 World Federation.

களின் அமைச்சர்களும் அரசியல் வல்லுநர்களும் பொதுமக்களும் தோற்ற நாடுகளின் அரசைச் சிதைத்து அவற்றின் நிலத்தையும் ஆட்சி நாடுகளை யும் தமக்குட் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர். எல்லா நாடுகளும் ஒற்றுமை அரசை விரும்பினாலும் அதை அவை அமைக்கும் முறையில் அவற்றுட் பற்பல கருத்து வேறுபாடுகள் எழும். இறுதியிற் பல குறை பாடுகளுள்ள ஒரு போலி அமைப்பே வெளிப்படும். அந்தோ, குறையற்ற ஒற்றுமை அரசை ஐரோப்பிய நாடுகள் அமைப்பினும், அவை தம் ஆட்சி நாடுகளுக் குக் குடியாட்சி யுரிமையையும் தனியாட்சி யுரிமை யையும் வழங்க முன் வாரா. எனவே, முடிவாக ஆராய்ந்தால் ஐரோப்பிய மக்கள் தம் பகையையும் தன்னலத்தையும் ஒழித்துப் பரந்த நோக்கத்துடன் உலக அமைதியை நிறுவ முயன்றாலன்றிப் போர் ஒழிந்துவிடும் என எதிர்பார்ப்பதற்கு இடமில்லை தான். ஆயினும், போரை ஒழிக்கும் இப்பெருமுயற் சியில் ஒப்பற்ற சேவை ஆற்றத்தக்க நாடுகள் இங்கி லாந்தும் ஆங்கிலப் பொதுமை நாடுகளுமாகும். இப் பெருஞ் சேவையில் இங்கிலாந்து ஈடுபடுமானால், அமெரிக்காவும் ருசியாவும் ஒத்துழைப்பதற்கு இட முண்டாகலாம்.

குறிப்புக்களும் மேற்கோள்களும்

பக்கம் எண்

1. [1] " War is a fundamental law of development.... This struggle, in its apparent cruelty, brings about a selection eliminating the weak and the unwholesome" *Bernhardi*, amplifying Darwin's theory of evolution, quoted in **Belief and Action**, by Viscount Samuel, Pelican Books, p. 184.

1. [2] "Humanitarianism is a compound of stupidity and cowardice......in constant struggle mankind becomes great. In eternal peace it must perish."

1. [3] " Almost without exception, the most civilised state is the most aggressive". *Fitchte.*

1. [4] " Fascism does not believe in the possibility or the utility of perpetual peace."

1. [5] " Any form of pacifism is hopeless, and becomes futile bigotry." Quoted in **19th Century and After**, July, 1938.

2. [6] A Short History of the World (Pelican Books, p. 35).

9. [7] War begot the King.

11. [8] Statistics will prove anything.

" [9] Athens—the eye of Greece.

14. [10] After me the deluge.

15. [11] **The Life of Napoleon** by Holland Rose p. 569.

" [12] At the end of the war, there will be no longer the victors and the vanquished—but only those who have survived and those who have been totally exterminated.

49. [13] Go, tell to Sparta, thou that passest by.
That here obedient to her words we lie.

50. [14] Sire, Remember the Athenians.

57. [15] No taxation without representation.

57. [16] **History of England** by G. M. Trevelyan p. 551

64. [17] "Like a meteor in the sky he came and went and left little of himself behind him except a memory." Jawaharlal Nehru—**Glimpses of World History** p. 49.

66. [18] Ibid, Chapter, 17.

72. [19] "My mistress. Power is my mistress. The conquest of that mistress has cost me so much that I will allow no one to rob me of her, or to share her with me!" Quoted by Nehru, p. 387.

74. [20] "There are only two powers in the world: the spirit and the sword. In the long run, the sword will always be conquered by the spirit." Quoted by Nehru, p. 391.

82. [21] **History of England,** by G. M. Trevelyan, p. 351.

83. [22] "Either war will destroy civilisation or civilisation must end war."

,, [23] "Since man makes war, he can also make wars to cease." Norman Angell, **The Great Illusion**, p. 325.

,, [24] Frederick the Great.

அருஞ்சொற் பொருள்

எண்—பக்கவெண்

2. (பாட்டு) ஒருவனை – ஓர் அரசனை; அடுதலும்-கொல்லுதலும்; தொலைதலும் – தோற்றலும்; புதுவது - புதிய நிகழ்ச்சி; இவ்வுலகத்தியற்கை-இவ் வுலகத்தின் இயல்பு.

2. புறநானூறு – சங்க இலக்கியங்களில் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. புறப்பொருள் இலக்கியம்.

3. பொருது-போரிட்டு. நிறுவினர் - நிலை நிறுத்தினர். இறுதியாக - கடைசியாக.

6. ஒன்றித்து – ஒருமைப் பட்டு. கவரும் நாடுகள் - வெளவும் நாடுகள்.

7. மிகைபட-அளவுக்கு மேற் பட.

8. எஞ்சி நின்ற - மிகுந்து நின்ற. இழுக்கு - குற்றம். காஞ்சித் திணை–உலக நிலையாமை பற்றிய ஒழுக்கம்.

8. தொல்காப்பியர் - 'தொல்காப்பியம்' என்னும் முழுமுதல் தமிழ் இலக்கணம் வகுத்தவர். அதில் மக்கள் வாழ்க்கை யிலக்கணமும் இருக்கிறது.

8. (பாட்டு) நால் நால் திசையும் - பல திசைகளிலும். பிணம் - போரில் அழிந்த பிணம். பிறங்க - எங்குஞ் சிதர்ந்து விளங்கித் தெரிய. யானை - வெட்டப்பட்ட யானையின் உடம்புகள். அடுக்குபு - ஒவ்வோரிடமாய் அடுக்கப்பட்டு. ஏற்றிக் கிடந்த - ஒன்றின்மேல் ஒன்று ஏற்றப்பட்டு உயரமாய்க் கிடந்தன. இடித்து - பேரொலியாய் முதலில் இடித்து. உரறி - குமுறலொலியாய்ப் பின்பு முழங்கி. அம்கண் விசும்பின் - இடமகன்ற அழகிய வானத்தில். உரும் - இடி. எறிந்து - வீசி. பெருமலைத் தூறு - பெரியமலையின் சிறு பகுதிகள். எறிந்து அற்று - எங்கும் வீசி யெறியப்பட்ட தன்மையை ஒக்கும். இடியேறுண்ட மலைப்பகுதிகள் சிதறுண்டு எறியப்பட்டமைபோலப் போர்க்களத்திற் பிணங்கள் சிதறியுங் குவிந்துங் காணப்பட்டன.

8. களவழிப் பாட்டு - சங்க இலக்கியங்களுள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. போர்க்களத்தைப் பற்றிப் பாடுவது. நாற்பது பாடல்களால் ஆனமையின் இந்நூல் களவழி நாற்பது எனவுங் கூறப்படும். இதன் ஆசிரியர் பொய்கையார்.

8. உயர்வெய்துவர் - உயர்வடைவர். எத்துணை - எவ்வள[வு].

9. குழுவினராய் - கூட்டத்தினராய்.

15. கூற்று - சொல். வெள்ளிடை - வெட்ட வெளியிலுள்ள.

16. (பாட்டு) மடங்கஎறிந்து - புரளும்படி நிலைபெயர்த்து; மலை உருட்டும் நீர்போல் - மலைகளை உருட்டிக் கொண்டு ஓடுகின்ற பெரு வெள்ளம்போல்; தடம் கொண்ட - பரந்த; ஒள் குருதி - நிறமான இரத்த வெள்ளம்; கொல் களிறு - போரில் கொல்லப்பட்ட யானைகளை; ஈர்க்கும் - இழுத்துச் செல்லும்.

17. (பாட்டு) மடங்கா - பின்வாங்குதலில்லாத! மறம் - வீரமும்; மொய்ம்பின் - வலிமையினையும் உடைய; செங்கண் சினம் - சிவந்த கண்ணையும் கோபத்தையும் பொருந்திய; மால் - பெரியோனான அரசன். அடங்காரை - தனக்கு அடங்காத பகைவரை. அட்ட - போர் செய்து கொன்ற; களத்து - போர்க்களத்தில்.

17. நிலவக் கூடிய - விளங்கக் கூடிய.

19. அறவே - அடியோடு.

20. காணி - நிலம், ஆணையின்றி—உத்தரவின்றி.

30. பிட்சுக்கள்-புத்தமத சன்னியாசிகள்.

30. திருஞானசம்பந்தர்-சைவ சமயாசிரியர் நால்வருள் ஒருவர். அவர்சிவபிரானைப் போற்றிப்பாடிய பாடல்களின்தொகுதிக்குத் ‘தேவாரம்’ என்று பெயர்;

30. (பாட்டு) நீற்று மேனியர்-திருநீறு பூசிய உடம்பினையுடைய சிவனடியார். காற்றுக் கொள்ளவும்-காற்றுப் படவும். அமணரை-சமண சமயத்தவரில் தகாதவரை. தேற்றி-தெளிவு செய்யும் பொருட்டு. திருவுள்ளமே-தேவரீர்க்குத் திருவுள்ள மூண்டோ? ஆற்ற - மிகவும். அரக்கற்கும் - இராவணனுக்கும்; வான் அருளினாய் - வான் உதவினாய். தென் ஆலவாயில் - தென் மதுரையில்; உறையும் - எழுந்தருளியிருக்கும். ஆதியே - எல்லாவற்றிற்கும் முதல்வனாயுள்ள சிவபெருமானே.

31. ஓரே வமையம் — ஒவ்வொருநேரத்தில்,சிலைகள்-திருவுருவங்கள். சிலுவை - கிறித்துமதக் குறி.

34. தப்பறைகள் - தவறான போக்குகள்.

37. குஞ்சரம் - யானை; ஊர்ந்தோர் - ஏறிச் சென்றவர்; நடைமெலிந்து — நடை தளர்ந்து; நண்ணினும் — அடைந்தாலும்.

40. பாலைநிலம்-வெறு வெளி, (பாட்டு) பகலென்றும் இரவென்றும எண்ணாமல், பகைவர் ஊரைக் கொளுத்துகின்ற வெளிச்சத்தில், அங்குள்ளவர்கள் அழுது தம் சுற்றத்தாரைக் கூவி அழைக்கின்ற ஆரவாரத்தினிடையே நீ அக்கொள்ளையை விரும்புகின்றாயாதலால், அந்த இடங்களில் நல்ல பொருள்களே இல்லாதன வாகின்றன என்பது உரை. எல் — பகல். எண்ணாய் — எண்ணாமல். விளி —அழைத்தலையுடைய, கம்பலை - ஆரவார ஒலி. மேவலை - விரும்புகின்றனை. நல்ல—நல்ல பொருள்கள். இல்லை — இல்லாதன.

40. புறப்பாட்டு என்பது, புறநானூறு.

41. (பாட்டு) என்ப — என்பர். ஆர் அமர் - பொறுத்தற்கரிய போரில். அவர் - அவரை.

42. (பாட்டு) மன்பதை-மக்கள் தொகுதியை. நீள்குடி - பெரிய அரசர் குடியில், தென்புலம்-பாண்டியநாடு, காவலின் ஒரீஇ — காப்பதிலிருந்து நீங்கி. மாறி யான் பிறக்க — யான் மாறித் தாழ்ந்த இடத்தில் பிறப்பேனாக. பிறக்க ஏ - பிறக்கே; ஏ — அசை.

43. கேடுபாடு – கெடுதியும் ஆக்கமும்.

46. பொறிக்கப்பட்ட – எழு தப்பட்ட.

49. (பாட்டு) மக்காள்-மனிதர்களே! பகர்வீர் – சொல்லுவீர்; பணியை-கடமையை. படுத்தோம் – இறந்தோம்.

50. ஆற்றிற்று – செய்தது. சூள் - சபதம்.

73. சூறையாடினன் - கொள்ளைகொண்டான். தலையிறக்கம் – மானக் குறைவு.

75. (பாட்டு) ஆர–மனநிறைவு கொள்ள ; பழங்கண் - பழைய கண்ணோட்டம். நகைவர் - நண்பர். சிதறி - தாராளமாகக் கொடுத்து. ஆன்று – அறிவு அகன்று; அவிந்து - அறியாமை கெட்டு; அடங்கிய - மெய் யுணர்விற் படிந்த. செயிர் தீர் – குற்றம்நீங்கிய; செம்மால் – தலைவனே.

75. பதிற்றுப் பத்து - சங்க இலக்கியங்களில் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. சேர அரசர் வீரங்களைக் கூறுவது.

75. (பாட்டு) வை தூறு-வைக் கோற் போர்.

75. திருக்குறள் - சங்க இலக்கியங்களில் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. சிறந்த அறநூல். திருவள்ளுவர் அருளியது.

80. சீர் தூக்கும்-அளவு மதிப் பிடும்.

86. ஞாயிறு - சூரியன்.

92. (பாட்டு) துணிந்து - வெட்டுண்டு; சிலைத்தோள் – கல் போன்ற தோள்; மறவர் - வீரர். உடல்பொறை அடுக்கத்து – போரில் இறந்த பாரமான உடல்களின் குவியலில். எறிபிணம் – மேலு மேலும் வெட்டுண்ட பிணங்கள்; குறை உடல் கவந்தம் முன்னே வெட்டுண்ட 'கவந்தம்' எனப்படும் குறையுடல்கள்; பறைக் கண் பேய்மகள் பாணிக்கு-போர்ப் பறைகளின் கண் போன்ற கண்களையுடைய பேய் மகளின் தாளத்துக் கேற்றபடி. பிணம் சுமந்து ஒழுகிய-பிணத்தில் நிறைந் திருந்துஒழுகிய; நிணம்படு குருதியில்-தசை குழைந்த இரத்த வெள்ளத்தில்; கணம் கொள் பேய்மகள்-கூட்டங் கொண்ட பெண் பேய்; கதுப்பு இருத்து ஆட - மயிரை விரித்துக் கூத்தாட.

92. சிலப்பதிகாரம் - ஐம் பெருங் காப்பியங்களுள் ஒன்று. இளங்கோவடிகள் அருளியது.

93. விழுக்காடு-வீதம். பொருளீட்டம் - பொருள் வருவாய்.

119. கல்வி - தோண்டி.

PORUM

MAKKAL VARALARUM

BY

Mr. J. S. PONNIAH, M.A.,

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA

:: WORKS PUBLISHING SOCIETY ::

:: TINNEVELLY, LTD. ::

TIRUNELVELI & MADRAS.

Price Rs. 1-4.